31

# ஆவிக்குரிய யுத்தம் குறித்த நவீன கட்டுக்கதைகள், பகுதி II

சாத்தான் மற்றும் ஆவிக்குரிய யுத்தத்தைக் குறித்த பிழையான போதனைகளைக் குறித்து நாம் இந்த அத்தியாயத்தில் தொடர்ந்து பார்ப்போம். இதன் இறுதியில் ஒவ்வொரு விசுவாசியும் ஈடுபட வேண்டிய ஆவிக்குரிய யுத்தத்தைக் குறித்து வேதவசனங்கள் என்ன சொல்லுகின்றன என்பதையும் நாம் பார்ப்போம்.

### கட்டுக்கதை # 5: ''ஆவிக்குரிய யுத்தத்தின்மூலமாக நம்மால் வானமண்டலத்திலுள்ள பிசாசின் கோட்டைகளைத் தகர்க்க முடியும்.''

வேதாகமத்தின் அடிப்படையில் பார்க்கும்போது, சாத்தான் பூமியின் வளிமண்டலத்தில் தீய ஆவிகளின் ராஜ்யத்தை ஆளுகை செய்து வருகிறான் என்பதிலும், அவை இருளின் ராஜ்யத்தை ஆளுகை செய்வதில் அவனுக்கு உதவிவருகின்றன என்பதிலும் எந்தவித ஐயமும் இல்லை. இந்தத் தீய ஆவிகள் குறிப்பிட்ட பூகோளப் பகுதிகளை ஆளுகை செய்துவருகின்றன என்பதற்கும் வேதாகம ஆதாரம் இருக்கிறது [பார்க்க, தானி. 10:13, 20–21; மாற்கு 5:9–10]. எனவே வேதாகம அடிப்படையில் கிறிஸ்தவர்கள் மற்றவர்களிலிருந்து பிசாசு களை விரட்டும் அதிகாரத்தையும், பிசாசை எதிர்த்து நிற்க வேண்டிய பொறுப்பையும் பெற்றிருக்கிறார்கள் [பார்க்க, மாற்கு 16:17; யாக். 4:7; 1 பேதுரு 5:8–9]. ஆனால் பட்டணங்களுக்கு மேலாகக் கிறிஸ்தவர்களால் தீய ஆவிகளை இழுத்துப்போட முடியுமா? அவர்களால் அப்படிச் செய்ய முடியாது, அப்படிச் செய்ய முயலுவது நேரத்தை வீணாக்குவதாக இருக்கும்.

நம்மால் மக்களைவிட்டுப் பிசாசுகளை விரட்ட முடியும் என்பதற்காகப் பட்டணங்களுக்கு மேலாகத் தீய ஆவிகளை இழுத்துப்

போட முடியும் என்று அனுமானிக்கக் கூடாது. சுவிசேஷங்களிலும் நடபடிகளின் புத்தகத்திலும் மக்களைப் பிடித்திருந்த பிசாசுகளை விரட்டுவதைக் குறித்துப் பல எடுத்துக்காட்டுகள் உள்ளன. ஆனால் ஒரு பட்டணத்தையோ அல்லது பூகோளப் பகுதியையோ ஆளுகைசெய்யும் ஒரு தீய ஆவியை எவரேனும் வீழ்த்தியதைக் குறித்துச் சுவிசேஷத்திலோ அல்லது நடபடிகளின் புத்தகத்திலோ எடுத்துக்காட்டு எதுவும் காணப்படவில்லை. வளிமண்டலத்திலிருந்து தீய ஆவிகளை இழுத்துப் போட வேண்டும் என்று ஏதேனும் ஒரு நிருபத்தில் நமக்குப் போதனை கொடுக்கப்பட்டிருக்கிறதா? இல்லை. இதன் காரணமாகவே, வளிமண்டலத்தில் நாம் தீய ஆவிகளோடு ''ஆவிக்குரிய யுத்தத்தில்'' ஈடுபட வேண்டும் என்று நம்புவதற்கு நமக்கு வேதாகமரீதியான அடிப்படை எதுவுமில்லை.

### உவமைக்கதைகளுக்கு அதிகமாக அர்த்தம்காணுதல்

வேதாகமத்தில் தேவன் நோக்கம் கொண்டிருப்பதைவிட அதிகமான அர்த்தத்தைத் தேடுவது கிறிஸ்தவர்கள் பெரும்பாலும் உருவக அணியைச் சேர்ந்த வேதவசனங்களுக்கு அர்த்தம்காணும்போது செய்யும் பிழையாகும். ''அரண்களை நிர்மூலமாக்குவது'' குறித்துப் பவுல் எழுதியிருக்கும் வார்த்தைகளுக்கு அர்த்தம்காணுவது எப்படி உருவகத்துக்கு அர்த்தம் காணுவதில் பிழை ஏற்படுகிறது என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கிறது:

> நாங்கள் மாம்சத்தில் நடக்கிறவர்களாயிருந்தும், மாம்சத்தின்படி போர் செய்கிறவர்களல்ல. எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது. அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம். உங்கள் கீழ்ப்படிதல் நிறைவேறும்போது, எல்லாக் கீழ்ப்படியாமைக்குந்தக்க நீதியுள்ள தண்டனையைச் செலுத்த ஆயத்தமாயிருக்கிறோம் [2 கொரி. 10:3–6].

''அரண்களை நிர்மூலமாக்குவது'' பற்றிச் சொல்லப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். இந்த ஒரு உருவகச் சொற்றொடரின் அடிப்படையில் வளிமண்டலத்தில் தீய ஆவிகளைக் கொண்ட ''அரண்களை நிர்மூலமாக்குவதற்காக'' ''ஆவிக்குரிய யுத்தங்களை'' நடத்துவது குறித்த முழு இறையியலும் கட்டியெழுப்பப்பட்டிருக்கிறது.





ஆனால் புதிய ஆங்கில மொழிபெயர்ப்புகளைப் பார்க்கும்போது பவுல் வளிமண்டலத்திலுள்ள தீய ஆவிகளைக் குறித்துப் பேசவில்லை, மக்களின் மனதில் இருக்கும் பொய்யான நம்பிக்கைகளின் அரண்களையே அவர் குறிப்பிடுகிறார் என்பது தெளிவாகிறது. வளிமண்டலங்களிலுள்ள தீய ஆவிகளை அல்ல, இந்தப் பொய்யான எண்ணங்களையே பவுல் அழித்துப்போடுகிறார்.

பின்னணியோடுகூட நாம் இதை வாசிக்கும்போது இது இன்னும் தெளிவாகிறது. ''தேவனை அறிகிற அறிவுக்கு எதிராக எழுப்பப்படும் எந்தப் பொய்யான நம்பிக்கைகளையும் மேட்டிமைகளையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்'' [அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது]. பவுல் அடையாளரீதியாகக் குறிப்பிடும் யுத்தம் தேவனைக் குறித்த மெய்யான அறிவுக்கு முரண்பாடாக இருக்கும் சிந்தனைகளுக்கும், கருத்துக்களுக்கும் எதிரான யுத்தமாகும்.

இராணுவ உருவகங்களைப் பயன்படுத்துவதின் மூலம் நாம் சாத்தானின் பொய்களை நம்பியிருக்கும் மக்களின் சிந்தைகளுக்காகப் போரிடுகிறோம் என்று பவுல் விளக்கியிருக்கிறார். இந்த யுத்தத்தில் சத்தியமே நம்முடைய பிரதான போராயுதமாகும். எனவேதான் முழு உலகத்துக்கும் சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படியான கட்டளை நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. சிறைப்பட்டிருக்கிறவர்களை விடுவிக்கக் கூடிய செய்தியை ஒவ்வொரு பகுதியிலும் அறிவிக்க வேண்டும். நாம் நிர்மூலமாக்கும் அரண்கள் பொய் என்னும் செங்கற்களால் மோசம்போக்குதல் என்னும் சாந்தைக் கொண்டு கட்டப்பட்டவையாகும்.

### தேவனுடைய சர்வாயுதவர்க்கம்

பவுலின் எழுத்துக்களில் அடிக்கடி தவறாக அர்த்தம் காணப்படும் பகுதி எபேசியர் 6:10–17 வசனங்களாகும். இந்த வசனங்களில் அவர் தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக்கொள்ள வேண்டிய நமது பொறுப்பைப் பற்றி எழுதியிருக்கிறார். இந்தப் பகுதி பிசாசோடும், தீய ஆவிகளோடும் கிறிஸ்தவர்களுக்குரிய போராட்டத்தைக் குறித்துக் கூறினாலும், பட்டணங்களுக்கு மேலாகத் தீய ஆவிகளை நிர்மூலமாக்குவது குறித்து எதுவும் சொல்லப்பட்டிருக்கவில்லை. இந்தப் பகுதியை நாம் நன்றாக ஆராய்ந்து பார்ப்போமானால், தனிப்பட்ட ஒவ்வொருவரின் பொறுப்பைக் குறித்தே பவுல் எழுதுகிறார் என்பது தெளிவாகிறது. நாம் தேவனுடைய வார்த்தையின் சத்தியங்களைச் செயல்படுத்துவதின் மூலம் தனிப்பட்ட முறையில் சாத்தானின் தந்திரங்களை எதிர்த்து நிற்க வேண்டும்.

இந்தக் குறிப்பிட்ட பகுதியை நாம் வாசிக்கும்போது, உருவக மொழி காணப்படுவதையும் கவனியுங்கள். பவுல் கிறிஸ்தவர்கள் தரித்துக்கொள்ள

வேண்டிய உலோகத்திலான கவசத்தைக் குறித்துச் சொல்லவில்லை. அவர் விவரிக்கும் சர்வாயுதவர்க்கம் உருவகரீதியிலானதாகும். அதன் ஒவ்வொரு ஆயுதமும் பிசாசு மற்றும் தீய ஆவிகளுக்கு எதிராகப் பாதுகாப்பைப் பெறும்படிக் கிறிஸ்தவர்கள் பயன்படுத்த வேண்டிய வெவ்வேறான ஆவிக்குரிய சத்தியங்களைக் குறிக்கிறது. தேவனுடைய வார்த்தையை அறிந்து, விசுவாசித்து, அதன்படி செயல்படுவதின் மூலம் கிறிஸ்தவர்கள் உருவகரீதியாகத் தேவனுடைய பாதுகாப்புக் கவசத்தை அணிந்துகொள்ளுகிறார்கள்.

*பவுல் உண்மையில் நமக்குத் தெரிவிக்க விரும்புவது என்ன?* என்ற கேள்வியை நமக்கு நாமே கேட்டுக்கொண்டு இந்தப் பகுதியை வசனம் வசனமாக ஆய்வுசெய்வோமாக.

### நமது ஆவிக்குரிய பலத்துக்கு ஆதாரம்

முதலாவதாக, ''கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள்'' என்று நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது [எபே. 6:10]. நாம் நம்மிலிருந்து *அல்ல*, தேவனிடமிருந்தே பலத்தைப் பெற வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டிருக்கிறது. பவுலின் அடுத்த வாக்கியத்தில் இது இன்னும் தெளிவாகிறது: ''தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள்'' [எபே. 6:11]. இது நம்முடையது அல்ல, *தேவனுடைய* சர்வாயுதவர்க்கமாகும். தேவன்தாமே சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக்கொண்டிருக்கிறார் என்று பவுல் சொல்லவில்லை, தேவன் நமக்காகக் கொடுத்திருக்கும் சர்வாயுதவர்க்கம் நமக்குத் தேவை என்றே அவர் சொல்லுகிறார்.

தேவன் கொடுத்திருக்கும் இந்தச் சர்வாயுதவர்க்கம் நமக்கு ஏன் தேவைப்படுகிறது? ''பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்துநிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி'' [எபே. 6:11]. இந்தச் சர்வாயுதவர்க்கம் அடிப்படையில் எதிர்த்துத் தாக்குவதற்கு உரியதல்ல, *தற்காப்புக்கு* உரியதாகும். அது பட்டணத்துக்கு மேலாக இருக்கும் தீய ஆவிகளை நிர்மூலமாக்கும்படி நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை, சாத்தானின் தந்திரங்களுக்கு எதிராக நாம் *உறுதியாக நிற்கும்படிக்காகவே* இது கொடுக்கப்பட்டுள்ளது.

சாத்தான் நம்மைத் தாக்குவதற்காகத் தீய திட்டங்களைத் தீட்டியிருக்கிறான் என்று நாம் அறிகிறோம். தேவன் கொடுத்திருக்கும் சர்வாயுதவர்க்கத்தை நாம் அணியாவிட்டால், நாம் பலவீனர்களாக இருக்கிறோம். சர்வாயுதவர்க்கத்தை அணிந்துகொள்ளுவது தேவனுடைய பொறுப்பு அல்ல, நம்முடைய பொறுப்பு என்பதையும் கவனியுங்கள்.

தொடர்ந்து பார்ப்போம்:

> ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு [எபே. 6:12].





இங்கே பவுல் சரீரப்பிரகாரமான யுத்தத்தைக் குறித்து அல்ல, ஆவிக்குரிய போரைக் குறித்துப் பேசுகிறார் என்பது தெளிவாகிறது. பவுல் பட்டியலிடும் தீய ஆவிகளின் அணிவரிசையின் தந்திரமான திட்டங்களுக்கு எதிராக நாம் போராட வேண்டியிருக்கிறது. பவுல் அதிகாரத்தில் கீழானவைகளிலிருந்து மேலானவைகள் வரை கீழிருந்து மேலாகப் பட்டியலிட்டிருக்கிறார் என்று பெரும்பாலான வாசகர்கள் அனுமானிக்கிறார்கள். ''துரைத்தனங்கள்'' அதிகாரத்தில் கீழான நிலையைக் குறிக்கிறது என்றும் ''வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகள்'' மேலான அதிகாரத்தைக் குறிக்கிறது என்றும் நம்புகிறார்கள்.

ஆவிக்குரிய ஜீவிகளை எதிர்த்து நாம் எப்படிப் போராட முடியும்? *ஆவிக்குரிய ஜீவிகள் நம்மை எப்படித் தாக்கக்கூடும்?* என்ற கேள்விக்குப் பதிலளிப்பதின் மூலம் நாம் முதலாவது கேள்விக்குப் பதிலைப் பெற முடியும். சோதனைகள், சிந்தனைகள், தேவனுடைய வார்த்தைக்கும் சித்தத்துக்கும் விரோதமான ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களின்மூலம் அவை நம்மைத் தாக்குகின்றன. எனவே தேவனுடைய வார்த்தையை அறிந்து, விசுவாசித்து, அதற்குக் கீழ்ப்படிவதே நமது தற்காப்பாகும்.

> ஆகையால், தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள் [எபே. 6:13].

சாத்தானின் தாக்குதல்களைத் *தடுத்து, எதிர்த்து* நிற்கும்படி நம்மை ஆயத்தப்படுத்துவதே பவுலின் நோக்கம் என்பதைக் கவனியுங்கள். சாத்தானை எதிர்த்துத் தாக்கும்படியாகவோ அல்லது வளிமண்டலத்திலுள்ள தீய ஆவிகளைத் தகர்க்கும்படியாகவோ நம்மை ஆயத்தப்படுத்துவது அவருடைய நோக்கம் அல்ல. இந்தப் பகுதியில் பவுல் மூன்று முறை உறுதியாக *நிற்பதைக்* குறித்துப் பேசியிருக்கிறார். நமது நிலை எதிர்த்துத் தாக்குவது அல்ல, தற்காப்பாகும்.

### சத்தியம் – நமது அடிப்படையான தற்காப்பு

> சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும்...நில்லுங்கள் [எபே. 6:14].

சத்தியமே நமது சர்வாயுதவர்க்கத்தை நமது இடத்தில் நிறுத்துகிறது. இந்தச் சத்தியம் யாது? இயேசுவானவர் தமது பிதாவிடம் ''உம்முடைய வசனமே சத்தியம்'' என்று சொல்லியிருக்கிறார் [யோவான் 17:17]. சாத்தானின் பொய்களை எதிர்கொள்ளக்கூடிய சத்தியத்தை நாம் அறிந்திராவிட்டால் நம்மால் அவனுக்கு எதிராக உறுதியாக நிற்க முடியாது. இயேசுவானவர் வனாந்தரத்தில் சாத்தானின் சோதனைகளை எதிர்கொண்டபோது ஒவ்வொரு முறையும் எழுதியிருக்கிறது என்று சொல்லி இதைச் செயல்பூர்வமாகக் காட்டியிருக்கிறார்.

பவுல் தொடர்ந்து இவ்வாறு சொல்லுகிறார்:

> நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும் ... [எபே. 6:14].

கிறிஸ்தவர்களாகிய நாம் இரண்டு வகைப்பட்ட நீதியை அறிந்திருக்க வேண்டும். முதலாவதாக, கிறிஸ்துவின் நீதி நமக்கு ஒரு ஈவாக அருளப்பட்டிருக்கிறது [பார்க்க, 2 கொரி. 5:21]. சிலுவையில் தங்கள் பாவங்களைச் சுமந்த இயேசுவின்மீது நம்பிக்கை வைப்பவர்களின் கணக்கில் அவருடைய நீதியான நிலை வைக்கப்படு கிறது. இந்த நீதியான நிலை சாத்தானின் ஆளுகையிலிருந்து நம்மை விடுவித்திருக்கிறது.

இரண்டாவதாக, நாம் இயேசுவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து, நீதியுள்ளவர்களாக வாழ வேண்டும். நீதியென்னும் மார்க் கவசத்தைக் குறித்துச் சொல்லியபோது பவுல் இதையே கருத்தில் கொண்டிருக்க வேண்டும். கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிவதின்மூலம் நாம் பிசாசுக்கு இடம் கொடுப்பதில்லை [பார்க்க, எபே. 4:26–27].

### சுவிசேமென்னும் பாதரட்சையில் உறுதியாக நிற்றல்

> சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும் [எபே. 6:15].

*சுவிசேஷத்தின்* சத்தியத்தை அறிந்து, விசுவாசித்து, அதன்படி செயல்படுவது நாம் சாத்தானின் தாக்குதல்களுக்கு எதிராக உறுதியாக நிற்கும்படி செய்கிறது. ரோமப் போர்ச்சேவகர்கள் அணிந்த பாதரட்சைகளின் அடிப்பக்கத்தில் போர்க்களத்தில் உறுதியாக நிற்பதற்கு உதவியாகக் கூர்மையான பெரிய ஆணிகள் இருந்தன. இயேசுவானவர் நமது ஆண்டவராக இருக்கும்போது சாத்தானின் பொய்களுக்கு எதிராக நம்மால் உறுதியாக நிற்க முடியும்.

> பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களை யெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற்





> றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாயும் நில்லுங்கள் [எபே. 6:16].

நமது தற்காப்பு நிலைகொள்ளுதலைப் பவுல் மறுபடியுமாக வலியுறுத்துவதை இங்கே கவனியுங்கள். அவர் பட்டணங்களுக்கு மேலாகப் பிசாசுகளை நாம் நிர்மூலமாக்குவதைக் குறித்துக் கூறவில்லை. பிசாசின் பொய்களை எதிர்த்து நிற்க நாம் தேவனுடைய வார்த்தையின்மீதுள்ள நமது விசுவாசத்தைப் பயன்படுத்துவதைக் குறித்தே அவர் குறிப்பிடுகிறார். தேவன் சொல்லியிருப்பதை நாம் விசுவாசித்து, அதன்படி செயல்படும்போது, அது சாத்தானின் பொய்களைத் தடுத்து நிறுத்தும் கேடகமாக நமக்கு இருக்கிறது. ''பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்கள்'' என்று பவுல் சாத்தானின் பொய்களை உருவகரீதியாகக் குறிப்பிடுகிறார்.

### நமது ஆவிக்குரிய பட்டயம் – தேவனுடைய வார்த்தை

> இரட்சணியமென்னும் தலைச்சீராவையும், தேவவசன மாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள் [எபே. 6:17].

வேதாகமம் சொல்லுகிறபடி, நமது இரட்சிப்பானது சாத்தானின் சிறையிருப்பிலிருந்து விடுதலையையும் உள்ளடக்கியிருக்கிறது. தேவன் ''இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிறார்'' [கொலோ. 1:13]. இதை நாம் அறிந்திருப்பது, நாம் இன்னும் சாத்தானின் ஆளுகைக்குள் இருக்கிறோம் என்ற அவனுடைய பொய்யை விசுவாசிப் பதிலிருந்து நம்மைக் காத்துக்கொள்ளும் தலைச்சீராவாக இருக்கிறது. சாத்தான் இப்போது நமது எஜமானாக இருப்பதில்லை, இயேசுவே எஜமானாக இருக்கிறார்.

மேலும், நாம் ''ஆவியின் பட்டயத்தை'' எடுத்துக்கொள்ள வேண்டும். இது தேவனுடைய வார்த்தைக்கு உருவகமாக இருக்கிறது என்று பவுல் உருவகரீதியாகச் சொல்லுகிறார். நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி, இயேசுவானவர் தமது ஆவிக்குரிய பட்டயத்தைச் சரியாகப் பயன்படுத்திய ஆவிக்குரிய வீரருக்குச் சரியான எடுத்துக்காட்டானவராக இருக்கிறார். அவர் வனாந்தரத்தில் சாத்தானால் சோதிக்கப்பட்ட ஒவ்வொரு வேளையிலும் அவர் தேவனுடைய வார்த்தையிலிருந்து நேரடியாக மேற்கோளை எடுத்துச் சொல்லியிருக்கிறார். எனவே நாம் ஆவிக்குரிய போராட்டத்தில் சாத்தானைத் தோற்கடிக்க வேண்டுமானால், அவனுடைய பொய்களில் நாம் விழுந்துவிடாதபடி, தேவன் சொல்லியிருப்பதை அறிந்து விசுவாசிக்க வேண்டும்.

*இயேசுவானவர்* ''ஆவியின் பட்டயத்தை'' *தற்காப்புக்காகப்* பயன் படுத்தினார் என்பதையும் கவனியுங்கள். பவுல் குறிப்பிட்டிருக்கும்

சர்வாயுதவர்க்கம் அடிப்படையில் தற்காப்புக்காக உள்ளது என்று நாம் சொல்லும்போது, சிலர் பட்டயமானது எதிர்த்துத் தாக்கும் ஆயுதம் என்று சொல்லுகிறார்கள். எனவே எபேசியர் 6:10–12 வசனங்கள் நாம் ''அரண்களை வீழ்த்தும்படி'' வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளை எதிர்த்துப் போரிடும் நமது பொறுப்பையே குறிக்கிறது என்று அவர்கள் வாதிடுகிறார்கள். இது பலவீனமான வாதமாக இருக்கிறது.

கிறிஸ்தவர்கள் ஏன் தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக் கொள்ள வேண்டும் என்பதற்குப் பவுல்தாமே கொடுக்கும் விளக்கத்தி லிருந்து [''பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்துநிற்கத் திராணியுள்ளவர் களாகும்படி''] அவர் அடிப்படையில் நமது சர்வாயுதவர்க்கத்தைத் தற்காப்புக்குப் பயன்படுத்துவதைக் குறித்தே சொல்லுகிறார் என்பது தெளிவாகிறது. மேலும், ஒரு பட்டயத்தை எதிர்த்துத் தாக்கும் ஆயுதம் என்று நினைத்தாலும், அதைத் தற்காப்புக்கான ஆயுதமாகவும் கருதலாம். ஏனென்றால் அது எதிரி பட்டயத்தினால் தாக்கும்போது அதைத் தடுக்கிறது.

சர்வாயுதவர்க்கத்தின் வெவ்வேறு பகுதிகளைக் குறித்து உருவகத்தில் சொல்லப்பட்டிருக்கும்போது அதிலிருந்து கூடுதலான அர்த்தத்தைப் பெற நாம் முயலக் கூடாது. ஒரு பட்டயத்தின் தற்காப்பு மற்றும் எதிர்த்துத் தாக்குதல் இயல்புகளைக் குறித்து நாம் விவாதிக்கும் போது, அது ஒரு எளிய உருவகத்தை நமது விருப்பத்துக்கு ஏற்றபடி ''கூறுபோடுவது போல'' ஆகிவிடக் கூடும்.

### நாம் ''பலவானைக் கட்ட வேண்டும்'' என்று இயேசுவானவர் போதனை கொடுத்திருக்கிறார் அல்லவா?

சுவிசேஷங்களில் மூன்று இடங்களில் இயேசுவானவர் ''பலவானைக் கட்டுவதைக்'' குறித்துச் சொல்லியிருப்பதை நாம் காணலாம். என்றாலும், இந்த மூன்று இடங்களிலும் தம்மைப் பின்பற்று கிறவர்கள் ''பலவானைக் கட்டுவதைச்'' செயல்படுத்த வேண்டும் என்று சொல்லியிருக்கவில்லை. இயேசுவானவர் என்ன சொல்லியிருக்கிறார் என்பதைப் பின்னணியோடு சேர்த்து நாம் பார்ப்போம்:

> அவர்களை அவர் அழைத்து, உவமைகளாய் அவர்களுக்குச் சொன்னதாவது: சாத்தானைச் சாத்தான் துரத்துவது எப்படி? ஒரு ராஜ்யம் தனக்குத்தானே விரோதமாகப் பிரிந்திருந்தால், அந்த ராஜ்யம் நிலைநிற்கமாட்டாதே. ஒரு வீடு தனக்குத்தானே விரோதமாகப் பிரிந்திருந்தால், அந்த வீடு நிலைநிற்க மாட்டாதே. சாத்தான் தனக்குத்தானே விரோதமாக எழும்பிப் பிரிந்திருந்தால், அவன் நிலைநிற்க மாட்டாமல், அழிந்துபோவானே. *பலவானை முந்திக் கட்டினாலொழிய, ஒருவனும் பலவானுடைய வீட்டுக்குள் புகுந்து, அவன் உடைமைகளைக் கொள்ளையிடக்கூடாது*; கட்டினானேயாகில், அவன் வீட்டைக் கொள்ளையிடுவான். மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: மனுஷர்கள் செய்யும் எல்லாப் பாவங்களும், அவர்கள் தூஷிக்கும் எந்தத் தூஷணங்களும், அவர்களுக்கு மன்னிக்கப்படும்; ஒருவன் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகத் தூஷணஞ் சொல்வானாகில், அவன் என்றென்றைக்கும் மன்னிப்படையாமல் நித்திய ஆக்கினைக்குள்ளாயிருப் பான் என்றார். அசுத்த ஆவியைக் கொண்டிருக் கிறானென்று அவர்கள் சொன்னபடியினாலே அவர் இப்படிச் சொன்னார் [மாற்கு 3:23–30 அழுத்தம் கொடுக்கப் பட்டுள்ளது].

எந்தப் பலவானையும் கட்டுவதைக்குறித்து இயேசுவானவர் தமது சீஷர்களுக்குப் போதிக்கவில்லை என்பதைக் கவனியுங்கள். மாறாக எருசலேமின் வேதபாரகர் தம்மைக் குறை கூறியதற்கு அவர் மறுக்கமுடியாத தர்க்கவாதத்தோடும், தெளிவான உருவகத்தோடும் பதிலளிப்பதையே நாம் காண்கிறோம்.

அவர் பிசாசின் சக்தியைப் பயன்படுத்தி பிசாசுகளை விரட்டினார் என்று அவர்கள் அவரைக் குற்றம்சாட்டினார்கள். தனக்கு எதிராகத் தானே செயல்பட்டால் அவன் பைத்தியக்காரனாக இருக்க வேண்டும் என்று அவர் பதிலளித்தார். இதற்கு விரோதமாக எவரும் புத்திசாலித் தனமாக விவாதிக்க முடியாது.

இயேசுவானவர் பிசாசுகளை விரட்டச் சாத்தானின் சக்தியைப் பயன்படுத்தவில்லை என்றால் பிறகு அவர் யாருடைய சக்தியைப் பயன்படுத்தியிருக்கிறார்? இது சாத்தானின் சக்தியைவிட வல்லமையான சக்தியாக இருக்க வேண்டும். அது *தேவனுடைய* வல்லமையாக, பரிசுத்த ஆவியானவரின் வல்லமையாக இருக்க வேண்டும். இப்படியாக இயேசுவானவர் சாத்தானைக் குறித்து உருவகரீதியாகப்பேசி அவனைத் தனது உடைமைகளைக் காத்துக் கொண்டிருக்கும் ஒரு பலவானுக்கு ஒப்பிட்டிருக்கிறார். பலவானின் உடைமைகளை ஒருவன் எடுத்துக்கொள்ள வேண்டுமானால் அவன் பலவானைவிட வல்லமையுள்ளவனாக இருக்க வேண்டும். இயேசு வானவர் தம்மைக் குறித்தே இப்படிக் குறிப்பிட்டிருக்கிறார். அவர் எப்படிப் பிசாசுகளை விரட்டினார் என்பதற்கு இதுவே உண்மையான விளக்கமாகும்.

பட்டணங்களுக்கு மேலாக ''பலவானைக் கட்டுவது'' என்ற கொள்கையை நியாயப்படுத்த இந்தப் பகுதியையோ அல்லது மத்தேயு,

லூக்கா சுவிசேஷங்களில் கூறப்பட்டுள்ள பகுதிகளையோ பயன்படுத்த முடியாது. மேலும் நாம் புதிய ஏற்பாட்டின் எஞ்சிய பகுதிகளை ஆராயும் போது, எவரும் பட்டணங்களுக்கு மேலாக ''பலவானைக் கட்டியதற் கான'' எடுத்துக்காட்டையோ அல்லது அதைக் குறித்த போதனை யையோ நம்மால் பார்க்க முடிவதில்லை. எனவே ஒரு பட்டணம் அல்லது பூகோளப்பகுதியின் மேலாக இருக்கும் ''பலவானாகிய தீய ஆவியை'' எந்தவொரு கிறிஸ்தவரும் கட்டவோ அல்லது சக்தியற்ற தாக்க முயலுவதோ வேதாகமரீதியானது அல்ல என்ற முடிவுக்கு நாம் வரலாம்.

### ''பூமியிலும் பரலோகத்திலும் கட்டுவதைக்'' குறித்து என்ன?

சுவிசேஷங்களில் இரண்டு இடங்களில் மட்டுமே இயேசுவானவர் ''பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்'' என்று சொல்லுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இரண்டுமே மத்தேயு சுவிசேஷத்தில் காணப்படு கிறது.

நாம் வளிமண்டலத்தில் தீய ஆவிகளைக் ''கட்ட'' முடியும், அப்படிக் கட்ட வேண்டும் என்று இயேசுவானவர் போதிக்கிறாரா?

முதலாவதாக, நாம் அவருடைய வார்த்தைகளைப் பார்ப்போம், *கட்டுவதும், கட்டவிழ்ப்பதும்.* இயேசுவானவர் இந்த வார்த்தைகளை உருவகமொழியில் சொல்லுகிறார் என்பது தெளிவாக இருக்கிறது. நாம் கயிற்றைக் கொண்டு எதையாவது கட்டுவதையோ அல்லது கயிற்றினால் கட்டப்பட்டிருக்கும் எதையாவது அவிழ்ப்பதையோ குறித்து அவர் போதிக்கவில்லை. அப்படியானால் அவர் சொல்லுவதின் அர்த்தம் என்ன?

இதற்கு அர்த்தம் காண வேண்டுமானால் அப்போது அவர் பேசிக் கொண்டிருந்த காரியங்களின் பின்னணியில் கட்டுவது, அவிழ்ப்பது என்ற வார்த்தைகளை நோக்கிப் பார்க்க வேண்டும். தீய ஆவிகளைப் பற்றி அவர் பேசுகிறாரா? அப்படியானால், அவர் கட்டுவதைக் குறித்துச் சொல்லுவது தீய ஆவிகளைக் கட்டுவதைக் குறித்தது என்ற முடிவுக்கு நாம் வர முடியும்.

இயேசுவானவர் கட்டுவதையும் அவிழ்ப்பதையும் குறித்துக் கூறும் முதல் பகுதியைப் பார்ப்போம்

> அப்பொழுது அவர்: நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார். சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக: நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான். இயேசு அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு





> வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார். மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக் கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள் வதில்லை. பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார் [மத். 16:15–19 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

இந்தப் பகுதியில் குறைந்தபட்சம் ஐந்து உருவகரீதியிலான வெளிப்பாடுகள் காணப்படுகிறபடியினால்தான் இதற்குப் பல வழிகளிலும் அர்த்தம்காணப்படுகிறது. 1] ''மாம்சமும் இரத்தமும்'' 2] ''கல்'' 3] ''பாதாளத்தின் வாசல்கள்'' 4] ''பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்கள் 5] ''கட்டுதலும், கட்டவிழ்த்தலும்''. இவையெல்லாமே வேறொன்றைக் குறிப்பிடும் உருவக மொழிகளாகவே இருக்கின்றன.

### பாதாளத்தின் வாசல்கள்

உருவகங்களின் திட்டவட்டமான அர்த்தங்களுக்கு அப்பாற்பட்டு, இயேசுவானவர் இந்தப் பகுதியில் தீய ஆவிகளைக் குறித்துக் குறிப்பிட வில்லை என்பதைக் கவனியுங்கள். அவர் பாதாளத்தின் வாசல்களைக் குறித்துக் குறிப்பிட்டிருப்பதே ஓரளவுக்கு நெருங்கி வரும் ஒன்றாகும். என்றாலும் பாதாளத்தின் வாசல்கள் தன்னில்தானே சபைக்கு இடையூறாக இருக்கவில்லை.

''பாதாளத்தின் வாசல்கள்'' என்பது எதைக் குறிக்கிறது? அவை சாத்தானின் சக்திக்கு அடையாளங்களாக இருக்கலாம். தமது சபை கட்டப்படுவதைச் சாத்தானின் சக்தியினால் தடுக்க முடியாது என்பதே இயேசுவானவர் கூறும் அர்த்தமாக இருக்கலாம். அல்லது தாம் துவங்கும் சபையானது பாதாளத்தின் வாசல்களுக்கு அப்பால் சிறைப் படப்போகிறவர்களை இரட்சிக்கும் என்று அவர் குறிப்பிட்டிருக்கலாம்.

இயேசுவானவர் இரண்டு வகைப்பட்ட வாசல்களைக் குறிப்பிட் டிருக்கிறார் என்பதைக் கவனியுங்கள் பாதாளத்தின் வாசல்கள் மற்றும் பரலோகத்தின் வாசல்கள், அவர் ''பரலோக ராஜ்யத்தின் திறவுகோல் களைப்'' பேதுருவிடம் கொடுப்பதாகச் சொல்லியபோது வாசலைப் பற்றிச் சுட்டிக்காட்டப்படுகிறது. இந்த வேறுபட்ட தன்மையானது இயேசுவானவர் பாதாளத்தின் வாசல்கள் என்று குறிப்பிட்டபோது பாதாளத்தின் வாசல்களுக்குப் பின்னால் அடைக்கப்படப்

போகிறவர்களை இரட்சிப்பதைக் குறித்தே அப்படிச் சொன்னார் என்பதைக் குறிக்கிறது என்பதற்கு அது கூடுதலான ஆதரவாக இருக்கிறது.

''சாத்தானின் சகல சக்திகளும் தமது சபையை மேற்கொள்ளு வதில்லை'' என்பதே இயேசுவானவர் கூறியதின் அர்த்தமாக இருந்தாலும், கட்டுவதையும் கட்டவிழ்ப்பதையும் குறித்த அவருடைய வார்த்தைகள் பட்டணத்துக்கு மேலாகத் தீய ஆவிகளைக் கட்டுவதைக் குறித்தது என்று நாம் யூகிக்க முடியாது. ஏனென்றால் சுவிசேஷங் களிலோ அல்லது நடபடிகளின் நூலிலோ எவரும் பட்டணங்களுக்கு மேலாகத் தீய ஆவிகளைக் கட்டுவதைக் குறித்த எடுத்துக்காட்டையோ அல்லது நிருபங்களில் அதைக் குறித்த போதனையையோ காண முடிவதில்லை. நாம் கட்டுவது மற்றும் கட்டவிழ்ப்பது குறித்த கிறிஸ்து வின் வார்த்தைகளுக்கு அர்த்தம் காணும்போது அது புதிய ஏற்பாட்டின் எஞ்சிய போதனைகளுக்கு ஒத்துப்போக வேண்டும்.

எந்தவித வேதாகம எடுத்துக்காட்டும் இல்லாதிருக்கும்போது, கிறிஸ்தவர்கள் ''நான் இயேசுவின் நாமத்தில் பிசாசைக் கட்டுகிறேன்'' என்றோ அல்லது ''நான் அந்த நபரின்மீது தூதனைக் கட்டவிழ்க்கிறேன்'' என்றோ சொல்லுவது விநோதமான காரியமாக இருக்கிறது. புதிய ஏற்பாட்டில் எங்கேயும் எவரும் இதைக்குறித்துக் கூறவில்லை. நடபடிகளின் நூலிலும் நிருபங்களிலும் பிசாசிடம் பேசுவதைக்குறித்தோ அல்லது தீய ஆவிகளைக் கட்டுவது அல்லது கட்டவிழ்ப்பது குறித்தோ வலியுறுத்தப்படவில்லை, சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதையும், தேவனை நோக்கி ஜெபிப்பதையும் குறித்தே வலியுறுத்தப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, பவுல் தொடர்ந்து சாத்தானின் தூதனால் குட்டப்பட்டபோது, அவர் அந்த ஆவியைக் ''கட்ட'' முயலவில்லை, அவர் அதைக் குறித்துத் தேவனிடம் ஜெபித்தார் [பார்க்க, 2 கொரி. 12:7–10].

### பரலோகராஜ்யத்தின் திறவுகோல்கள்

கட்டுவதையும் கட்டவிழ்ப்பதையும் குறித்த இயேசுவின் வார்த்தை களின் உடனடிப் பின்னணியை நாம் கவனமாக ஆராய்ந்து பார்ப்போம். அவர் கட்டுவதையும் கட்டவிழ்ப்பதையும் குறித்துக் கூறுவதற்குச் சற்று முன்னால் பேதுருவுக்குப் ''பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களைக்'' கொடுப்பதைக் குறித்துக் குறிப்பிட்டிருக்கிறார். பேதுருவுக்குப் பரலோக வாசல்களுக்குரிய திறவுகோல்கள் கொடுக்கப்படவில்லை. எனவே இயேசுவின் வார்த்தைகளை நாம் உருவக மொழியாகவே எடுத்துக் கொள்ள வேண்டும். ''திறவுகோல்கள்'' என்பது எதைக் குறிக்கிறது? திறவுகோல் என்பது *பூட்டப்பட்டிருக்கும் ஒன்றைத் திறப்பதற்கான வழிவகையாகும்*. ஒருவரிடம் திறவுகோல் இருக்கிறது என்றால்





மற்றவர்களால் சில கதவுகளைத் திறக்க வேண்டியதில்லை என்று அர்த்தமாகும்.

நடபடிகளின் புத்தகத்தில் பேதுருவின் ஊழியத்தைக் குறித்து நாம் வாசிக்கும்போது, மற்றவர்களுக்கு மூடப்பட்டிருக்கும் கதவுகள் இவருக்குத் திறக்கப்பட்டிருக்கின்றன என்பதோடு ஒப்பிடக் கூடிய காரியம் எதுவாக இருக்கிறது?

அடிப்படையில் அவர் சுவிசேஷத்தை அறிவிப்பதை நாம் காண்கிறோம். அது விசுவாசிப்பவர்களுக்காகப் பரலோகத்தின் கதவு களைத் திறந்துகொடுக்கிறது. இந்தச் சுவிசேஷம் பாதாளத்தின் வாசல் களை மூடுகிறது. இந்த வகையில் பார்க்கும்போது, நாம் எல்லோரும் கிறிஸ்துவின் ஸ்தானாபதிகளாக இருக்கிறபடியால், நம் எல்லோருக்கும் பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. *பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்கள் என்பது இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷமாகவே இருக்க வேண்டும். அந்தச் செய்தியே பரலோக ராஜ்யத்தின் வாசல்களைத் திறக்கக்கூடியதாக இருக்கிறது.*

### இப்போது கட்டுதலும், கட்டவிழ்த்தலும்

இறுதியாக, பேதுருவுக்குப் பரலோக ராஜ்யத்தின் திறவுகோல் களைக் கொடுப்பதாக வாக்குத்தத்தம் செய்த பிறகு, இந்தப் பகுதியில் அவருடைய ஐந்தாவது உருவக மொழியாகிய கட்டுதலும் கட்டவிழ்த்தலும் குறித்து அவர் சொல்லியிருக்கிறார்.

நாம் ஏற்கெனவே ஆராய்ந்திருக்கும் பின்னணியின் அடிப்படை யில் இயேசுவானவர் சொல்லுவதின் அர்த்தம் என்ன? பேதுருவின் கட்டுதலும் கட்டவிழ்த்தலும் எப்படி இயேசுவானவர் தமது சபையைக் கட்டுவதற்கும், மக்களைப் பாதாளத்திலிருந்து இரட்சிப்பதற்கும், சுவிசேஷத்தை அறிவிப்பதற்கும் பொருத்தமாக இருக்கும்?

ஒரேயொரு சாத்தியக் கூறு மட்டுமே இருக்கிறது. ''நான் உனக்குப் பரலோகப் பிரதிநிதியின் அதிகாரத்தைக் கொடுக்கிறேன். பூமியில் உனது பொறுப்பை நிறைவேற்றுவாயானால், பரலோகம் அதற்கு ஆதரவாக இருக்கும்'' என்பதே அவர் சொல்லியதின் அர்த்தமாக இருக்க வேண்டும்.

ஒரு முதலாளி தனது விற்பனையாளரிடம் ''பாங்காக்கில் நீ செய்வதெல்லாம் தலைமை அலுவலகத்திலும் செய்யப்படும்'' என்று சொல்லுவாரானால் விற்பனையாளர் அவர் கூறியதற்கு எப்படி அர்த்தம் எடுத்துக்கொள்ள வேண்டும்? பாங்காக்கில் தனது நிறுவனத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் அதிகாரம் தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றே அவர் அர்த்தம் எடுத்துக்கொள்ளுவார். இயேசுவானவர் கூறியதின் அர்த்தம் பேதுருவுக்குப் பூமியில் பரலோக தேவனைப் பிரதிநிதித்துவம் செய்யும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதே

யாகும். வேதபாரகர் மற்றும் பரிசேயரின் குறைகண்டுபிடிக்கும் பார்வையின் கீழாக அவர் எருசலேமில் தேவனுடைய செய்தியை அறிவிக்கத் துவங்கும்போது, இந்த வாக்குத்தத்தம் பேதுருவின் நம்பிக்கையைப் பலப்படுத்துவதாக இருக்கும். இந்த வேதபாரகரும் பரிசேயரும் தாங்களே பூமியில் தேவனுடைய பிரதிநிதிகள் என்று சொல்லி வந்தார்கள். பேதுருவும் ஒரு காலத்தில் அப்படியே நினைத்திருக்க வேண்டும்.

இந்தக் குறிப்பிட்ட அர்த்தம் அவர் இரண்டாவது முறை இதே வார்த்தைகளைப் பயன்படுத்துவதோடுகூட எளிதாகப் பொருந்தி வருகிறது. இரண்டு அதிகாரங்கள் கழித்து நாம் அதைப் பார்க்கிறோம்

> உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றஞ்செய்தால், அவனிடத்தில் போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து; அவன் உனக்குச் செவிகொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக்கொண்டாய். அவன் செவிகொடாமற்போனால், இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே சங்கதிகளெல்லாம் நிலைவரப்படும்படி, இரண்டொருவரை உன்னுடனே கூட்டிக்கொண்டு போ. அவர்களுக்கும் அவன் செவிகொடாமற்போனால், அதைச் சபைக்குத் தெரியப்படுத்து; சபைக்கும் செவிகொடாதிருப்பானானால், அவன் உனக்கு அஞ்ஞானியைப் போலவும் ஆயக்காரனைப்போலவும் இருப்பானாக. *பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும்; பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்* என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். அல்லாமலும், உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்'' [மத். 18:15—20 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

கட்டுதலையும் கட்டவிழ்த்தலையும் குறித்துக் குறிப்பிடப்பட்டிருக்கும் இந்த இரண்டாவது பகுதியில் இயேசுவானவர் தீய





ஆவிகளைக் கட்டுவதைக் குறித்துக் குறிப்பிட்டிருக்கிறார் என்று சொல்லக்கூடிய வகையில் இந்தப் பகுதியில் ஒன்றும் சொல்லப்பட்டிருக்கவில்லை. இங்கே சபை ஒழுங்கு நடவடிக்கையைக் குறித்துச் சொல்லியவுடனே இயேசுவானவர் இந்த வார்த்தைகளைச் சொல்லியிருக்கிறார்.

இந்தப் பகுதியிலுள்ள கட்டுதலும் கட்டவிழ்த்தலையும் குறித்து இயேசுவானவர் சொல்லியதின் அர்த்தம் இதுவாகவே இருக்க வேண்டும்: ''யார் சபையில் இருக்க வேண்டும் யார் சபையில் இருக்கக் கூடாது என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பை நான் *உங்களுக்குக்* கொடுக்கிறேன். நீங்கள் உங்கள் பொறுப்புக்களை நிறைவேற்றும்போது பரலோகம் அதற்கு ஆதரவாக இருக்கும்.''

இன்னும் பரந்த நோக்கில் பார்ப்போமானால் ''நீங்கள் பூமியில் பரலோகத்தின் பிரதிநிதிகளாக அதிகாரம் பெற்றிருக்கிறீர்கள். உங்களுக்குப் பொறுப்புக்கள் உள்ளன. உங்கள் பொறுப்புக்களை நீங்கள் நிறைவேற்றும்போது பரலோகம் உங்களுக்கு ஆதரவாக இருக்கும்'' என்பதே இயேசுவானவர் சொல்லியதின் அர்த்தமாக இருக்க வேண்டும்.

## பின்னணியோடு பார்க்கும்போது கட்டுதலும் கட்டவிழ்த்தலும்

உடனடிப் பின்னணியோடும் புதிய ஏற்பாட்டின் எஞ்சிய பகுதியின் பரந்த பின்னணியோடும் சேர்த்துப் பார்க்கும்போது இந்த அர்த்தம் பொருத்தமானதாக இருக்கிறது.

உடனடிப் பின்னணியைப் பொருத்தவரையில், கட்டுதலையும் கட்டவிழ்த்தலையும் குறித்து இயேசுவானவர் சொல்லியதைத் தொடர்ந்து அவர் ''அல்லாமலும், உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் *பூமியிலே* ஒருமனப்பட்டிருந்தால், *பரலோகத்தில்* இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்'' என்று சொல்லுவதை நாம் பார்க்கிறோம் [மத். 18:19 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

இங்கே மறுபடியுமாக ''நீங்கள் பூமியில் எதைச் செய்கிறீர்களோ அதற்குப் பரலோகத்தில் ஆதரவு இருக்கும்'' என்ற கருப்பொருளைக் காண்கிறோம். பூமியில் ஜெபிக்கும் பொறுப்பும் அதிகாரமும் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. அப்படி நாம் செய்யும்போது, பரலோகம் அதற்குப் பதிலளிக்கும். ''*அல்லாமலும்*'' என்ற வார்த்தையோடு இயேசுவானவர் தொடங்கியிருப்பது முந்தைய வாசகத்தோடுகூடிய விரிவாக்கத்தை அவர் கொடுப்பதைச் சுட்டிக்காட்டுவதுபோலத் தோன்றுகிறது.

இந்தப் பகுதியில் இயேசுவின் இறுதி வார்த்தைகளாகிய ''ஏனெனில், இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்''

என்ற வாசகமும் ''பரலோகம் உங்களுக்கு ஆதரவாக இருக்கும்'' என்ற கருப்பொருளைச் சேர்ந்ததாக இருக்கிறது. விசுவாசிகள் அவருடைய நாமத்தில் கூடிவரும்போது, பரலோகத்தில் இருக்கும் அவர் அவர்களின் நடுவில் வருகிறார்.

இந்தப் பகுதியைக் குறித்த என்னுடைய அர்த்தத்தை நீங்கள் முழுவதுமாக ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும், பட்டணங்களுக்கு மேலாகத் தீய ஆவிகளைக் கட்டுவதைக் குறித்து இயேசுவானவர் பேசுகிறார் என்று நீங்கள் விவாதிப்பீர்களானால் அதற்கு உறுதியான ஆதாரத்தைக் கொடுக்க வேண்டியிருக்கும்!

## தேவனுடைய தெய்வீக திட்டம் சாத்தானையும் உள்ளடக்கியிருக்கிறது

சாத்தானும் அவனுடைய தூதர்களும் கலகம்செய்த சேனையாக இருக்கிறார்கள். ஆனால் அது தேவனுடைய கட்டுப்பாட்டுக்கு அப்பாற் பட்ட சேனையாக இருக்கவில்லை. இந்தக் கலகம் செய்யும் சேனையினர் படைக்கப்பட்டபோது இப்படியில்லாவிட்டாலும் அவர்கள் தேவனால் படைக்கப்பட்டவர்களேயாவர். பவுல் இப்படி எழுதியிருக்கிறார்:

> ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் *காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும்* அவரைக்கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது [கொலோ. 1:16 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

இயேசுவானவர் சாத்தான் உட்பட அணிவரிசையிலுள்ள ஒவ்வொரு தூதனையும் சிருஷ்டித்தார். அவர்களில் சிலர் எதிர்த்துக் கலகம் செய்வார்கள் என்பதை அவர் அறிந்திருந்தாரா? ஆம், நிச்சயமாக அறிந்திருந்தார். அப்படியானால் அவர் ஏன் அவைகளைச் சிருஷ்டித்தார்? தமது திட்டத்தை நிறைவேற்ற அவரால் கலகம்செய்த தூதர்களைப் பயன்படுத்த முடியும் என்பதற்காகவே அவர் அவைகளைச் சிருஷ்டித்தார். அவைகளுக்காக அவர் எந்த நோக்கமும் கொண்டிருக்க வில்லை, அவரால் அவைகளை நரகத்தில் தள்ளியிருக்க முடியும். கலகம்செய்த சில தூதர்களை அவர் அப்படிச் செய்திருக்கிறார் என்று நாம் பார்க்கிறோம் [பார்க்க, 2 பேதுரு 2:4]. ஒரு நாள் சாத்தானுக்கும் அவர் அப்படியே செய்வார் [பார்க்க, வெளி. 20:2].

சாத்தானும் அவனுடைய தூதர்களும் பூமியில் செயல்படத் தேவன் அனுமதிப்பதற்குக் காரணம் இருக்கிறது. அவர் அப்படிச் செய்ய





வேண்டியிராவிட்டால் அவை முழுவதுமாக அகற்றப்பட்டிருக்கலாம். சாத்தான் பூமியில் செயல்படத் தேவன் அனுமதித்ததற்கான காரணங்கள் எவை? எல்லோரும் எல்லாக் காரணங்களையும் புரிந்துகொள்ள முடியும் என்று நான் நினைக்கவில்லை. என்றாலும் தேவன் சில காரணங்களைத் தமது வார்த்தையில் வெளிப்படுத்தியிருக்கிறார்.

முதலாவதாக, மனிதர்களைச் சோதிக்க வேண்டும் என்ற தமது நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகத் தேவன் சாத்தான் கட்டுப்பாட்டோடு பூமியில் செயல்படுவதற்கு அனுமதிக்கிறார். மானிடர் யாருக்கு ஒத்துழைப்புக் கொடுக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ளுவதற்குச் சாத்தான் மற்றொரு தெரிவாக இருக்கிறான். மனிதர்கள் அதை அறிந்திருந்தாலும் சரி, அறிந்திராவிட்டாலும் சரி, அவர்கள் தேவனுக்கோ அல்லது சாத்தானுக்கோ கீழ்ப்படிருக்கிறார்கள். தேவனால் கொடுக்கப்பட்ட சுயாதீன சித்தத்தைக் கொண்டிருந்த ஆதாமையும் ஏவாளையும் சாத்தான் சோதிக்கும்படி தேவன் அனுமதித்தார். சுயாதீன சித்தத்தைக் கொண்டிருப்பவர்களின் இருதயத்தில் கீழ்ப்படிதல் இருக்கிறதா அல்லது கீழ்ப்படியாமை இருக்கிறதா என்பதைக் கண்டறியும்படி அவர்கள் எல்லோருமே சோதிக்கப்பட வேண்டும்.[89]

இரண்டாவதாக, தீமையைச் செய்கிறவர்களின்மீது தமது கோபாக்கினையைச் செயல்படுத்தும் முகவராக தேவன் சாத்தானைக் கட்டுப்பாட்டோடு செயல்பட அனுமதிக்கிறார். தேவன் தண்டிக்கப்பட வேண்டியவர்களுக்குத் தீய ஆவிகளின் மூலம் தண்டனையை அனுப்பியது குறித்த வேதாகம எடுத்துக்காட்டுகளின் மூலம் நான் இதை ஏற்கெனவே நிரூபித்திருக்கிறேன். தேவன் உலகத்திலுள்ள இரட்சிக்கப் படாத மக்களை ஆளுகைசெய்யும்படி சாத்தானை அனுமதித்திருப்பதே அவர்கள்மீதான அவருடைய கோபாக்கினையைச் சுட்டிக்காட்டுகிறது. தீய மனிதர்கள் அவர்களை ஆளுகைசெய்யும்படி அனுமதிப்பதின்மூலம் தேவன் தீய மக்களின் கூட்டங்களை நியாயந்தீர்க்கிறார். இந்தத் தீய ஆளுநர்களின்மூலம் அவர்களுடைய வாழ்க்கை பரிதாபகரமாக்கப் படுகிறது.

மூன்றாவதாக, தேவன் தாம் மகிமைப்படுத்தப்படும்படியாகச் சாத்தானை இந்த உலகத்தில் கட்டுப்பாட்டோடு செயல்படும்படி அனுமதிக்கிறார். ''பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்'' [1 யோவான் 3:8]. ஒவ்வொரு முறை தேவன் சாத்தானின் ஒரு கிரியை அழிக்கும்போதும் அது அவருடைய வல்லமையையும் ஞானத்தையும் மகிமைப்படுத்துகிறது.

[89] *தேவனுடைய பரீட்சைகள்* குறித்த என்னுடைய ஆங்கில நூலில் இதைக் குறித்து அதிகமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எங்களுடைய இணைய தளத்தில் இதை வாசிக்கலாம்.

## இயேசு துரைத்தனங்களுக்கும் வல்லமைகளுக்கும் தலைவராக இருக்கிறார்

கிறிஸ்தவர்களாகிய நாம் இரண்டு வகைகளில் சாத்தானோடும் அவனுடைய தூதர்களோடும் இடைபடும் பொறுப்பைப் பெற்றிருக்கிறோம்: நமது சொந்த வாழ்க்கையில் அவைகளை எதிர்த்து நிற்பது [யாக். 4:7] மற்றும் அவைகளிலிருந்து விடுபட விரும்புகிறவர்களிடமிருந்து அவைகளை வெளியே விரட்டுவது [மாற்கு 16:17]. மற்றவர்களைப் பிடித்திருக்கும் பிசாசுகளை விரட்டும் அனுபவத்தைப் பெற்றிருக்கிறவர்கள், பிசாசினால் பிடிக்கப்பட்டவர் விரும்பாவிட்டால், பிசாசை விரட்டுவது முடியாத காரியம் என்பது பொதுவான விதி என்பதை அறிந்திருக்கிறார்.[90] தேவன் ஒவ்வொரு நபரின் சுயாதீன சித்தத்தையும் மதிக்கிறார், ஒருவர் தீய சக்திக்கு ஒப்புக்கொடுப்பதை விரும்புவார் என்றால் தேவன் அவரைத் தடுப்பதில்லை.

நாம் பூகோளப் பகுதிகளில் ஆளுகைசெய்யும் ஆவிகளை இழுத்துப் போட முடியாது என்பதற்கு இதுவும் மற்றொரு காரணமாகும். மக்கள் அடிமைத்தனத்தில் இருப்பதைத் தெரிந்துகொண்டிருப்பதினால்தான் அந்தத் தீய ஆவிகள் அவர்களைச் சிறைப்படுத்தியிருக்கின்றன. அவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிப்பதின்மூலம் நாம் தெரிந்து கொள்ளும் வாய்ப்பை அவர்களுக்குக் கொடுக்கிறோம். அவர்கள் சரியானதைத் தெரிந்துகொள்ளுவார்களானால் அவர்கள் சாத்தானிடமிருந்தும் அவனுடைய தீய ஆவிகளிடமிருந்தும் விடுவிக்கப்படுவார்கள். ஆனால் அவர்கள் தவறானதைத் தெரிந்துகொண்டு, மனந்திரும்பாமல் இருப்பதைத் தெரிந்துகொள்ளுவார்களானால், சாத்தான் அவர்களைச் சிறைப்பிடித்து வைத்திருக்கும்படி தேவன் அனுமதிப்பார்.

இயேசுவானவர் ''சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிறார்'' என்று சொல்லப்பட்டிருக்கிறது [கொலோ. 2:10]. *துரைத்தனம்* [ஆர்க்கி] மற்றும் *அதிகாரம்* [எக்சௌஸியா] இவைகளைக் குறிக்கும் கிரேக்கச் சொற்கள் பெரும்பாலும் மானிட அரசியல் தலைவர்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டாலும், புதிய ஏற்பாட்டில் பிசாசுகளின் தலைவர்களைக் குறிக்கவும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. எபேசியர் 6:12 வசனத்தில் துரைத்தனங்களுக்கும் [ஆர்க்கி] அதிகாரங்களுக்கும் [எக்சௌஸியா] எதிரான போராட்டம் கிறிஸ்தவர்களுக்கு உண்டு என்று குறிப்பிடப்பட்டிருப்பது இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

[90] இதற்கு விதிவிலக்காக இருப்பவர்கள் சுயாதீனத்துக்கான தங்களுடைய விருப்பத்தைத் தெரிவிக்க முடியாமல் முழுவதுமாகத் தீய ஆவிகளால் கட்டுப்படுத்தப்பட்டிருக்கும் மக்களாவர். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் விடுதலையைக் கொண்டுவர ஆவியானவரின் விசேஷித்த வரங்கள் தேவையாகும். ஆவியானவர் தமது சித்தப்படி இந்த வரங்களைக் கொடுக்கிறார்.





கொலோசெயர் 2:10 வசனத்தில் பவுல் இயேசுவானவர் துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் தலைவராக இருக்கிறார் என்பதைப் பின்னணியோடு சேர்ந்து நாம் ஆராயும்போது, அவர் ஆவிக்குரிய சக்திகளைக் குறித்துப் பேசுகிறார் என்பது தெளிவாகிறது. எடுத்துக்காட்டாக, நான்கு வசனங்கள் கழித்து அவர் இயேசுவானவரைக் குறித்து ''*துரைத்தனங்களையும் அதிகாரங்களையும்* உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார்'' என்று எழுதியிருக்கிறார் [கொலோ. 2:15].

இயேசுவானவர் ஆவிக்குரிய துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் தலைவராக இருப்பாரானால், அவர் அவர்களின்மீது ராஜரீக உரிமை கொண்டிருக்கிறார் என்பது தெளிவாகிறது. இது தீய ஆவிகளை வணங்கிக்கொண்டிருந்த பழங்குடிகளுக்கு ஒரு அற்புதமான வெளிப்பாடாக இருக்கிறது. அவர்கள் தங்களை ஆளுகைசெய்யும் தீய ஆவிகளைக்குறித்த பயத்தில் விக்கிரகங்களை வணங்கிக்கொண்டிருந்தார்கள்.

### தப்புவதற்கான ஒரே வழி

மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசிப்பதே தீய ஆவிகளினால் பிடிக்கப்பட்டிருப்பதிலிருந்து தப்புவதற்கு ஒரே வழியாகும். தேவனே இப்படித் தப்புவதற்கான வழியை அருளியிருக்கிறார். எவரும் பட்டணத்துக்கு மேலான தீய ஆவிகளைக் கட்டி உங்களை விடுவிக்க முடியாது, அல்லது பாதியளவுக்கு உங்களை விடுவிக்க முடியாது. ஒருவர் மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசிக்கும் வரையில் தேவ கோபாக்கினையின் கீழாக இருக்கிறார் [பார்க்க, யோவான் 3:36]. இது பிசாசின் சக்திகளினால் பிடிக்கப்பட்டிருப்பதையும் உள்ளடக்கியதாகும்.

எனவேதான் பெரிய ஆவிக்குரிய யுத்த மாநாடுகள் நடத்தப்பட்டிருக்கும் பட்டணங்களிலும் அளக்கக்கூடிய மாற்றங்கள் ஏற்படுவதில்லை. ஏனென்றால் அந்தப் பகுதிகளில் ஆளுகை செய்யும் தீய ஆளுகைகளை எதுவும் பாதிக்கவில்லை. கிறிஸ்தவர்கள் இரவும் பகலும் துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் எதிராகக் குரல் கொடுக்கலாம், ''யுத்தம்பண்ணும் நாவுகளினால்'' பிசாசுகளைத் துன்புறுத்த முயலலாம், ''இந்தப் பட்டணத்துக்கு மேலாகத் தீய ஆவிகளாகிய உங்களைக் கட்டுகிறேன்'' என்று இலட்சக்கணக்கான தடவைகள் சொல்லலாம், அவர்கள் இவை எல்லாவற்றையும் விமானங்களில் சென்று செய்யலாம், அல்லது வானளாவும் கட்டிடங்களின்மீது நின்று செய்யலாம் [சிலர் அப்படியே செய்கிறார்கள்], அவர்கள் இப்படி மூடத்தனமாகச் செய்வதைக் கண்டு பிசாசுகள் நகைக்குமேயொழிய வேறு மாற்றம் எதுவும் ஏற்படப் போவதில்லை.

இப்போது ஆவிக்குரிய யுத்தம் குறித்த ஆறாவது நவீன கட்டுக் கதையைப் பார்ப்போம்.

## கட்டுக்கதை # 6: ‘‘ஆளுகைசெய்யும் ஆவிகளுக்கு எதிரான ஆவிக்குரிய யுத்தம் ஆற்றலுள்ள சுவிசேஷப் பணிக்கான கதவுகளைத் திறந்துகொடுக்கிறது.’’

தேவனுடைய ராஜ்யம் விரிவாக்கப்படுவதைக் காண வேண்டும் என்ற வாஞ்சையின் காரணமாகவே பல கிறிஸ்தவர்கள் ஆளுகை செய்யும் ஆவிகளுக்கு எதிரான ஆவிக்குரிய போராட்டத்தில் அதிக ஊக்கத்துடன் ஈடுபடுகிறார்கள். இந்த நோக்கத்துக்காக அவர்களைப் பாராட்ட வேண்டும். ஒவ்வொரு கிறிஸ்தவனும் அதிகமதிகமான மக்கள் சாத்தானின் பிடியிலிருந்து தப்புவதைக் காண வாஞ்சிக்க வேண்டும்.

என்றாலும், தேவனுடைய ராஜ்யத்தைக் கட்டியெழுப்ப நாம் தேவனுடைய வழிமுறைகளைப் பின்பற்றுவது முக்கியமாகும். எது கிரியை செய்கிறது, எது நேரத்தை வீணாக்குகிறது என்பதைத் தேவன் அறிந்திருக்கிறார். தமது ராஜ்யத்தின் விரிவாக்கத்தைக் குறித்த நமது பொறுப்புக்களை அவர் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார். நமது நற்செய்திப் பணியின் ஆற்றலைப் பெருகச் செய்வதற்காக வேதாகமத்தில் காணப்படாத ஒன்றைச் செய்ய முடியும் என்று நினைப்பதும், இயேசுவோ, பேதுருவோ அல்லது பவுலோ தங்கள் ஊழியங்களில் செய்ய முயலாத ஒன்றைச் செய்வதும் மூடத்தனமான காரியங்களாகும்.

ஏன் அதிகமான கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய யுத்தமானது ஆற்றலுள்ள நற்செய்திப் பணிக்கான கதவுகளைத் திறந்துகொடுக்கும் என்று நினைக்கிறார்கள்? அவர்கள் பெரும்பாலும் இப்படி விவாதிக்கிறார்கள்: ‘‘சாத்தான் இரட்சிக்கப்படாத மக்களின் மனதைக் குருடாக்கியிருக்கிறான். எனவே அவன் அவர்களைக் குருடாக்குவதைத் தடுப்பதற்காக நாம் சாத்தானுக்கு எதிரான ஆவிக்குரிய யுத்தத்தில் ஈடுபட வேண்டும். குருடாக்குகிறவர்கள் அகற்றப்படும்போது அதிகமான மக்கள் சுவிசேஷத்தை விசுவாசிப்பார்கள்’’ என்று அவர்கள் சொல்லுகிறார்கள். இது உண்மையா?

சாத்தான் இரட்சிக்கப்படாத மக்களின் மனதைக் குருடாக்கியிருக்கிறான் என்பதில் எந்தவித ஐயமுமில்லை. பவுல் இப்படி எழுதியிருக்கிறார்:

> எங்கள் சுவிசேஷம் மறைபொருளாயிருந்தால், கெட்டுப்போகிறவர்களுக்கே அது மறைபொருளாயிருக்கும். தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர் களுடைய மனதைக் குருடாக்கினான் [2 கொரி. 4:3–4].





*இரட்சிக்கப்படாத மக்கள் அதிகமான அளவில் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளும்படியாக, ஆளுகை செய்யும் ஆவிகளை வீழ்த்தும்படி ஆவிக்குரிய யுத்தத்தில் ஈடுபடும்படி கொரிந்திய கிறிஸ்தவர்களுக்குத் தூண்டுதலளிக்கும்படியாகவே பவுல் அப்போஸ்தலன் இதை எழுதினாரா?* என்பதுதான் கேள்வியாகும்.

*இல்லை* என்பதே பதிலாகும். இதற்குப் பல தெளிவான காரணங்கள் இருக்கின்றன.

முதலாவதாக, பவுல் தொடர்ந்து ‘‘ஆதலால் கொரிந்தியர்களே, சாத்தான் அவிசுவாசிகளின் மனதைக் குருடாக்கியிருக்கிறபடியால், நீங்கள் ஆவிக்குரிய யுத்தத்தில் ஈடுபட்டு ஆளுகைசெய்யும் ஆவிகளை வீழ்த்தி, குருடாக்குகிறவர்களை விரட்ட வேண்டும்’’ என்று எழுதியிருக்கவில்லை. மாறாக, அடுத்து கிறிஸ்துவைப் பிரசங்கிப்பதைக் குறித்தே அவர் எழுதியிருக்கிறார். இதுவே ஆவிக்குரிய குருட்டுத்தனத்தை அகற்றுவதற்கான வழியாகும்.

இரண்டாவதாக, பவுல் தனது நிருபங்களில் எங்கேயும் நற்செய்தி முயற்சிகளின் விளைவுகளை அதிகரிக்கச் செய்யும்படியாகப் பட்டணங்களுக்கு மேலான ஆளுகைகளை வீழ்த்த வேண்டும் என்று சொல்லியிருக்கவில்லை.

மூன்றாவதாக, பவுல் அப்போஸ்தலனின் நிருபங்கள் எல்லாவற்றையும் வாசிக்கும்போது, அவிசுவாசிகள் அவிசுவாசிளாகவே இருப்பதற்குச் சாத்தான் அவர்களைக் கட்டிவைத்திருப்பதே *அடிப்படைக்* காரணம் என்று அவர் நம்பவில்லை என்பது தெளிவாகிறது. சாத்தான் கட்டியிருப்பது ஒரு காரணமாக இருந்தாலும், அதுவே முக்கியமான காரணமாகவோ அல்லது ஒரே காரணமாகவோ இருக்கவில்லை. *மக்களின் இருதயக் கடினமே அவர்களை இரட்சிக்கப்படாமல் தடுப்பதற்கு அடிப்படைக் காரணமாகும்.* சாத்தானால் எல்லோரையும் குருடாக்க முடியவில்லை என்பதிலிருந்தே இது தெளிவாகிறது. சிலர் சத்தியத்தைக் கேட்கும்போது, அதை விசுவாசிக்கிறார்கள். இதன்மூலம் தாங்கள் முன்னால் விசுவாசித்த பொய்களை அவர்கள் புறக்கணிக்கிறார்கள். சாத்தான் கட்டுவதே அவர்களுடைய அவநம்பிக்கைக்குக் காரணம் என்பதைவிட, அவர்களுடைய அவநம்பிக்கையே சாத்தான் கட்டுவதற்குக் காரணம் என்பதே உண்மையாகும்.

### உணர்வில்லாத இருதயம்

எபேசியருக்குத் தான் எழுதிய நிருபத்தில் கிறிஸ்தவர்களல்லாதவர்கள் ஏன் அவநம்பிக்கையிலேயே இருக்கிறார்கள் என்பதைப் பவுல் அப்போஸ்தலன் தெளிவாக விளக்கியிருக்கிறார்:

> ஆதலால், கர்த்தருக்குள் நான் உங்களுக்குச் சாட்சியாகச் சொல்லி எச்சரிக்கிறது என்னவெனில்,

> மற்றப் புறஜாதிகள் தங்கள் வீணான சிந்தையிலே நடக்கிறதுபோல நீங்கள் இனி நடவாமலிருங்கள். *அவர்கள் புத்தியில் அந்தகாரப்பட்டு* [சாத்தானால் கட்டப்படுவதைக் குறிக்கலாம்], *தங்கள் இருதயக் கடினத்தினால்* தங்களில் இருக்கும் அறியாமையினாலே தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராயிருந்து; *உணர்வில்லாதவர்களாய்*, சகலவித அசுத்தங்களையும் ஆவலோடே நடப்பிக்கும்படி, தங்களைக் காமவிகாரத்திற்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள் [எபே. 4:17–19 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

அவிசுவாசிகள் ''தங்களில் இருக்கும் அறியாமையின்'' காரணமாகத் தேவனுக்கு அந்நியராயிருக்கிறார்கள் என்று பவுல் சொல்லியிருக்கிறார். அவர்கள் ஏன் அறியாமையில் இருக்கிறார்கள்? அவர்கள் ஏன் ''புத்தியில் அந்தகாரப்பட்டிருக்கிறார்கள்''? அவர்களுடைய இருதயக் கடினமே இதற்குக் காரணமாகும். அவர்கள் ''உணர்வில்லாதவர்களாக'' ஆகியிருக்கிறார்கள். மக்கள் இரட்சிக்கப்படாதவர்களாக இருப்பதற்கு இதுவே வேரானதும் அடிப்படையானதுமான காரியமாகும்.[91] அவர்கள் தங்களுக்குத் தாங்களே குற்றவாளிகளாக இருக்கிறார்கள். சாத்தான் அவர்கள் நம்ப விரும்பும் பொய்களை மட்டுமே கொடுக்கிறான்.

விதைப்பவன் மற்றும் நிலத்தைக் குறித்த இயேசுவானவரின் உவமைக்கதை இந்தக் கருத்தைத் தெளிவாகச் சித்தரிக்கிறது:

> விதைக்கிறவன் ஒருவன் விதையை விதைக்கப் புறப்பட்டான்; அவன் விதைக்கையில் சில விதை வழியருகே விழுந்து மிதியுண்டது, ஆகாயத்துப் பறவைகள் வந்து அதைப் பட்சித்துப் போட்டது... அந்த உவமையின் கருத்தாவது: விதை தேவனுடைய வசனம். வழியருகே விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்கிறவர்களாயிருக்கிறார்கள், அவர்கள் விசுவாசித்து இரட்சிக்கப்படாதபடிக்குப் பிசாசானவன் வந்து, அவ்வசனத்தை அவர்கள் இருதயத்திலிருந்து எடுத்துப் போடுகிறான் [லூக்கா 8:5, 11–12].

சுவிசேஷத்தைக் குறிக்கும் விதையானது வழியருகே விழுந்து மிதியுண்டது என்பதைக் கவனியுங்கள். மக்கள் அடிக்கடி நடந்து கடினமாகியிருக்கும் பாதையை அதனால் துளைக்க முடியவில்லை. பிசாசைக் குறிக்கும் பறவைகளால் அவைகளைத் திருடுவது எளிதாக இருந்தது.

[91] ரோமர் 1:18–32 வசனங்களில் பவுல் அவிசுவாசிகளைக் குறித்து விவரிப்பதும் இதே கருத்துக்கு ஆதரவாக இருக்கிறது.





வெவ்வேறு வகைப்பட்ட நிலங்களோடு மனிதருடைய இருயத்தின் நிலையை [அவர்கள் சுவிசேஷத்தை எப்படி ஏற்றுக் கொள்ளுகிறார்கள் என்பதை] ஒப்பிட்டுக் கூறுவதே இந்த உவமைக் கதையின் நோக்கமாகும். சிலர் ஏன் விசுவாசிக்கிறார்கள், சிலர் ஏன் விசுவாசிக்கவில்லை என்பதை இயேசு விளக்குகிறார்: அது அவர்களையே சார்ந்திருக்கிறது.

சாத்தானுக்கு இந்தச் சித்திரத்தில் எந்த இடம் இருக்கிறது? அவனால் கடினமான இருதயத்தைக் கொண்டவர்களிடமிருந்து வசனத்தைத் திருட மட்டுமே முடிகிறது. விதைகள் ஏன் முளைக்கவில்லை என்பதற்கு இந்த உவமைக்கதையில் வரும் பறவைகள் இரண்டாம் பட்சமான காரணமாகவே இருக்கின்றன. மண்ணே அடிப்படைப் பிரச்சினையாக இருக்கிறது. மண்ணின் கடினத்தன்மையின் காரணமாகவே பறவைகளால் விதைகளைக் கொத்திச் செல்ல முடிந்தது.

சுவிசேஷத்தைப் பொருத்தவரையிலும் இதுவே உண்மையாக இருக்கிறது. மக்களின் இருதயம் கடினப்பட்டிருப்பதே அடிப்படைக் காரணமாகும். மக்கள் சுவிசேஷத்தைப் புறக்கணிக்கும்போது அவர்கள் தாங்கள் குருடாயிருப்பதைத் தெரிந்துகொள்ளுகிறார்கள். அவர்கள் சத்தியத்தை விசுவாசிப்பதைவிடப் பொய்களை நம்புவதையே விரும்புகிறார்கள். இயேசுவானவர் ''ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியினால் அவர்கள் ஒளியைப்பார்க்கிலும் *இருளை விரும்புகிறதே* அந்த ஆக்கினைத்தீர்ப்புக்குக் காரணமாயிருக்கிறது'' என்று சொல்லியியிருக்கிறார் [யோவான் 3:19 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

சாத்தான் அவர்களைக் கட்டுவதை நிறுத்திவிடுவான் என்றால், மக்கள் சுவிசேஷத்தை விசுவாசிக்குமளவுக்கு நல்ல இருதயமுடைய உண்மையுள்ள மக்களாக இருக்கிறார்கள் என்று நாம் நம்பும்படி வேதாகமம் நம்மை வழிநடத்தவில்லை. இதற்கு மாறாக, வேதாகமம் மானிட குணாதிசயத்தைக் குறித்த மோசமான சித்திரத்தையே கொடுக்கிறது. ஒருவன் பாவத்தைத் தெரிந்துகொள்ளுவதைக் குறித்துத் தேவன் தனிப்பட்ட முறையில் அவனைப் பொறுப்புள்ளவனாக ஆக்குவார். அவர் நியாயத்தீர்ப்பின் சிங்காசனத்தில் வீற்றிருக்கும்போது, ''பிசாசானவனே என்னை அதைச் செய்ய வைத்தான்'' என்பதுபோன்ற சாக்குப்போக்குகளை அவர் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.

### சாத்தான் எப்படி மக்களின் சிந்தைகளைக் கட்டுகிறான்?

சாத்தான் எப்படி மக்களின் சிந்தைகளைக் கட்டுகிறான்? மக்கள் மந்த புத்தியுள்ளவர்களாக ஆகும்படி அவன் புதிரான எதையாவது மக்களின்

தலையில் ஊற்றுகிறானா? ஒரு பிசாசு அவர்களுடைய மூளையைப் பற்றிக்கொண்டு அதனுடைய சிந்திக்கும் திறனை அழிந்துபோகும்படி செய்கிறதா? இல்லை. *மக்கள் நம்பும்படி பொய்களைச் சொல்லி* சாத்தான் அவர்களுடைய சிந்தைகளைக் கட்டுகிறான்.

இயேசுவானவர் தங்கள் பாவங்களுக்காக மரித்த தேவ குமாரன் என்ற சத்தியத்தை மக்கள் மெய்யாகவே விசுவாசிப்பார்களானால், ஒரு நாள் அவருக்கு முன்னால் நின்று தங்கள் வாழ்க்கைக்கான கணக்கைக் கொடுக்க வேண்டும் என்பதை மெய்யாகவே உணர்ந்திருப்பார்களானால், அவர்கள் மனந்திரும்பி, அவரைப் பின்பற்றுகிறவர்களாக ஆகியிருப்பார்கள். ஆனால் அவர்கள் இந்தக் காரியங்களை விசுவாசிக்கவில்லை. என்றாலும் அவர்கள் *ஒன்றை* விசுவாசிக்கிறார்கள். தேவன் இல்லை என்றோ, மரணத்துக்குப் பிறகு வாழ்க்கை இல்லை என்றோ அவர்கள் நம்பலாம். அவர்கள் மறுபிறவியில் நம்பிக்கை வைத்திருக்கலாம், தேவன் ஒருபோதும் தங்களை நரகத்துக்கு அனுப்ப மாட்டார் என்று நினைக்கலாம். தங்கள் சமயப்பிரகாரமான கிரியைகள் தங்களைப் பரலோகத்துக்குக் கொண்டுசெல்லும் என்று அவர்கள் நினைக்கலாம். ஆனால் அவர்கள் எதை விசுவாசித்தாலும், அது சுவிசேஷம் இல்லை. அவைகளை ஒரே வார்த்தையில் தொகுத்துக் கூறலாம்: *பொய்கள்.* அவர்கள் சத்தியத்தை விசுவாசிக்கவில்லை, எனவே சாத்தான் பொய்களின்மூலம் அவர்களைக் குருடாக்கி வைத்திருக்கிறான். அவர்கள் தங்களைத் தாங்களே தாழ்த்தி, சத்தியத்தை விசுவாசிப்பார்களானால், சாத்தானால் இனிமேலும் அவர்களைக் குருடாக்க முடியாது.

### அந்தகாரத்தின் பொய்கள்

சாத்தானின் ராஜ்யம் வேதவசனத்தில் ''இருளின் அந்தகாரம்'' என்று குறிப்பிடப்படுகிறது [கொலோ. 1:13]. அந்தகாரம் என்பது சத்தியம் இல்லாததை, வெளிச்சம் இல்லாததை, உள்ளறிவு இல்லாததைக் குறிக்கிறது. நீங்கள் அந்தகாரத்தில் இருக்கும்போது, உங்கள் கற்பனைக்கு ஏற்றபடி நடக்கிறீர்கள், இறுதியில் காயப்படுகிறீர்கள். சாத்தானின் இருளின் அந்தகாரத்திலும் அது இப்படியேதான் இருக்கிறது. அதில் இருப்பவர்கள் தங்கள் கற்பனைகளின் மூலமாக அதில் கடந்து செல்லுகிறார்கள், சாத்தானே அவர்களுடைய கற்பனைகளைப் பொய்யினால் நிரப்பியிருக்கிறான். அவர்கள் ஆவிக்குரிய அந்தகாரத்தில் இருக்கிறார்கள்.

எனவே சாத்தானின் ராஜ்யத்தைப் பூகோள எல்லைகளால் வரையறை செய்யப்பட முடியாத ஆனால் பொய்களின்மீது நம்பிகை வைக்கும் ராஜ்யம் என்று நாம் குறிப்பிடலாம். இருளின் ராஜ்யம் ஒளியின் ராஜ்யம் இருக்கும் அதே இடத்தில் இருக்கிறது. சத்தியத்தை விசுவாசிப்பவர்களின்





மத்தியிலேயே பொய்யை நம்புகிறவர்களும் இருக்கிறார்கள்.[92] ஏற்கெனவே பொய்களை விசுவாசிப்பவர்களுக்குச் சத்தியத்தை அறிவிப்பதே நமது அடிப்படைப் பணியாகும். ஒருவர் சத்தியத்தை விசுவாசிக்கும்போது, சாத்தானால் இனிமேலும் அவரை ஏமாற்ற முடியாது என்கிறபடியால், அவன் தனது குடிமக்களில் ஒருவரை இழந்துபோகிறான்.

இப்படியாக, அசுத்த ஆவிகளைக் கட்டுவதின் மூலமாக அல்ல, மக்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிப்பதின் மூலமாக அவிசுவாசிகளைச் சாத்தானிடமிருந்து விடுவிக்கிறோம். இயேசுவானவர் ''சத்தியத்தையும் அறிவீர்கள், *சத்தியம் உங்களை விடுதலையாக்கும்''* என்று சொல்லியிருக்கிறார் [யோவான் 8:32 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது]. ஆவிக்குரிய குருட்டுத்தன்மை சத்தியத்தினால் அகற்றப்படுகிறது.

யோவான் சுவிசேஷத்தின் அதே பகுதியில் இயேசுவானவர் தமது பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்த இரட்சிக்கப்படாதவர்களிடம் இப்படிச் சொன்னார்:

> நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்; உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்; அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷகொலைபாதகனாயிருக்கிறான்; *சத்தியம் அவனிடத்திலில்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலைநிற்கவில்லை; அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய் பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான்.* நான் உங்களுக்குச் சத்தியத்தைச் சொல்லுகிறபடியினாலே நீங்கள் என்னை விசுவாசிக்கிறதில்லை [யோவான் 8:44–45 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

தமக்கும் பிசாசுக்கும் இடையேயுள்ள முரண்பாட்டை இயேசுவானவர் எப்படி எடுத்துச் சொல்லுறார் என்பதைப் பாருங்கள். அவர் சத்தியத்தைப் பேசுகிறார். சாத்தானோ பொய்க்குப் பிதாவாக இருக்கிறான்.

இயேசுவானவர் தமது பேச்சைக் கேட்டவர்களிடம் அவர்கள் அவர்களுடைய பிதாவாகிய பிசாசினால் உண்டானவர்கள் என்று சொன்னாலும், சாத்தானைப் பொய்யன் என்று அவர் வெளியரங்கமாக்கினாலும், தாம் பேசும் சத்தியத்தை விசுவாசிப்பதற்கு அவர்களே பொறுப்பானவர்கள் என்பதைச் சுட்டிக்காட்டினார். அவர்கள் குருடாகியிருப்பது சாத்தானின் குற்றமல்ல. அது அவர்களுடைய சொந்தக்

[92] ஒவ்வொரு பூகோளப் பகுதியிலும் இந்த இரண்டு ராஜ்யங்களையும் சேர்ந்தவர்களின் சதவீதம் வேறுபட்டிருக்கும் என்பது உண்மையாகும்.

குற்றமேயாகும். *இயேசுவானவர் அவர்களைப் பொறுப்புள்ளவர்களாக ஆக்கினார்.* ''அந்தகாரத்தை நேசிப்பவர்கள்'' அந்தகாரத்திலேயே இருக்கும்படி அவர்களுக்குப் பொய்களைக் கொடுத்து சாத்தான் உதவி செய்கிறான். ஆனால் சத்தியத்தை விசுவாசிக்கும் எவரையும் சாத்தானால் ஏமாற்ற முடியாது.

இவை இப்படியிருக்கிறபடியால், நாம் தேவனுடைய வார்த்தை யாகிய சத்தியத்தின் ஒளியைப் பரவச் செய்வதே அந்தகார ராஜ்யத்தை அகற்றுவதற்கான ஒரே வழியாக இருக்கிறது. எனவேதான் இயேசு வானவர் நம்மிடம் ''உலகமெங்கும் போய்ச் சாத்தனைக் கட்டுங்கள்'' என்று சொல்லாமல் ''உலகமெங்கும் போய்ச் சுவிசேஷத்தைப் பிரசங்கி யுங்கள்'' என்று சொல்லியிருக்கிறார். பவுலின் நோக்கத்தைக்குறித்து இயேசுவானவர் அவரிடம் சொல்லும்போது ''அவர்கள் இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டு தேவனிடத் திற்கும் *திரும்பும்படிக்கு* நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும் பொருட்டு, இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன்'' என்று சொல்லியிருக்கிறார் [அப். 26:18 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது]. மக்களுக்குச் சுவிசேஷத்தின் சத்தியத்தை அறிவிக்கும்போது, அவர்கள் பொய்யை விசுவாசிப்பதற்குப் பதிலாகச் சத்தியத்தை விசுவாசித்து, இருளிலிருந்து வெளிச்சத்துக்கு வரும்படியான தீர்மானத்தை எடுப்பார் களானால், அவர்கள் சாத்தானின் ஆளுகையிலிருந்து விடுபட முடியும் என்பதை இது தெளிவாக்குகிறது. நாம் வீழ்த்தும் ஒரே அரண்கள் மக்களின் மனங்களில் கட்டப்பட்டிருக்கும் பொய்களாகும்.

### இதுவே தேவனுடைய திட்டமாகும்

தேவனே சாத்தானைப் பரலோகத்திலிருந்து பூமியில் தள்ளினார் என்பதை மறந்துவிடாதீர்கள். அவர் அவனைப் பிரபஞ்சத்தில் வேறு எங்காவது தள்ளியிருக்கலாம், அல்லது நிரந்தரமாக அடைத்திருக்கலாம். ஆனால் அவர் அதைச் செய்யவில்லை. ஏன்? ஏனென்றால் தமது இறுதியான இலக்கை எட்ட – தம்மை நேசிக்கும், தம்மைச் சேவிப்பதைத் தெரிந்துகொண்டிருக்கும் சுயாதீன சித்தத்தைக் கொண்ட மக்களின் பெரிய குடும்பத்தைப் பெறுவதே அவருடைய இலக்காகும் – அவர் சாத்தானைப் பயன்படுத்த விரும்புகிறார்.

தேவன் தம்மிடம் அன்புகாட்டும் பிள்ளைகளின் குடும்பத்தைப் பெற விரும்புகிறார் என்றால் இரண்டு காரியங்கள் தேவைப்படுகின்றன. முதலாவதாக, அவர் சுயாதீன சித்தத்தோடு மக்களைச் சிருஷ்டிக்க வேண்டியிருக்கிறது. ஏனென்றால் சுயாதீன சித்தமே அன்புக்கு அஸ்திபாரமாக இருக்கிறது. இயந்திரமனிதர்களால் அன்புகாட்ட முடியாது.

இரண்டாவதாக, அவர்கள் கீழ்ப்படிவதையோ அல்லது கீழ்ப்படியாமல் இருப்பதையோ, தம்மை நேசிப்பதையோ அல்லது தம்மை வெறுப் பதையோ இரண்டில் ஒன்றைத் தெரிந்துகொள்ளுவதை எதிர்நோக்கும் ஒரு சூழலில் அவர்களைப் பரீட்சிக்க வேண்டியிருக்கிறது. *பற்றுறுதியைக் கொண்டிருக்கிறார்களா என்பதைப் பரீட்சிக்க வேண்டுமானால், பற்றுறுதியை இழக்கும்படியான சோதனை இருக்க வேண்டும்.* இப்போது தேவன் ஏன் சாத்தானைப் பூமியில் வைத்தார் என்பதைப் புரிந்து கொள்ளு கிறோம். சாத்தான் மனிதரின் பற்றுறுதிக்கு ஒரு மாற்றுத் தெரிவாக இருப்பான். தனது பொய்களை ஏற்றுக்கொள்ளும் எவரிலும் [கட்டுப் பாட்டுக்கு உட்பட்டு] தாக்கம் விளைவிக்கும்படி அவன் அனுமதிக்கப் படுவான். எல்லோருக்கும் இரண்டில் ஒன்றைத் தெரிந்துகொள்ளும் வாய்ப்புக் கொடுக்கப்படும்: *நான் தேவனை விசுவாசிப்பேனா அல்லது சாத்தானையா? நான் தேவனுக்குச் சேவைசெய்வேனா அல்லது சாத்தானுக்கா?* மக்கள் அதை உணர்ந்திருந்தாலும் சரி, உணராவிட்டாலும் சரி அவர்கள் ஏற்கெனவே ஒரு தீர்மானத்தை எடுத்துவிட்டிருக்கிறார்கள். தவறான தீர்மானத்தை எடுத்திருக்கிறவர்கள் சுவிசேஷத்தை விசுவாசித்து, சரியான தீர்மானத்தை எடுக்கும்படி அவர்களை ஊக்குவிப்பதே நம்முடைய வேலையாகும்.

ஏதேன் தோட்டத்தில் இதுதானே நடந்தது? தேவன் நன்மை தீமையை அறியும் விருட்சத்தைத் தோட்டத்தில் வைத்து ஆதாமும் ஏவாளும் அதன் கனியைப் புசிக்கக்கூடாது என்று கட்டளையிட்டார். அவர்கள் அந்தக் கனியைப் புசிக்க வேண்டாம் என்பது தேவனுடைய விருப்பமாக இருக்குமானால், பிறகு ஏன் அவர் அந்த மரத்தை அங்கே வைத்தார்? அது பரீட்சைக்கான ஒரு களமாக இருந்தது என்பதே சரியான பதிலாகும்.

ஏவாளைச் சோதிக்கும்படி தேவன் சாத்தானை அனுமதித்தார் என்பதையும் நாம் கவனிக்கிறோம். பற்றுறுதியைச் சோதிக்க வேண்டு மானால், பற்றுறுதியை இழப்பதற்கான சோதனையும் இருக்க வேண்டும். சாத்தான் ஏவாளிடம் பொய்சொன்னான், அவள் அவன் சொன்னதை நம்பினாள். அதே வேளையில் தேவன் சொல்லியிருப்பதை விசுவாசிக்க வேண்டாம் என்றும் அவள் தீர்மானித்தாள். தங்கள் இருதயத்தில் பற்றுறுதி இல்லை என்பதை சுயாதீன சித்தத்தைக் கொண்ட முதல் மனிதர்கள் நிரூபித்துவிட்டார்கள்.

இப்படியாகவே சுயாதீன சித்தத்தைக் கொண்ட ஒவ்வொருவரும் தங்கள் வாழ்நாள் முழுவதும் சோதிக்கப்படுகிறார்கள். தேவன் சிருஷ்டி யின் மூலமாகத் தம்மை வெளிப்படுத்தியிருக்கிறார், எனவே தேவன் ஒருவர் இருக்கிறார் என்பதை எல்லோராலும் காண முடிகிறது [பார்க்க, ரோமர் 1:19–20]. தேவன் நம் ஒவ்வொருவருக்கும் தவறை விட்டுவிட்டுச் சரியானதை அறியக் கூடிய மனச்சாட்சியைக் கொடுத்திருக்கிறார் [பார்க்க, ரோமர் 2:14–16]. மக்களிடம் பொய்சொல்லி அவர்களைச் சோதிக்கச் சாத்தானுக்கும் அவனுடைய பிசாசுகளுக்கும் கட்டுப்பாட்டுக்கு

உட்பட்ட அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலமாகச் சுயாதீன சித்தத்தைக் கொண்ட எல்லோரும் சோதிக்கப்படுகிறார்கள்.

இதில் சோகமான உண்மை என்னவென்றால், சுயாதீன சித்தத்தைக் கொண்ட ஒவ்வொருவரும் கலகம்செய்து ''தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றினார்கள்'' [ரோமர் 1:25]. என்றாலும் நமது பாவத்துக்கான கிரயத்தைச் செலுத்தி, தமது குடும்பத்துக்குள் நம்மை ஏற்றுக்கொள்ளுவதற்கான வழிவகையைத் தேவன் உண்டாக்கியிருக் கிறார் என்பதற்காக நாம் அவருக்கு நன்றி கூற வேண்டும். இயேசுவின் பலி மரணமே நமது பிரச்சினைக்கு ஒரே முழுமையான பதிலாக இருக்கிறது.

### இப்போதும், பின்னாலும் சாத்தானின் மோசம்போக்குதல்

எனவே பிசாசானவனும் அவனுடைய சேனையும் இந்த உலகத்தில் கிரியைசெய்யும்படி அனுமதிக்கப்பட்டிருப்பதற்கு ஒரு காரணத்தை நாம் அறிந்திருக்கிறோம்: இருளை விரும்புகிறவர்களை மோசம்போக்குவதே இந்த நோக்கமாகும்.

வெளிப்படுத்தலின் புத்தகத்தில் ஒரு தூதன் சாத்தானை ஆயிர வருட காலம் சிறைப்படுத்திவைத்திருப்பான் என்று நாம் வாசிக்கிறோம். இப்படி இவன் சிறைப்படுத்தப்படுவதற்கான காரணம் என்ன? ''ஜனங்களை மோசம்போக்காதபடிக்கு'' அவன் அடைக்கப்பட்டிருக்கிறான் [வெளி. 20:2]. ஆயிரமாண்டு ஆளுகையின்போது இயேசுவானவர்தாமே எருசலேமில் இருந்து உலகத்தை ஆளுகைசெய்வார்.

ஆனால் இந்த ஆயிரமாண்டுகளுக்குப் பிறகு சாத்தான் சிறிது காலம் விடுவிக்கப்படுவான். இதன் விளைவு என்ன? ''பூமியின் நான்கு திசை களிலுமுள்ள ஜாதிகளாகிய கோகையும் மாகோகையும் மோசம்போக்கும் படி'' அவன் வெளிப்படுவான் [வெளி. 20:8].

அந்த வேளையில் சாத்தான் மக்களை மோசம்போக்குவதைத் தேவன் விரும்பாமல் இருப்பாரானால் அப்போது அவர் அவனை ஏன் விடுவிக்க வேண்டும்? ஏற்கெனவே அவன் ''ஜனங்களை மோசம்போக்காதபடிக்கு'' சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறானே?

சாத்தான் எவனையும் மோசம்போக்கக்கூடாது என்பதே தேவனுடைய விருப்பமாக இருக்கும். ஆனால் சாத்தானால் மோசம் போகும்படி செய்யப்படக் கூடிய மக்கள் உண்மையில் தாம் கூறியதை விசுவாசிக்காத மக்களாகவே இருப்பார்கள் என்பதையும் அவர் அறிந்திருக் கிறார். சத்தியத்தைப் புறக்கணிக்கிறவர்களை மட்டுமே சாத்தானால் ஏமாற்ற முடியும். எனவேதான் தேவன் அவன் செயல்படும்படி *இப்போதும்* அப்போதும் அனுமதிக்கிறார். சாத்தான் மக்களை ஏமாற்றும்போது அவர் களுடைய இருதயத்தின் நிலை வெளியரங்கமாக்கப்படுகிறது. அப்போது





தேவனால் ''களைகளிலிருந்து கோதுமையைப் பிரித்தெடுக்க'' முடியும் [பார்க்க, மத். 13:24–30].

ஆயிரமாண்டு ஆளுகையின் முடிவில் சாத்தான் விடுவிக்கப்படும் போது இதுதான் நடக்கும். இருளை விரும்பும் எல்லோரையும் அவன் ஏமாற்றுவான். அவர்கள் கிறிஸ்துவின் ஆளுகையை வீழ்த்தும் நோக்கத் தோடு தங்கள் சேனைகளுடன் எருசலேமைச் சூழ்ந்துகொள்ளுவார்கள். யார் தன்னை நேசிக்கிறார்கள் யார் தன்னை வெறுக்கிறார்கள் என்பதைத் தேவன் மிகச் சரியாக அறிந்துகொள்ளுவார். அவர் உடனடியாக ''வானத்திலிருந்து அக்கினியை அனுப்புவார்.'' அது அவரை வெறுக்கிறவர்களைப் பட்சித்துப் போடும் [வெளி. 20:9]. சாத்தான் இப்போது தேவனுடைய நோக்கங்கள் நிறைவேற உதவியாக இருப்பது போல அப்போதும் உதவியாக இருப்பான். இதன் காரணமாக நம்மால் ''ஆளுகைசெய்யும் ஆவிகளை வீழ்த்த முடியும்'' என்று நினைப்பது மூடத்தனமானதாகும். தேவன் தமது சொந்தக் காரணங்களுக்காக அவை செயல்படும்படி அனுமதித்திருக்கிறார்.

### வேதாகமரீதியான நற்செய்தி ஊழியம்

இந்த ஆவிக்குரிய யுத்தமே இன்று சுவிசேஷத்தை அறிவிப்பதற் கான ஆற்றலுடைய வழி என்று சிலர் கூறினாலும், இயேசுவானவரோ அல்லது அப்போஸ்தலர்களோ இதில் ஈடுபடவில்லை. இயேசுவானவர், பேதுரு, யோவான், ஸ்தேவான், பிலிப்பு அல்லது பவுல் தாங்கள் பிரசங்கம் செய்யும் பட்டணங்களுக்கு மேலாக ''அரண்களை வீழ்த்துவதையோ'' அல்லது ''பலவானைக் கட்டுவதையோ'' நாம் பார்க்கவில்லை. மாறாக, தாங்கள் எதைப் பிரசங்கிக்க வேண்டும் என்பதற்காக அவர்கள் பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்திருப்பதையே நாம் பார்க்கிறோம். மனந்திரும்பி, கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும் என்ற எளிய சுவிசேஷத்தையே அவர்கள் பிரசங்கிப்பதை நாம் பார்க்கிறோம். இதன்மூலம் அவர்கள் அற்புதமான பயன்களைக் கண்டார்கள். சுவிசேஷத்தைப் புறக்கணித்திருக் கும் மக்களுக்கு அவர்கள் பிரசங்கித்தபோது ''சாத்தான் தொடர்ந்து அவர்களுடைய மனங்களைக் கட்டிவைத்திராதபடி ஆவிக்குரிய யுத்தத்தில் ஈடுபடுவதை'' நாம் காணவில்லை. மாறாக, அப்படி அவர்கள் புறக்கணிக்கும்போது, இயேசுவானவர் கட்டளையிட்டபடி, தங்கள் காலின் தூசியை உதறிவிட்டு அவர்கள் அடுத்த பட்டணத்துக்குச் சென்றார்கள் [பார்க்க, மத். 10:14; அப். 13:5].

வெற்றிகரமான சுவிசேஷ ஊழியத்துக்கு முன்னால் ''அரண்களை வீழ்த்த வேண்டும்'' ''பலவானைக் கட்ட வேண்டும்'' என்று சொல்லு கிறவர்கள் இப்படிப்பட்ட ''ஆவிக்குரிய யுத்தம்'' இல்லாமலேயே சபை

வரலாற்றில் ஆயிரக்கணக்கான அற்புதமான எழுப்புதல்களைக் குறித்து எடுத்துக்காட்டுகள் காணப்படுகிறது என்பதை அறிந்தும் இப்படிச் சொல்லுவது வியப்பாகவே இருக்கிறது.

''ஆனால் எங்கள் யுக்திகள் பயனைக் கொடுக்கின்றன'' என்று யாராவது சொல்லலாம். நாங்கள் இப்படிப்பட்ட ஆவிக்குரிய யுத்தத்தில் ஈடுபட்டதிலிருந்து முன்பைவிட அதிகமான பேர்கள் இரட்சிக்கப்படுகிறார்கள் என்று அவர்கள் சொல்லலாம்.

இது உண்மையாக இருக்குமானால் ஏன் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். அதே வேளையில் வேதாகமரீதியான ஜெபித்தலும், சுவிசேஷம் அறிவித்தலும் அதிகமாக நடப்பதே இதற்குக் காரணமாக இருக்கும். அல்லது ஒரு மக்கள் குழுவினர் திடீரென்று சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளுபவர்களாக மாறியிருப்பது இதற்குக் காரணமாக இருக்கலாம்.

ஒரு சுவிசேஷகர் உங்களிடம் ''இன்றிரவு நான் எழுப்புதல் கூட்டத்தில் பிரசங்கிப்பதற்கு முன்பாக மூன்று வாழைப்பழங்களைச் சாப்பிட்டேன். நான் பிரசங்கம் செய்தபோது பதினாறு பேர் இரட்சிக்கப்பட்டார்கள்! இறுதியாக ஆற்றலுள்ள சுவிசேஷப் பணியின் இரகசியத்தை நான் கண்டுகொண்டேன். இப்போதிலிருந்து நான் பிரசங்கம் செய்வதற்கு முன்பாக மூன்று வாழைப்பழங்களைச் சாப்பிடுவேன்!'' என்று சொல்லுவார் என்றால் நீங்கள் என்ன நினைப்பீர்கள்?

நிச்சயமாக நீங்கள் அவரிடம் ''நீர் மூன்று வாழைப்பழங்களைச் சாப்பிட்டதற்கும் பதினாறு பேர் இரட்சிக்கப்பட்டதற்கும் எந்தவிதச் சம்பந்தமும் இல்லை. நீர் சுவிசேஷத்தைப் பிரசங்கித்ததும், ஏற்றுக்கொள்ளக்கூடியவர்களாக இருந்த பதினாறு பேர் அதைக் கேட்டதுமே உமது வெற்றிக்கான திறவுகோலாக இருக்கிறது'' என்று சொல்லுவீர்கள்.

தேவன் தமது வார்த்தையைக் கனம்பண்ணுகிறார். தேவன் ஒரு வாக்குத்தத்தத்தைக் கொடுத்திருக்கும்போது, ஒருவர் அதற்கான நிபந்தனைகளை நிறைவேற்றுவார் என்றால், அந்த நபர் வேதாகம ரீதியல்லாத மற்றக் காரியங்களைச் செய்தாலும் தேவன் தமது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவார்.

தற்போதைய ஆவிக்குரிய யுத்தச் செயல்பாடுகளைக் குறித்த வகையிலும் இதுவே உண்மையாக இருக்கிறது. நீங்கள் கைப்பிரதிகளைக் கொடுத்து உங்கள் பட்டணத்துக்கு மேலாக ''பலவானைக் கட்டுவீர்களானால்'' ஒரு குறிப்பிட்ட சதவீதத்தினர் இரட்சிக்கப்படுவார்கள். நீங்கள் பலவானைக் கட்டாமல் கைப்பிரதிகளை விநியோகம் செய்தாலும் அதே குறிப்பிட்ட சதவீதத்தினர் இரட்சிக்கப்படுவார்கள்.





## ஒரு ஆவிக்குரிய அறுவடைக்காக வேதாகமரீதியாக ஜெபிப்பது எப்படி

இரட்சிக்கப்படாத மக்களுக்காக நாம் எப்படி ஜெபிக்க வேண்டும்? முதலாவதாக, தேவன் மக்களை இரட்சிக்கும்படி நம்மை ஜெபிக்கச் சொல்லும்படியான புதிய ஏற்பாட்டுப் போதனை எதுவுமில்லை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். எந்தத் துவக்ககாலக் கிறிஸ்தவரும் இப்படி ஜெபித்ததாகக் குறிப்பிடப்படவும் இல்லை. இதற்கான காரணம் என்னவென்றால், தேவனுடைய பார்வையில் பார்க்கும்பொது, அவர் உலகத்திலுள்ள எல்லோரும் இரட்சிக்கப்படுவதற்குத் தேவையான எல்லாவற்றையும் செய்துமுடித்துவிட்டிருக்கிறார். அவர்கள் இரட்சிக்கப்பட வேண்டுமென்று அவர் அதிகமான வாஞ்சை கொண்டிருந்தபடியினால்தான் தமது குமாரனைச் சிலுவையில் மரிக்கும்படி அவர் ஒப்புக்கொடுத்திருக்கிறார்.

அப்படியானால் ஏன் எல்லோரும் இன்னும் இரட்சிக்கப்படவில்லை? எல்லோரும் சுவிசேஷத்தை விசுவாசிக்கவில்லை என்பதே இதற்குக் காரணமாகும். அவர்கள் ஏன் விசுவாசிக்கவில்லை? இரண்டு காரணங்கள் மட்டுமே இருக்கின்றன: 1) அவர்கள் இதுவரை சுவிசேஷத்தைக் கேள்விப்படாமல் இருக்கலாம். 2) அல்லது அவர்கள் சுவிசேஷத்தைக் கேட்டும் அதைப் புறக்கணித்திருக்கலாம்.

எனவே இரட்சிக்கப்படாதவர்களுக்காக ஜெபிப்பதற்கான வேதாகம ரீதியான வழி அவர்கள் சுவிசேஷத்தைக் கேட்பதற்கான வாய்ப்பைப் பெற வேண்டும் என்று ஜெபிப்பதாகும். எடுத்துக்காட்டாக, இயேசுவானவர் ''அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆகையால் *அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி* அவரை வேண்டிக்கொள்ளுங்கள்'' என்று சொல்லியிருக்கிறார் (லூக்கா 10:2 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது). மக்கள் சுவிசேஷத்தைக் கேட்டு இரட்சிக்கப்பட வேண்டுமானால், யாராவது ஒருவர் அவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும். எனவேதான் தேவன் அவர்களிடம் ஊழியர்களை அனுப்ப வேண்டும் என்று நாம் ஜெபிக்க வேண்டும்.

ஆவிக்குரிய அறுவடையைக் குறித்துத் துவக்ககாலச் சபையினர் ஜெபித்தபோது அவர்கள் ''இப்பொழுதும், கர்த்தாவே, ...உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவின் நாமத்தினாலே அடையாளங்களும் அற்புதங்களும் நடக்கும்படி செய்து, பிணியாளிகளைக் குணமாக்கும்படி உம்முடைய கரத்தை நீட்டி, உம்முடைய ஊழியக்காரர் *உம்முடைய வசனத்தை முழு தைரியத்தோடும் சொல்லும்படி* அவர்களுக்கு அநுக்கிரகஞ்செய்தருளும்'' என்று ஜெபித்தார்கள் (அப். 4:29–30 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).

அவர்கள் 1] துணிவோடு சுவிசேஷத்தை அறிவிப்பதற்கான வாய்ப்புகளுக்காக ஜெபித்தார்கள். அல்லது 2] தங்களுக்குக் கிடைக்கும் வாய்ப்புக்களில் சுவிசேஷத்தைத் துணிவோடு அறிவிக்க வேண்டும் என்பதற்காக ஜெபித்தார்கள். தேவன் குணமாக்குதலோடும், அற்புத அடையாளங்களோடும் சுவிசேஷத்தை உறுதிப்படுத்துவார் என்றும் அவர்கள் எதிர்பார்த்தார்கள். இவை வேதாகமரீதியிலான ஜெபங்களாகும். மக்கள் சுவிசேஷத்தைக் கேட்பதற்கான வாய்ப்புகள் கொடுக்கப்பட வேண்டும் என்பதே அவர்கள் ஜெபித்ததின் நோக்கமாக இருந்தது. தேவன் அவர்களுடைய ஜெபங்களுக்குப் பதிலளித்தார். ''அவர்கள் ஜெபம்பண்ணினபோது, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினால் நிரப்பப்பட்டு, தேவவசனத்தைத் தைரியமாய்ச் சொன்னார்கள்'' [அப். 4:31].

ஒரு ஆவிக்குரிய அறுவடையை உருவாக்குமாறு கிறிஸ்தவர்கள் எப்படி ஜெபிக்க வேண்டுமென்று பவுல் சொல்லுகிறார்? தேவன் இன்னுமதிகமான மக்களை இரட்சிக்க வேண்டுமென்று ஜெபிக்கும்படி அவர் சொல்லுகிறாரா? இல்லை, அவர் என்ன சொல்லுகிறார் என்பதைப் பார்ப்போம்.

> கடைசியாக, சகோதரரே, உங்களிடத்தில் கர்த்தருடைய வசனம் பரம்பி மகிமைப்படுகிறதுபோல, *எவ்விடத்திலும் பரம்பி மகிமைப்படும்படிக்கும்*... வேண்டிக்கொள்ளுங்கள் [2 தெச. 3:1 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].
>
> சுவிசேஷத்திற்காகச் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிறஸ்தானாபதியாகிய *நான் அதைப்பற்றிப் பேச வேண்டியபடி தைரியமாய்ப் பேசத்தக்கதாக*, நான் தைரியமாய் என் வாயைத் திறந்து *சுவிசேஷத்தின் இரகசியத்தை அறிவிக்கிறதற்கு வாக்கு எனக்குக் கொடுக்கப்படும்படி* எனக்காகவும் விண்ணப்பம் பண்ணுங்கள் [எபே. 6:19–20 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

மக்கள் இப்போது இரட்சிக்கப்படுவார்களா அல்லது இல்லையா என்பது தேவனைச் சார்ந்திருப்பதைவிட அவர்களையே அதிகமாகச் சார்ந்திருக்கிறது. எனவே மக்கள் சுவிசேஷத்தைக் கேட்க வேண்டும், நாம் அதை அறிவிக்க உதவிசெய்ய வேண்டும் என்று தேவனிடம் ஜெபிக்க வேண்டும். தேவன் நமது ஜெபங்களைக் கேட்பார். என்றாலும் அது எல்லோரும் இரட்சிக்கப்படுவதற்கான உத்தரவாதமாகாது. ஏனென்றால் மக்கள் தாங்கள் விரும்புவதைத் தெரிந்துகொள்ளும்படியான சுயாதீன சித்தத்தைத் தேவன் அவர்களுக்குக் கொடுத்திருக்கிறார். அவர்களுடைய இரட்சிப்பு அவர்கள் சுவிசேஷத்துக்கு எப்படிச் செவிசாய்க்கிறார்கள் என்பதைப் பொருத்திருக்கிறது.





## கட்டுக்கதை # 7: ''ஒருகிறிஸ்தவன் பாவம்செய்யும்போது ஒரு தீய ஆவி வந்து தனக்குள் வாசம்பண்ணக் கதவுகளைத் திறந்துகொடுக்கிறார்.''

ஒரு கிறிஸ்தவன் பாவம் செய்யும்போது, அவன் ஒரு தீய ஆவியின் சோதனைக்கு இடம் கொடுத்திருக்கலாம் என்பது உண்மைதான். என்றாலும், ஒரு தீய ஆவியின் ஆலோசனைக்கு இடம் கொடுப்பதினால் அந்த ஆவி விசுவாசிக்குள் வந்துவிட முடியும் என்று அர்த்தமல்ல. கிறிஸ்தவர்களாகிய நாம் பாவம் செய்யும்போது, தேவனுக்குக் கீழ்ப்படியாமல் இருக்கிறபடியால், அவரோடுள்ள ஐக்கியத்தை முறித்துப் போடுகிறோம் [பார்க்க, 1 யோவான் 1:5–6]. நாம் குற்றம் செய்திருப்பதை உணர்கிறோம். என்றாலும், அவரோடுள்ள *உறவை* நாம் முறித்துப் போட்டிருக்கவில்லை. இப்போதும் நாம் அவருடைய பிள்ளையாகவே இருக்கிறோம்.

''நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்'' [1 யோவான் 1:9]. அப்போது அவரோடுள்ள நமது ஐக்கியம் சரிசெய்யப் படுகிறது. நாம் பாவம் செய்வதினால் உள்ளே புகுந்துவிடும் ஏதேனும் அசுத்த ஆவியிலிருந்து சுத்திகரிக்கப்பட வேண்டும் என்று யோவான் சொல்லவில்லை என்பதைக் கவனியுங்கள்.

ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஒவ்வொரு நாளும் உலகத்திலிருந்து சோதனைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. நமக்குப் பல்வேறு தீய ஆவிகளுக்கு எதிரான போராட்டம் இருக்கிறது என்று பவுல் அப்போஸ்தலன் எழுதியிருக்கிறார் [பார்க்க, எபே. 6:12]. எனவே, ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் ஓரளவுக்கு அசுத்த ஆவிகளின் தொந்திரவு உண்டு. இது இயல்பானதாகும். தேவனுடைய வார்த்தையில் விசுவாசம் வைத்து, பிசாசையும் அவனுடைய ஆவிகளையும் எதிர்த்து நிற்பது நமது பொறுப்பாகும் [பார்க்க, 1 பேதுரு 5:8–9]. நாம் விசுவாசித்து, தேவன் சொல்லியிருப்பதின்மீது செயல்படும்போது, அது பிசாசை எதிர்த்து நிற்பதாகும்.

எடுத்துக்காட்டாக, சாத்தான் மனக்கிலேசத்தின் சிந்தனைகளைக் கொடுக்கும்போது, மனக்கிலேசத்துக்கு எதிராகச் செயல்படும் ஒரு வசனத்தை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். ''எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்'' என்ற தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிய வேண்டும் [1 தெச. 5:16]. எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரம் பண்ண வேண்டும் [1 தெச. 5:18]. தேவனுடைய வார்த்தையின்படி செயல்படுவதும், சாத்தான் கொடுக்கும் எண்ணங்களுக்குப் பதிலாக, தேவனுடைய சித்தனைகளை வைப்பதும் நமது பொறுப்பாகும்.

நாம் சுயாதீன சித்தமுள்ளவர்கள் என்பதை உணர வேண்டும். நாம் எதை நினைக்க விரும்புகிறோமோ அதை நினைக்க முடியும். ஒரு விசுவாசி தொடர்ந்து தீய ஆவிகளின் ஆலோசனைகளைக் கேட்டு அவைகளுக்கு இடம் கொடுப்பதைத் *தெரிந்துகொள்ளுவார்* என்றால், அவர் தனது மனதை *ஒடுக்கப்படுவதற்காகத்* திறந்துகொடுக்கிறார். இது தவறான சிந்தனைகளால் ஆளுகைசெய்யப்படுவதற்கு அதிகமாக இடம் கொடுப்பதாகும். அவர் இன்னும் அதிகமாக ஒப்புக்கொடுப்பதைத் தெரிந்து கொள்ளுவாரானால், ஒரு குறிப்பிட்ட வகையிலான தவறான சிந்தனையினால் அவர் *ஆட்டிப்படைக்கப்படலாம்.* கிறிஸ்தவர்களின் மத்தியில் இது அபூர்வமாக இருந்தாலும், இப்படியும் நடக்கக் கூடும். என்றாலும், அடிமைப்பட்டிருக்கும் கிறிஸ்தவர் விடுவிக்கப்பட விரும்புவாரானால், தேவனுடைய வார்த்தைகளைச் சிந்திக்கும்படி தீர்மானித்து, அவைகளுக்கு ஒப்புக்கொடுத்து, பிசாசை எதிர்த்துநிற்க வேண்டும்.

ஆனால் அவர் எப்போதேனும் பிசாசினால் *பிடிக்கப்படக்* கூடுமா? அவர் தனது முழு இருயத்தோடும் கிறிஸ்துவைப் புறக்கணித்து, முழுமையாக அவரைவிட்டுத் திரும்பும்படி தீர்மானிப்பாரானால் இப்படி ஆகக்கூடும். அப்போது அவர் ஒரு கிறிஸ்தவராக இருக்கமாட்டார்.[93] இந்த நிலையில் அவர் பிசாசினால் பிடிக்கப்படக் கூடும். தன்னை ஒடுக்கும் தீய ஆவிகளுக்கு அவர் இன்னுமதிகமாக ஒப்புக்கொடுப்பாரானால் இப்படி ஆகும். ஆனால் ஒரு பாவத்தைச் செய்வதின்மூலமாக தீய ஆவியினால் பிடிக்கப்படும்படி கதவைத் திறந்துகொடுக்க முடியும் என்று சொல்ல முடியாது.

எந்தவொரு கிறிஸ்தவரும் பிசாசினால் பிடிக்கப்பட்டிருந்ததற்குப் புதிய ஏற்பாட்டில் எந்த எடுத்துக்காட்டையும் நம்மால் காண முடியாது. பிசாசினால் பிடிக்கப்படக்கூடும் என்ற எச்சரிப்பு கிறிஸ்தவர்களுக்குக் கொடுக்கப்படவுமில்லை. சக கிறிஸ்தவர்களிடமிருந்து பிசாசுகளை விரட்டுவது எப்படி என்பதுகுறித்த வழிமுறைகளும் கொடுக்கப்பட வில்லை.

கிறிஸ்தவர்களாகிய நம்மிடமிருந்து பிசாசுகள் விரட்டப்பட வேண்டிய அவசியமில்லை என்பதே சத்தியமாகும். நாம் நமது மனங்களைத் தேவனுடைய வார்த்தையினால் புதிதாக்குவதே அவசியமாகும். இது வேதாகமரீதியானதாகும். பவுல் இப்படி எழுதியிருக்கிறார்:

[93] ''ஒருமுறை இரட்சிக்கப்பட்டால் எப்போதைக்குமாக இரட்சிக்கப்பட்டாயிற்று'' என்ற கொள்கையைக் கொண்டவர்கள் இதை ஒப்புக்கொள்ள மாட்டார்கள். அவர்கள் இந்த வசனங்களைக் கவனமாக வாசிக்கும்படி நான் பரிந்துரை செய்கிறேன்: ரோமர் 11:22; 1 கொரி. 15:1–2; பிலி. 3:18–19; கொலோ. 1:21–23; எபி. 3:12–14.





> நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் [ரோமர் 12:2].

பழைய சிந்தனை ஒழுங்குகளிலிருந்து நமது மனமானது சுத்திகரிக்கப்பட்டு, தேவனுடைய வார்த்தையின் சத்தியத்தினால் புதிதாக்கப்படும்போது, பாவகரமான பழக்கங்களின்மீது நாம் வெற்றிபெறுகிறோம். முரண்படாத வகையில் கிறிஸ்துவைப்போன்ற வகையில் வாழ்கிறோம். சத்தியமே நம்மை விடுவிக்கிறது [யோவான் 8:32]. நாம் பிசாசுகளை விரட்டும்போது அல்ல, நமது மனதைப் புதிதாக்கும்போதே மறுரூபமாகிறோம்.

பிறகு ஏன் அதிகமான கிறிஸ்தவர்கள் தங்களிலிருந்து பிசாசு அல்லது பிசாசுகள் விரட்டப்பட்டதாகச் சாட்சி கொடுக்கிறார்கள்? அவர்கள் தங்களில் ஒரு பிசாசு இருப்பதாகவும், அது விரட்டப்பட்டதாக வும் கற்பனை செய்துகொண்டிருக்கலாம். பல கிறிஸ்தவர்கள் தேவனுடைய வார்த்தையைக் குறித்த அறிவில் குறைவுபடுகிறார்கள். எனவே அவர்கள் ''விடுதலை கொடுக்கும் ஊழியர்களுக்கு'' மிக எளிதாக இரையாகிவிடுகிறார்கள். அவர்கள் மனோரீதியாக மக்கள் தங்ளைப் பிசாசு பிடித்திருக்கிறது என்று நினைக்கும்படி செய்கிறார்கள். தங்களில் ஒரு பிசாசு இருக்கிறது என்ற உறுதியை மக்கள் பெறும்போது, அவர்கள் பிசாசுகளை விரட்டுவதாகச் சொல்லிக்கொண்டு வரும் ஒருவருக்கு மிக எளிதாக ஒத்துழைக்கிறார்கள்.

பிசாசுகளிடமிருந்து விடுவிக்கப்பட்ட கிறிஸ்தவர்கள் அந்த வேளையில் மெய்யான கிறிஸ்தவர்களாக இல்லாமலிருக்கலாம். தாங்கள் விசுவாசிகள் என்று அவர்கள் நினைத்துக்கொண்டிருக்கலாம். வேதாகமரீதியான சுவிசேஷத்துக்கு முரண்பாடாக இருக்கும் நவீன சுவிசேஷத்தின்மூலம் பலர் தாங்கள் அவிசுவாசிகளைவிட வேறுபட்டு இல்லாவிட்டாலும் தாங்கள் கிறிஸ்தவர்கள் என்று நினைக்கும்படி ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள். இயேசுவானவர் அவர்களுடைய ஆண்டவராக இருக்கவில்லை. மக்கள் சுவிசேஷத்தை விசுவாசித்து, மறுபடியும் பிறக்கும்போது அவர்களில் வாசம்பண்ணிய அசுத்த ஆவிகள் தாமாகவே வெளியேறுகின்றன என்று வேதவசனங்களில் நாம் வாசிக் கிறோம் [பார்க்க, அப். 8:5–7]. பரிசுத்த ஆவியானவர் வாசம்பண்ணும் மக்களைப் பிசாசினால் பிடிக்க முடியாது. மறுபடியும் பிறக்கும் ஒவ்வொருவரிலும் பரிசுத்த ஆவியானவர் வாசம்பண்ணுகிறார்.

**கட்டுக்கதை # 8: ‘‘ஒரு பட்டணத்தின் வரலாற்றை ஆய்வு செய்வதின்மூலம் எந்த அசுத்த ஆவிகள் அதை ஆளுகை செய்கின்றன என்பதை நம்மால் தீர்மானிக்க முடியும். இப்படியாக ஆவிக்குரிய யுத்தத்திலும் இறுதியாக நற்செய்திப் பணியிலும் ஆற்றலோடு செயல்பட முடியும்.’’**

வேதாகமரீதியான ஆதாரத்தைப் பெறாத பல கருத்துக்கள் இந்தக் கட்டுக்கதைக்கு அடிப்படையாக இருக்கின்றன. ஆளுகைசெய்யும் ஆவிகள் நீண்ட காலமாக ஒரே இடத்தில் இருக்கின்றன என்பது அதில் ஒரு கருத்தாகும். ஒரு பிராந்தியத்தில் நூற்றாண்டுகளுக்கு முன்னால் இருந்த அதே ஆவி இப்போதும் இருக்கிறது என்று அவர்கள் சொல்லுகிறார்கள். இப்படியாக, ஒரு பட்டணமானது பேராசை பிடித்த மக்களால் ஸ்தாபிக்கப்பட்டிருக்குமானால், இப்போதும் அந்தப் பட்டணத்தைப் பேராசை பிடித்த ஆவிகள் ஆளுகைசெய்கின்றன என்ற முடிவுக்கு வருகிறார்கள். ஒரு பட்டணம் முன்பு செவ்விந்தியரின் கிராமமாக இருந்திருக்குமானால், இப்போதும் சாத்தான் வணக்கம் மற்றும் பில்லி சூனியத்தின் ஆவிகள் அந்தப் பட்டணத்தை ஆளுகைசெய்கின்றன என்று சொல்லுகிறார்கள்.

ஆனால் நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு பூகோளப் பகுதியில் இருந்த அசுத்த ஆவிகள் இப்போதும் அந்தப் பகுதியை ஆளுகைசெய்கின்றனவா? இருக்கலாம், ஆனால் கண்டிப்பாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை.

தானியேலின் புத்தகம் பத்தாம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் நிகழ்வைக் குறித்து நாம் ஏற்கெனவே ஆய்வுசெய்திருக்கிறோம். பெர்சியா ராஜ்யத்தின் அதிபதியை எதிர்த்து நிற்க மிகாவேல் தூதனின் உதவியைப்பெற்ற பெயர் குறிப்பிடப்படாத தூதன் தானியேலிடம் ‘‘இப்போது நான் பெர்சியாவின் பிரபுவோடே யுத்தம் பண்ணத் திரும்பிப் போகிறேன்; நான் போனபின்பு *கிரேக்கு தேசத்தின் அதிபதி வருவான்*’’ என்று சொல்லுவதை நாம் பார்க்கிறோம் [தானி. 10:20 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது]. வரலாற்றில் பார்க்கும்போது மகா அலெக்சாண்டரின் படையெடுப்பின் காரணமாகப் பெர்சிய ராஜ்யம் கிரேக்க ஆளுகைக்குக் கீழாக விழுந்தது என்பதை நாம் அறிகிறோம். என்றாலும் இந்தப் பெயர் குறிப்பிடப்படாத தூதன் ஆவிக்குரிய உலகத்தில் நடக்கும் உடனடி மாற்றங்களை அறிந்திருந்தான். ‘‘கிரேக்கு தேசத்தின் அதிபதி வருவான்’’ என்று அவன் சொல்லுகிறான்.

கிரேக்கு தேசத்தின் அதிபதி வந்தபோது, பெர்சிய ராஜ்யத்தின் அதிபதி பெர்சிய சாம்ராஜ்யத்தின் ஆவிக்குரிய உலகத்தில் ஆளுகை செய்ததுபோல இப்போது கிரேக்க சாம்ராஜ்யமாக இருக்கும் பகுதியில்





கிரேக்கு தேசத்தின் அதிபதி ஆளுகைசெய்தானா? இதுவே சரியான முடிவாக இருக்கிறது. அப்படியிருக்குமானால், மேலான அதிகாரத்திலுள்ள பிசாசுகள் தங்கள் பூகோளப் பகுதியை மாற்றிக்கொள்ளுகின்றன என்றே சொல்ல வேண்டும். தற்போது பெர்சிய சாம்ராஜ்யம் கிரேக்கப் பேரரசின் கீழாக இருக்கிறபடியால் கிரேக்கு தேசத்தின் அதிபதியாகிய பிசாசே அதை ஆளுகைசெய்ய வேண்டும். உலகத்தில் அரசியல்ரீதியான மாற்றங்கள் வரும்போது இருளின் ராஜ்யத்திலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. தேவன் இதை நமக்கு வெளிப்படுத்தாவிட்டால் நம்மால் இதை அறிய முடியாது என்பதே உண்மையாகும்.

மேலும், ஒரு குறிப்பிட்ட பூகோளப் பகுதியில் எந்த அசுத்த ஆவிகள் ஆளுகைசெய்கின்றன என்பதை அறிந்திருப்பதில் எந்தவித மாற்றமும் ஏற்படப்போவதில்லை. நாம் ஏற்கெனவே நிரூபித்தபடி ‘‘ஆவிக்குரிய யுத்தத்தின்’’ மூலமாக நாம் எதுவும் செய்ய முடியாது.

### தீய ஆவிகளை வகைப்படுத்துதல்

ஆளுகை செய்யும் ஆவிகள் ஒரு குறிப்பிட்ட வகைப் பாவத்தில் விசேஷித்தவையாக இருக்கின்றன என்பதும் நம்முடைய அனுமானமேயாகும். ‘‘பேராசையின் ஆவிகள்’’, ‘‘இச்சையின் ஆவிகள்’’, ‘‘சமயவாத ஆவிகள்’’, ‘‘பிணக்கின் ஆவிகள்’’ இருக்கின்றன என்றெல்லாம் சொல்லுவதற்கு எந்த வேதாகமரீதியான ஆதாரமும் இல்லை. இருளின் ராஜ்யத்தை ஆளுகைசெய்யும் மேலான அதிகாரம் பெற்ற பிசாசுகளை இப்படி வகைப்படுத்துவதற்கும் எந்த ஆதாரமும் இல்லை.

நான்கு சுவிசேஷங்களையும் கவனமாக வாசிக்கும் எவரும் இயேசுவானவர் மூன்று *குறிப்பிட்ட* வகைப்பட்ட பிசாசுகளை மட்டுமே விரட்டினார் என்பதைக் கண்டுகொள்ளுவார்கள். ‘‘ஊமையாயிருந்த ஒரு பிசாசு’’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது [லூக்கா 11:14]. மற்றொரு இடத்தில் ‘‘ஊமையும் செவிடுமான ஆவியைப்’’ பற்றி வாசிக்கிறோம் [மாற்கு 9:25]. பல இடங்களில் ‘‘அசுத்த ஆவிகள்’’ என்று குறிப்பிடப்பட்டுள்ளன. இவை இயேசுவானவரால் விரட்டப்பட்ட எல்லா ஆவிகளையும், ‘‘ஊமையும் செவிடுமான ஆவி’’ உட்பட, குறிக்கலாம் [பார்க்க, மாற்கு 9:25].

‘‘ஊமையும் செவிடுமான ஆவி’’ ஒருவரை ஊமையும் செவிடுமாக வைத்திருப்பதற்கு அதிகமாக வேறு எதையும் செய்ய முடியுமா? செய்ய முடியும் என்பதில் ஐயமில்லை. ஏனென்றால் மாற்கு 9ஆம் அதிகாரத்தில் பையனைப் பிடித்திருந்த ஆவி அவனை அலைக்கழித்துக் கீழே தள்ளுவதையும் நாம் காண்கிறோம். எனவே ‘‘ஊமையும் செவிடுமான ஆவி’’ என்பது ஒரு குறிப்பிட்ட வகைப்பட்ட ஆவியைக் குறிக்காமல் அது எப்படி ஒரு குறிப்பிட்ட நபருக்குத் *தீங்கு விளைவிக்கிறது* என்பதைக்

குறிப்பதாக இருக்கலாம். நம்மில் சிலர் பிசாசுகளை வகைப்படுத்துவதில் அதிக ஆர்வம் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இது வேதாகமரீதியானது அல்ல.

பழைய ஏற்பாடு முழுவதிலும் பெயர் சொல்லப்பட்டிருக்கும் விசேஷித்த ஆவிகள் இவைகளாகும்: ''பொய்யின் ஆவி'' [1 இரா. 22:22–23], ''தாறுமாறுகளின் ஆவி'' [ஏசாயா 19:14]. ''வேசித்தன ஆவி'' [ஓசியா 4:12; 5:4]. முதல் இரண்டைப் பொருத்தவரையிலும் கிட்டத்தட்ட எல்லாத் தீய ஆவிகளையும் பொய்யின் ஆவி அல்லது தாறுமாறுகளின் ஆவி என்று அழைக்கலாம். மூன்றாவதான வேசித்தன ஆவி என்பது ஒரு குறிப்பிட்ட வகைப்பட்ட தீய ஆவியைக் குறிப்பிட வேண்டுமென்பதில்லை, அது எங்கும் காணப்படும் மனோபாவத்தைக் குறிக்கலாம்.[94]

நடபடிகளின் புத்தகம் முழுவதிலும் அப்போஸ்தலர் 16:16 வசனத்தில் மட்டுமே ஒரு குறிபிட்ட தீய ஆவியைக் குறித்துக் குறிப்பிடப் பட்டுள்ளது. அங்கே குறிசொல்ல ஏவுகிற ஆவியைக் கொண்டிருந்த ஒரு பெண்ணைப்பற்றி வாசிக்கிறோம். நிருபங்கள் முழுவதிலும் ஒரே குறிப்பிட்ட வகைப்பட்ட தீய ஆவி ''வஞ்சிக்கிற ஆவி'' என்பதாகும் [1 தீமோ. 4:1]. இது எந்தத் தீய ஆவியையும் குறிக்கலாம்.

வேதாகமத்தில் குறிப்பிட்டவகைப்பட்ட ஆவிகளைக் குறித்து நாம் பார்த்தோம். ஆனால் தற்போது சிலர் மக்களைப் பிடிக்கக்கூடிய அல்லது பட்டணங்களை ஆளுகைசெய்யக் கூடிய நூற்றுக்கணக்கான வெவ்வேறு வகைப்பட்ட ஆவிகளைப் பட்டியலிடுவது வியப்பாக இருக்கிறது.

ஆளுகை செய்யும் பிசாசுகளின் மத்தியில் ஒரு குறிப்பிட்ட பாவத்துக்கான ஆவி இருக்கிறது என்று நாம் அனுமானம் செய்யக் கூடாது. ''அந்தப் பட்டணத்தில் அதிகமாகச் சூதாட்டம் காணப்படுவதால் அந்தப் பட்டணத்துக்கு மேலாக சூதாடும் ஆவி இருக்க வேண்டும்'' என்று சொல்லுவது வெறும் அனுமானமேயாகும்.

### புகைபிடிக்கும் ஆவிகளா?

''அந்தப் பட்டணத்தில் புகைபிடிப்பவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறபடியால், அந்தப் பட்டணத்தின் மேலாகப் பல புகை பிடிக்கும் ஆவிகள் இருக்க வேண்டும்'' என்று ஒருவர் சொல்லுவாரானால் அது எவ்வளவு மூடத்தனமாக இருக்கும்? பட்டணங்கள் கட்டப்படுவதற்கு

[94] எண்ணாகமம் 5:14–30 வசனங்களில் ''எரிச்சலின் ஆவி'' என்று குறிப்பிடப்பட்டிருப்பதில் ஆவி என்பது ஒரு குறிப்பிட்ட வகைப்பட்ட மனோபாவம் அதிகமாகக் காணப்படுவதைக் குறிக்கிறது. இது உண்மையில் ஒரு பிசாசு அல்ல. எண்ணாகமம் 14:24 வசனத்தில் நாம் காலேப் ''வேறே ஆவியை'' உடையவன் என்று குறிப்பிடப்பட்டிருப்பது காலேபின் நல்ல மனோபாவத்தையே குறிக்கிறது.





முன்பாக இந்தப் ''புகைபிடிக்கும் ஆவிகள்'' என்ன செய்துகொண்டிருந் தன? அப்போது அவை எங்கே இருந்தன? மக்கள் கிறிஸ்துவைச் சேவிக்காத இடத்திலெல்லாம் இருளின் ராஜ்யம் இருக்கிறது என்பதே உண்மையாகும். புகையிலையானது புகை பிடிப்பதற்காகப் பயன்படுத்தப் படுவதற்கு முன்பாக இவை என்ன செய்துகொண்டிருந்தன? இன்று புகை பிடிப்பவர்களின் எண்ணிக்கை குறைந்திருப்பதற்குக் காரணம் அந்தப் பழைய ''புகைபிடிக்கும் ஆவிகள்'' மரித்துப்போய்விட்டனவா அல்லது அவை புதிய பகுதிகளுக்குச் சென்றுவிட்டனவா?

''அந்தப் பட்டணம் இச்சையின் ஆவிகளால் கட்டுப்படுத்தப்பட்டிருக் கிறது. அதனால்தான் அங்கே விபசாரிகளின் வீடுகள் அதிகமாக இருக்கின்றன'' என்று சொல்லுவது எவ்வளவு மூடத்தனமாக இருக்கிறது என்பதை உங்களால் காண முடிகிறதா? மக்கள் கிறிஸ்துவைச் சேவிக்காத இடங்களிலெல்லாம் இருளின் ராஜ்யம் இருக்கிறது என்பதே உண்மை யாகும். இந்த இருளின் ராஜ்யத்தில் பல தீய ஆவிகள் செயல்படுகின்றன. அவை பாவம் செய்யும்படி மக்களைத் தூண்டி, தேவனுக்கு விரோதமான தங்கள் கலகத்தைத் தொடருகின்றன. இந்த ஆவிகள் எல்லா வகைப்பட்ட பாவங்களையும் செய்யும்படி மக்களைத் தூண்டுகின்றன. சில இடங்களில் மக்கள் மற்றப் பாவங்களைவிட ஒரு பாவத்துக்கு அதிகமாகத் தங்களை ஒப்புக்கொடுக்கிறார்கள். அறிவிக்க வேண்டுமென்று நமக்குக் கட்டளை யிடப்பட்டுள்ள சுவிசேஷமே அவர்களுடைய ஒரே நம்பிக்கையாகும்.

சில குறிப்பிட்ட பாவங்களில் விசேஷித்த வகையில் ஈடுபட வைக்கும் குறிப்பிட்ட வகைப்பட்ட தீய ஆவிகள் இருந்தாலும், அவை சில குறிப்பிட்ட பூகோளப் பகுதிகளை ஆளுகைசெய்தாலும், அவைகளைப் பற்றி அறிவது நமக்கு உதவியாக இருக்காது. ஏனென்றால் அவைகளை அகற்ற நம்மால் எதுவும் செய்ய முடியாது. ஏமாற்றப்பட்டிருக்கும் மக்களுக்காக வேதாகமரீதியாக ஜெபித்து, அவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிப்பதே நமது பொறுப்பாகும்.

ஒரு குறிப்பிட்ட பட்டணத்தில் எந்தப் பாவம் அதிகமாக இருக்கிறது என்பதை நாம் அறிவதிலுள்ள ஒரே சிலாக்கியம், தேவனுக்கு முன்பாக அந்தப் பட்டணத்திலுள்ள அவிசுவாசிகளைக் குற்றப்படுத்தும் பாவங்களை எடுத்துச் சொல்லி, அவர்களுடைய பாவத்தைக்குறித்து உணர்த்தக்கூடிய பிரசங்கங்களைச் செய்ய முடியும் என்பது மட்டுமேயாகும். ஆனால் அதைத் தீர்மானிக்க ஒரு பட்டணத்தின் வரலாற்றை ஆய்வுசெய்ய வேண்டிய அவசியமில்லை. சில நாட்கள் கண்களையும் காதுகளையும் திறந்து வைத்துக்கொண்டு பட்டணத்தைச் சுற்றிவந்தாலே போதும். எந்தப் பாவங்கள் பிரதானமாகக் காணப்படுகின்றன என்பதை அப்போது காண முடியம்.

இறுதியாக, ஆவிக்குரிய யுத்தத்துக்காகவோ அல்லது நற்செய்தி ஊழியத்துக்காகவோ ஒருவர் ''ஆவிக்குரிய வரைபடத்தைத்'' தயாரிப்பது

குறித்துப் புதிய ஏற்பாட்டில் எங்கும் குறிப்பிடப்படவில்லை. நிருபங்களில் அப்படிச் செய்யும்படியான போதனையும் கொடுக்கப்படவில்லை. தாங்கள் எங்கே பிரசங்கிக்க வேண்டும் என்பதைக் குறித்துப் புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலுக்கு இடம் கொடுத்தார்கள். உண்மையாகச் சுவிசேஷத்தை அறிவித்தார்கள், மனந்திரும்பும்படி மக்களை அழைத்தார்கள், அற்புத அடையாளங்களின் மூலம் ஆண்டவர் வசனத்தை உறுதிப்படுத்துவதைச் சார்ந்திருந்தார்கள். அவர்களுடைய செயல்முறை சிறப்பான பயனைத் தந்தது.

### கட்டுக்கதை # 9: ''சில கிறிஸ்தவர்கள் தலைமுறையாக வரும் அல்லது சாத்தானின் சாபங்களிலிருந்து விடுவிக்கப்பட வேண்டியிருக்கிறது.''

''தலைமுறையாக வரும் சாபங்கள்'' என்ற கருத்து பழைய ஏற்பாட்டில் நான்கு வேதாகமப் பகுதிகளிலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறது. இவை எல்லாமே சாராம்சத்தில் ஒரே காரியத்தையே சொல்லுகின்றன. அவை யாத்திராகமம் 20:5; 34:7; எண்ணாகமம் 14:17 மற்றும் உபாகமம் 5:9 வசனங்களாகும். நாம் எண்ணாகமம் 14:17 வசனத்தைப் பார்ப்போம்:

> ஆகையால் கர்த்தர் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவர் என்றும், அக்கிரமத்தையும் மீறுதலையும் மன்னிக்கிறவர் என்றும், குற்றமுள்ளவர்களைக் குற்றமற்றவர்களாக விடாமல், *பிதாக்கள் செய்த அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவர் என்றும்,* நீர் சொல்லியிருக்கிறபடியே [எண்ணாகமம் 14:17 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

இந்த வேதாகமப் பகுதிக்கு நாம் எப்படி அர்த்தம்காண வேண்டும்? தேவன் ஒருவருடைய பெற்றோர், பாட்டனார், முப்பாட்டனார் அல்லது அவர்களுக்கு முற்பட்டவர்களின் பாவத்துக்காக ஒருவரைத் தண்டிப்பார் அல்லது சபிப்பார் என்று நாம் எடுத்துக்கொள்ள வேண்டுமா? ஒருவர் இயேசுவை விசுவாசிக்கும்போது அவருடைய பாவத்தை மன்னிக்கும் தேவன் அந்த நபருடைய முப்பாட்டனாரின் பாவத்துக்காக அவரைத் தண்டிப்பாரா?

நிச்சயமாக இல்லை. அப்படித் தேவன் செய்வாரானால் அவர் அநீதியுள்ளவரும் மாய்மாலக்காரருமாக ஆகிவிடுவாரே! பெற்றோரின் பாவத்துக்காக ஒருவரைத் தண்டிப்பது நல்லொழுக்கரீதியாகத் தவறானது என்று அவர்தாமே சொல்லியிருக்கிறார்:

> இதெப்படி, குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமக்கிறதில்லையா என்று நீங்கள் கேட்டால், [தேவன் இப்படிப் பதிலளிக்கிறார்] குமாரன் நியாயத்தையும் நீதியையும் செய்து, என் கட்டளைகளைக் கைக்கொண்டு, அவைகளின்படி செய்ததினால், அவன் பிழைக்கவே பிழைப்பான். பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்; *குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை, தகப்பன் குமாரனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை;* நீதிமானுடைய நீதி அவன்மேல்தான் இருக்கும், துன்மார்க்கனுடைய துன்மார்க்கமும் அவன்மேல்தான் இருக்கும் [எசேக்கியேல் 18: 19, 20. அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].





மேலும், மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழாக தகப்பனோ அல்லது குமாரனோ ஒருவர் மற்றவரின் பாவத்தைச் சுமக்கக் கூடாது என்று தேவன் கட்டளையிட்டிருக்கிறார்:

> பிள்ளைகளுக்காகப் பிதாக்களும், பிதாக்களுக்காகப் பிள்ளைகளும் கொலை செய்யப்படவேண்டாம்; அவனவன் செய்த பாவத்தினிமித்தம் அவனவன் கொலைசெய்யப்படவேண்டும் [உபாகமம் 24:16].

அன்பும் நீதியுமுள்ள தேவன் ஒருவரை அவருடைய மூதாதையரின் பாவத்துக்காகத் தண்டிப்பார் அல்லது சபிப்பார் என்பதை நாம் எதிர்பார்க்க முடியாது.[95] அப்படியானால் வேதவசனம் ''பிதாக்கள் செய்த அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவர் '' என்று சொல்லியிருப்பதின் அர்த்தம் என்ன?

மக்கள் தங்கள் சந்ததியினரின் முன்பாகத் தவறாக நடப்பதற்கு அவர்களையே பொறுப்பாக்குகிறார் என்பதே இதன் அர்த்தமாக இருக்க வேண்டும். இப்படியாக அவர்களுடைய தாக்கத்தின் காரணமாக அவர்களுடைய சந்ததியினர் செய்யும் பாவங்களுக்கு அவர் அவர்களையும்

[95] தங்கள் பெற்றோரின் பாவங்களுக்காகப் பிள்ளைகள் துன்பம் அனுபவிப்பதில்லை என்று சொல்ல முடியாது. ஏனென்றால் பெரும்பாலும் அவர்கள் துன்பம் அனுபவிக்கிறார்கள். அப்போது அது தங்கள் பெற்றோரின் பாவங்களுக்காகத் தேவன் பிள்ளைகளைத் தண்டிப்பது கிடையாது. மக்கள் மிகவும் தீயவர்களாக இருக்கிறபடியால், தங்கள் பிள்ளைகளைப் பாதிக்கும் என்று தெரிந்தும் சில பாவங்களைச் செய்கிறார்கள் என்பதையே இது சுட்டிக்காட்டுகிறது. வேத வசனங்களின்மூலம் தேவன் தனிப்பட்ட ஒருவரைத் தண்டிப்பதை இரக்கத்தோடு தள்ளிப்போடலாம் என்றும் பிறகு அதிகப் பார்த்திரவானாக இருக்கும் அவனுடைய சந்ததியைத் தண்டிக்கலாம் என்றும் அறிகிறோம். இதைப்போலவே அவர் ஒரு தலைமுறையை நியாயந்தீர்ப்பதை நிறுத்திவிட்டு, அவர்களை விட மோசமாக இருக்கும் அடுத்த சந்ததியினரைத் தண்டிக்கலாம். [பார்க்க, எரே. 16:11–12]. இது ஒருவரை அவருடைய பாட்டனாருடைய பாவத்துக்காகத் தண்டிப்பதைவிட வேறுபட்டதாகும்.

பொறுப்பாளியாக்குகிறார். தங்கள் பேரப்பிள்ளைகளின்மீது மோசமான தாக்கம் விளைவிப்பதற்காகத் தேவன் மக்களைப் பாதிப் பொறுப்புள்ளவர்களாக ஆக்குகிறார். பரிசுத்த தேவன் இப்படியே செயல்படுகிறார். இப்படி அவர் செய்வது அநியாயமானது என்று எவரும் சொல்ல முடியாது.

நாம் ஆய்வுசெய்யும் பகுதி ''பிதாக்கள் செய்த அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் விசாரிக்கிறார்'' என்று சொல்லுவதைக் கவனியுங்கள். *பிள்ளைகளின்மீதான பிதாக்களின்* அக்கிரமங்களே விசாரிக்கப்படுகின்றன.

எனவே ''தலைமுறைச் சாபங்கள்'' என்பது வெறும் மூட நம்பிக்கை மட்டுமேயாகும். இது தேவனை அநீதியுள்ளவராக ஆக்குகிறபடியால் இது மோசமான கருத்தாகவும் இருக்கிறது.

### சாத்தானின் சாபங்களா?

''சாத்தானின் சாபங்களைக்'' குறித்து என்ன?

முதலாவதாக, சாத்தானால் ஒருவரைச் சபிக்க முடியும் என்பதைக் குறித்து முழு வேதாகமத்திலும் எங்கேயும் குறிப்பிடப்படவில்லை. அவன் அப்படிச் செய்ததற்கு எடுத்துக்காட்டுகளும் இல்லை. சாத்தான் மக்களைத் துன்புறுத்துவதை நாம் வேதாகமத்தில் பார்க்கிறோம். ஆனால் அவன் எந்தவொரு குடும்பத்தின்மீதும் சாபத்தை இடுவதையோ அது அடுத்த தலைமுறைகளுக்கும் தொடருவதையோ நாம் பார்க்கவில்லை.

ஒவ்வொரு கிறிஸ்தவரும் வாழ்நாள் முழுவதும் (ஒரு குறிப்பிட்ட அளவுக்கு) சாத்தானாலும் அவனுடைய பிசாசுகளினாலும் துன்புறுத்தப்படுகிறார். இதற்காக எவரும் நமது பெற்றோரிடமிருந்து நமக்கு வந்த சாத்தானின் சாபத்தை எடுத்துப்போட முயற்சி செய்ய வேண்டிய அவசியமில்லை. நாம் செய்ய வேண்டியதெல்லாம் தேவனுடைய வார்த்தையில் உறுதியாகத் தரித்திருந்து, விசுவாசத்தின்மூலம் பிசாசை எதிர்த்து நிற்க வேண்டும். வேதாகமத்தில் இப்படித்தான் சொல்லப்பட்டிருக்கிறது (பார்க்க, 1 பேதுரு 5:8–9).

வேதாகமத்தில், தேவனே ஆசீர்வதிக்கவும் சபிக்கவும் வல்லமையைப் பெற்றவராக இருக்கிறார் (பார்க்க, ஆதி. 3:17; 4:11; 5:29; 8:21; 12:3; எண். 23:8; உபா. 11:26; 28:20; 29:27; 30:7; 2 நாளா. 34:24; சங். 37:22; நீதி. 3:33; 22:14; புல. 3:65; மல். 2:2; 4:6). மற்றவர்கள் தங்கள் வாயினால் நம்மைச் சபித்தாலும், அவை நமக்குத் தீங்கிழைப்பதில்லை.

> அடைக்கலான் குருவி அலைந்துபோவதுபோலும்,
> தகைவிலான் குருவி பறந்துபோவதுபோலும்,
> காரணமில்லாமலிட்ட சாபம் தங்காது (நீதி.26:2).





இஸ்ரவேல் மக்களைச் சபிக்கும்படி பாலாக் பிலேயாமிடம் கேட்டுக்கொண்டபோது அவன் ''தேவன் சபிக்காதவனை நான் சபிப்பதெப்படி? கர்த்தர் வெறுக்காதவனை நான் வெறுப்பதெப்படி?'' என்று பதிலளித்தான் (எண். 23:8).

சில கிறிஸ்தவர்கள் மாற்கு 11:23 வசனத்தில் இயேசுவானவர் சொல்லியிருப்பதின் அடிப்படையில் ஒருவர் மற்றொருவரைச் சபிக்கலாம் என்று தவறாக நினைக்கிறார்கள்: ''எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.''

வெறும் வார்த்தைகளைப் பேசுவதில் எந்தவித வல்லமையும் இல்லை, இருதயத்தில் விசுவாசத்தோடு பேசுவதிலேயே வல்லமை இருக்கிறது என்பதைக் கவனியுங்கள். விசுவாசம் என்பது நம்பப்படுகிறவைகளின் உறுதியாக இருக்கிறபடியாலும் (எபி. 11:1), அது தேவனுடைய வார்த்தையைக் கேட்பதினால் வருகிறபடியினாலும் (ரோமர் 10:17) மற்றொருவருக்கு விரோதமான தனது சாபம் அவருக்குத் தீங்கைக் கொண்டுவரும் என்று எவரும் விசுவாசிப்பதற்கு வாய்ப்பேயில்லை. மற்றொருவருக்கு விரோதமான தனது சாபம் அவருக்குத் தீங்கிழைக்க வேண்டும் என்று ஒருவர் *நம்பினாலும்*, அவரால் ஒருபோதும் அதை *விசுவாசிக்க* முடியாது. ஏனென்றால் தேவன் ஒருபோதும் மற்றவர்களைச் சபிப்பதைக் குறித்த விசுவாசத்துக்கு ஆதாரமான வாக்குத்தத்தத்தைக் கொடுத்திருக்கவில்லை.

இதற்கு ஒரே விதிவிலக்கு தேவன் ஒருவருக்கு ''விசுவாச வரத்தையும்'' ''தீர்க்கதரிசன வரத்தையும்'' கொடுத்து (ஆவியின் ஒன்பது வரங்களில் இரண்டு) ஆசீர்வதிக்கும்படியாகவோ அல்லது சபிக்கும்படியாகவோ பேசினால்தான் அப்படி நடக்கும். சில பழைய ஏற்பாட்டு மனிதர்களின் வாழ்க்கையில் அப்படிச் செய்யப்பட்டிருப்பதை நாம் காண்கிறோம் (பார்க்க, ஆதி. 27:27–29, 38–41; 49:1–27; யோசுவா 6:26 மற்றும் 1 இரா. 16:24; நியா. 9:7–20, 57; 2 இரா. 2:23–24). இந்தச் சந்தர்ப்பங்களில்கூட ஆசீர்வாதமோ அல்லது சாபமோ மனிதரிடமிருந்து வரவில்லை, *தேவனிடமிருந்தே* வந்தது. இப்படியாக, ஒருவரால் மற்றொருவரைச் சபிக்க முடியும் என்பது வெறும் மூடநம்பிக்கையேயொழிய வேறு ஒன்றுமில்லை. எனவேதான் இயேசுவானவர் ''உங்களுக்கு விரோதமாகப் பேசப்படும் சாபங்களை முறித்துப் போடுங்கள்'' என்று சொல்லவில்லை. ''உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்'' என்று மட்டுமே அவர் சொல்லியிருக்கிறார். எந்தவொரு நபரின் சாபத்தைக் குறித்தும் நாம் பயப்பட வேண்டிய அவசியமில்லை. எவருடைய சாபத்தைக் குறித்தாவது பயப்படுவது

தேவன்மீதான விசுவாசக் குறைவை வெளிப்படுத்துவதாகும். ஆனால் துரதிருஷ்டவசமாக, தேவனுடைய வல்லமையைவிடச் சாத்தானின் சக்தியின்மீது அதிகம் விசுவாசம் கொண்டிருப்பதுபோலத் தோன்றும் போதகர்களையே நான் அடிக்கடி சந்திக்கிறேன். நான் ஒவ்வொரு மாதமும் பல நாடுகளுக்குச் சென்று சாத்தானின் ராஜ்யத்துக்கு அதிகமான பாதிப்பை உண்டாக்கிக்கொண்டிருந்தாலும், சாத்தானைக் குறித்தோ எனக்கு விரோதமாகச் சொல்லப்படும் சாபத்தைக் குறித்தோ நான் பயப்படவில்லை. பயப்படுவதற்கான எந்தக் காரணமும் கிடையாது.

### பிசாசு வழிபாட்டினால் சாபங்கள் வருமா?

ஒருவர் முன்பு பிசாசு வழிபாட்டில் ஈடுபட்டிருந்ததின் காரணமாகத் தனக்கு எதிராகச் சாபத்தை வரவழைத்துக்கொள்ள முடியுமா?

நாம் மறுபடியும் பிறக்கும்போது சாத்தானின் சக்தியிலிருந்தும் இருளின் ராஜ்யத்திலிருந்தும் விடுவிக்கப்படுகிறோம் என்பதை மறந்து விடக் கூடாது [பார்க்க, அப். 26:18; கொலோ. 1:13]. நாம் சாத்தான் நம்மைப் பிடிக்க இடம் கொடுக்காவிட்டால், அவன் நம்மைப் பிடிக்க எந்தவித ஏதுமில்லை. எபேசிய கிறிஸ்தவர்கள் தங்கள் மனமாற்றத்துக்கு முன்னால் மந்திரவாதங்களில் அதிகமாக ஈடுபட்டிருந்தாலும் [பார்க்க, அப். 19:18–19] அவர்கள் மறுபடியும் பிறந்த பிறகு, பவுல் அவர்கள்மீதான ''சாத்தானின் சாபத்தை'' முறித்துப்போட்டதாகவோ அல்லது அவர்கள்மீதான சாத்தானின் சக்தியைக் கட்டியதாகவோ எந்தவித எடுத்துக்காட்டும் கொடுக்கப்படவில்லை. அவர்கள் முதலில் இயேசுவை விசுவாசித்தபோதே அவர்கள் சாத்தானின் ஆளுகை யிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதே இதற்குக் காரணமாகும்.

மேலும், பவுல் எபேசிய கிறிஸ்தவர்களுக்கு எழுதியபோது, தலைமுறைச் சாபம் அல்லது சாத்தானின் சாபத்திலிருந்து விடுபடு வதைக் குறித்து எந்தப் போதனையும் கொடுக்கவில்லை. ''பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள்'' என்றும் [எபே. 4:27], ''நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்துநிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள்'' என்றுமே [எபே. 6:11] அவர் சொல்லியிருக்கிறார். இவை ஒவ்வொரு கிறிஸ்தவ னுக்குமுரிய பொறுப்புக்களாகும்.

ஆனால், ஏன் சில சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட கிறிஸ்தவர்களின் மீதான ''தலைமுறை'' அல்லது ''சாத்தானின் சாபத்தை'' ஒருவர் முறித்துப்போடும்போது அது அவருக்கு உதவியாக இருக்கிறது? ''சாபத்தை'' முறித்துப்போடும்போது, பிசாசு ஓடிவிடுவான் என்று அந்த நபர் நம்பிக்கை வைத்திருப்பது ஒரு காரணமாக இருக்கலாம். விசுவாசமே பிசாசை ஓடச் செய்கிறது. தான் பிசாசை எதிர்த்து நிற்கும்





போது அவன் ஓடுவான் என்ற விசுவாசத்தை ஒவ்வொரு கிறிஸ்தவரும் பெற்றிருக்க வேண்டும், அப்படியே செயல்பட வேண்டும். என்றாலும், சாத்தானை ஓட வைப்பதற்காக ''விடுதலையளிப்பதில் வல்ல'' ஒருவரை நாட வேண்டிய அவசியமில்லை.

இறுதியாக வேதாகமம், ''கிறிஸ்து நமக்காகச் *சாபமாகி*, நியாயப்பிரமாணத்தின் *சாபத்திற்*கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார்'' என்று சொல்லுகிறது [கலா. 3:13 அழுத்தம் கொடுக்கப் பட்டுள்ளது]. நாம் எல்லோருமே பாவம் செய்திருக்கிறபடியால் முன்பு தேவனுடைய சாபத்தின்கீழாக இருந்தோம். ஆனால் இயேசுவானவர் தண்டனையைத் தாமே சுமந்ததிலிருந்து இந்தச் சாபத்திலிருந்து நாம் விடுவிக்கப்பட்டிருக்கிறோம். தேவனுக்கு ஸ்தோத்திரம்! இப்போது நாம் சபிக்கப்படாமல், ''கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும்'' ஆசீர்வதிக்கப்பட்டபடியால் களிகூர முடியும் [எபே. 1:3].

### கட்டுக்கதை # 10: ''உபவாசமிருப்பதின்மூலம் நாம் பிசாசின் கட்டுகளை முறிக்க முடியும்.''

சில கிறிஸ்தவர்கள் உபவாசமிருப்பதைக் கிறிஸ்தவ வாழ்க்கை யின் பிரதானமான நடவடிக்கையாகவும், பொறுப்பாகவும் கருதுகிறார் கள். புதிய ஏற்பாட்டின் எல்லா நிருபங்களிலும் உபவாசிப்பதைக் குறித்து ஒரு போதனைகூடக் கொடுக்கப்பட்டிராத வேளையில் இப்படி எண்ணுவது வியப்பையே தருகிறது. நிருபங்களில் எந்த இடத்திலும் கிறிஸ்தவர்கள் உபவாசமிருக்க வேண்டும் என்று ஊக்குவிக்கப்பட வில்லை. பவுல் தான் சில வேளைகளில் உணவில்லாமல் இருக்கும்படி நிர்ப்பந்திக்கப் பட்டதைக் குறித்துக் குறிப்பிட்டதைத் தவிர நிருபங்களில் உபவாசிப்பதைக் குறித்து எதுவும் சொல்லப்படவில்லை.

நடபடிகளின் புத்தகத்தில் தானே முன்வந்து உபவாசிப்பதைக் குறித்து இரண்டு எடுத்துக்காட்டுகளே கொடுக்கப்பட்டுள்ளன.

> அவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து, *உபவாசித்து*க்கொண்டிருக்கிறபோது: பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்த ஆவி யானவர் திருவுளம்பற்றினார். அப்பொழுது *உபவாசித்து* ஜெபம்பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்து, அவர்களை அனுப்பினார்கள் [அப். 13:2–3 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

> அல்லாமலும் அந்தந்தச் சபைகளில் அவர்களுக்கு மூப்பர்களை ஏற்படுத்திவைத்து, *உபவாசித்து* ஜெபம் பண்ணி, அவர்கள் விசுவாசித்துப் பற்றிக்கொண்ட

கர்த்தருக்கு அவர்களை ஒப்புவித்தார்கள் [அப். 14:23 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

நமக்கு ஜெபத்தில் மனதை ஒருமுகப்படுத்த அதிக நேரம் கொடுப்பதே புதிய உடன்படிக்கையின்கீழாக உபவாசத்தின் நோக்கம் என்று நாம் அறிகிறோம். நமது சொந்த ஆவிக்குள்ளாகத் தேவனுடைய வழிநடத்துதலைக் குறித்த நிச்சயத்தைப் பெறுவதற்காக அவரைத் தேடும்போது இது குறிப்பாக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது.

எல்லாக் கிறிஸ்தவர்களும் அறிந்தபடி, அதிகமான நேரம் ஜெபிப்பது கடினமாக இருப்பதற்குக் காரணம் அதற்கான நேரத்தைக் கண்டுபிடிப்பதேயாகும். சில வேளைகளில் ஜெபிப்பதற்காகச் சில மணி நேரங்களைப் பெறுவதற்காக வேறு ஒன்றை விட்டுவிட வேண்டியிருக்கிறது. அதற்காகத்தான் இயேசுவானவர் முழு இரவும்ஜெபித்தார் [தமது சீஷர்களைத் தெரிந்துகொள்ளுவதற்கு முன்பு]. பெரும்பாலும் அவர் அதிகாலையில் எழுந்து ஜெபித்தார். எனவேதான் பவுல் அப்போஸ்தலன் திருமணமான கிறிஸ்தவர்களுக்கு இந்த ஆலோசனையைக் கொடுத்தார்: ''*உபவாசத்திற்கும் ஜெபத்திற்கும் தடையிராதபடிக்கு* இருவரும் சிலகாலம் பிரிந்திருக்கவேண்டுமென்று சம்மதித்தாலன்றி, ஒருவரை விட்டு ஒருவர் பிரியாதிருங்கள்'' [1 கொரி. 7:5 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது]. நாம் நீண்ட நேரம் ஜெபிப்பதற்காக சிறிது காலத்துக்கு வாழ்க்கையின் நியாயமான இன்பங்களாகிய உறக்கம், பாலுறவு, உணவு இவைகளிலிருந்து விலகியிருக்க வேண்டியிருக்கிறது.

### உபவாசமா அல்லது உண்ணாவிரதமா?

உபவாசம் தேவனை மாற்றுவதில்லை என்பது நிச்சயமாகும். உபவாசம் இருப்பதின்மூலம் நம்மை நாமே துன்புறுத்திக்கொள்ளுவதால் தேவன் நமது ஜெபங்களை உடனடியாகக் கேட்பார் என்று நினைத்துக்கொள்ளக் கூடாது. அது உண்ணாவிரதத்தைப்போல இருக்கும்.

உபவாசிப்பது நமக்கு அதிகமான ஆவிக்குரிய வல்லமையையோ அல்லது பிசாசுகளின்மீதான அதிகாரத்தையோ கொடுப்பதில்லை. கிறிஸ்துவின் சரீரத்தின் உறுப்பினர்களாகிய நாம் ஏற்கெனவே உன்னதங்களில் உட்கார வைக்கப்பட்டிருக்கிறோம் [எபே. 1:21]. மாற்கு 16:17 வசனத்தில் இயேசுவானவரின் வாக்குத்தத்தத்தின்படி ஏற்கெனவே பிசாசுகளை விரட்டுவதற்கான அதிகாரத்தைப் பெற்றிருக்கிறோம்: ''விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்.''

ஆனால் இயேசுவானவர் ஒருமுறை தாம் விரட்டிய பிசாசைக் குறித்து இப்படிச் சொல்லியிருக்கிறாரே: ''இந்த ஜாதிப் பிசாசு ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமேயன்றி மற்றெவ்விதத்தினாலும் புறப்பட்டுப் போகாது'' [மத். 17:21]?





முதலாவதாக, என்னுடைய வேதாகமத்தில் மத்தேயு சுவிசேஷத்தின் ஆதி கையெழுத்துப் பிரதிகள் பலவற்றில் இந்த வசனம் காணப்படவில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியானால் இயேசுவானவர் ''இந்த ஜாதிப் பிசாசு ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமேயன்றி மற்றெவ்விதத்தினாலும் புறப்பட்டுப் போகாது'' என்று சொல்லியிருக்க வாய்ப்பில்லை.

இந்த நிகழ்ச்சியைக் குறித்து மாற்கு சுவிசேஷத்தில் சொல்லப்பட்டிருக்கும் இடத்தில் [மாற்கு 9:29] பல கையெழுத்துப் பிரதிகளில் ''உபவாசம்'' என்ற சொல் கூடுதலாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது என்ற குறிப்பு காணப்படுகிறது.

அப்படியானால், ஒரு குறிப்பிட்ட வகைப்பட்ட பிசாசை விரட்டுவதற்கு உபவாசிப்பது அவசியம் என்று இயேசுவானவர் கூறினாரா? நமக்குத் தெரியாது என்பதுதான் இதற்குரிய பதிலாகும். என்றாலும், இயேசுவானவர் அப்படிச் சொல்லியிருந்தால், உபவாசிப்பதையும் பிசாசிலிருந்து விடுவிக்கப்படுவதையும் சேர்த்துச் சொல்லுவதற்கு அதுவே புதிய ஏற்பாட்டில் ஒரே எடுத்துக்காட்டாக இருக்கும்.

உபவாசம் எப்படிப் பிசாசுகளை விரட்டுவதில் உதவியாக இருக்கும் என்ற கேள்வியை நமக்கு நாமே கேட்டுக்கொள்ளுவது நமக்கு உதவியாக இருக்கும். உபவாசிப்பது நிச்சயமாகப் பிசாசின் மீதான ஒருவருடைய அதிகாரத்தை அதிகரிக்க முடியாது. தேவன் ஒருவருக்குப் பிசாசுகளைத் துரத்தும் அதிகாரத்தைக் கொடுத்திருப்பாரானால், அவர் அதைப் பெற்றிருக்கிறார். உபவாசிப்பதினால் கிடைக்கும் ஒரே பயன் தேவன் கொடுத்துள்ள அதிகாரத்தைக் குறித்து தியானித்து ஜெபிக்க அது அதிகமான நேரத்தைக் கொடுக்கிறது என்பது மட்டுமேயாகும். இப்படியாக அது தேவன் சொல்லியிருப்பதின்மீதான அந்த நபரின் விசுவாசத்தை அதிகரிக்கச் செய்கிறது. விசுவாசமானது விடுதலையைக் கொண்டு வருவதில் ஒரு முக்கியமான காரணியாக இருக்கிறது.

இப்போது நாம் பார்த்துக்கொண்டிருக்கும் நிகழ்வில் சீஷர்களுக்கு ஏற்கெனவே அசுத்த ஆவிகளை விரட்டுவதற்கான அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது [பார்க்க, மத். 10:1]. ஆனால் ஒரு சிறு பையனைப் பிடித்திருந்த பிசாசை விரட்டுவதில் அவர்கள் தோற்றுப்போனார்கள். அவர்களுடைய தோல்வியைக் குறித்து இயேசுவானவர் கேள்விப்பட்டபோது, அவர் உடனடியாக அவர்களுடைய விசுவாசக் குறைவைக் குறித்து வருத்தப்பட்டார் [பார்க்க, மத். 17:17]. தங்களால் ஏன் பிசாசை விரட்ட முடியவில்லை என்று சீஷர்கள் கேட்டபோது அவர் ''உங்கள் அவிசுவாசத்தினாலேதான்'' என்று பதிலளித்தார் [மத். 17:20]. இதற்குச்

சில வசனங்கள் கழித்துத்தான் இயேசுவானவர் சொல்லியிருப்பாரா என்று கேள்வியெழுப்பப்படும் வசனம் வருகிறது.

எனவே அவர்களுடைய தோல்விக்கு இந்த இரண்டில் ஒன்றே சாத்தியக்கூறாக இருக்கக்கூடும் என்று நாம் முடிவுக்கு வரலாம்: தேவனால் தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தில் அவர்கள் விசுவாசம் வைத்திருக்கவில்லை + அவர்கள் முன்கூட்டியே உபவாசித்து ஜெபிக்கவில்லை. அல்லது, தேவனால் தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தில் அவர்கள் விசுவாசம் வைக்கவில்லை; அவர்கள் உபவாசித்து ஜெபித்திருந்தால் அது அவர்கள் தங்கள் விசுவாசத்தைக் கட்டியெழுப்புவதில் உதவியாக இருந்திருக்கக் கூடும். இரண்டாவதே அதிக அர்த்தமுள்ளதாகக் காணப்படுவதால் அதையே நான் ஏற்றுக் கொள்ளுவேன். முதலாவது இயேசுவானவர் தமக்குத் தாமே முரண்பாடாக இருப்பதுபோலக் காட்டுகிறது. இயேசுவானவர் உபவாசத்தைக் குறித்துக் குறிப்பிட்டிருக்கிறார் என்ற அனுமானத்திலேயே இந்த இரண்டு சாத்தியக் கூறுகளும் குறிப்பிடப்பட்டுள்ளன என்பதைக் கருத்தில் வைத்திருங்கள்.

ஆவிக்குரிய யுத்தத்தைக் குறித்தும், பிசாசுகளிலிருந்து விடுவிக் கப்படுவது குறித்தும் கூறும் பெரும்பாலான வசனங்களில் உபவாசிப்பதைக் குறித்துக் கூறப்படவில்லை என்பதை நாம் கவனிக்க வேண்டும். சாத்தானுக்கும் தீய ஆவிகளுக்கும் எதிரான நமது *தனிப்பட்ட யுத்தத்தோடு* தொடர்புபடுத்தி உபவாசத்தைக் குறித்துக் கூறப்படவில்லை. பிசாசுக்கு எதிராகத் தனிப்பட்ட வெற்றி பெற வேண்டுமானால் நாம் உபவாசிக்க வேண்டும் என்று சொல்லுவது வேதாகமரீதியல்லாத காரியமாகும்.

## தேவனுக்கு உகந்த உபவாசம்

உபவாசிப்பது பிசாசின் கட்டுகளை முறியடிக்கும் என்பதை நிரூபிக்கத் தவறாக எடுத்துக் கையாளப்படும் மற்றொரு வசனம் ஏசாயா 58:6 வசனமாகும்:

> அக்கிரமத்தின் கட்டுகளை அவிழ்க்கிறதும், நுகத்தடியின் பிணையல்களை நெகிழ்க்கிறதும், நெருக்கப்பட்டிருக்கிறவர்களை விடுதலையாக்கி விடுகிறதும், சகல நுகத்தடிகளையும் உடைத்துப் போடுகிறதும் ... அல்லவோ எனக்கு உகந்த உபவாசம் [ஏசாயா 58:6].

உபவாசத்தின்மூலம் நாம் பிசாசின் கட்டுகளை முறியடிக்க முடியும் என்று இந்த வசனம் நிரூபிக்கிறதா? இந்த வசனத்தை அதன் பின்னணியைவிட்டு வெளியே எடுத்து, யூகங்களுக்கு இடம் கொடுக்கும்போது மட்டுமே அப்படி அர்த்தப்படுத்த முடியும். தேவன் உண்மையில் இங்கே என்ன சொல்லுகிறார் என்பதை அறிய ஏசாயாவின்





புத்தகத்தின் 58ஆம் அதிகாரத்தின் பெரும்பாலான பகுதிகளை ஆராய்ந்து பார்ப்போம்:

> சத்தமிட்டுக் கூப்பிடு; அடக்கிக்கொள்ளாதே; எக்காளத்தைப்போல் உன் சத்தத்தை உயர்த்தி, என் ஜனத்துக்கு அவர்கள் மீறுதலையும், யாக்கோபின் வம்சத்தாருக்கு அவர்கள் பாவங்களையும் தெரிவி [ஏசாயா 58:1].

தேவன் ஏசாயாவுடன் பேசி இஸ்ரவேலருக்கு அவர்களுடைய பாவத்தைக்குறித்து உணர்த்தும்படி அவருக்குப் பொறுப்பைக் கொடுக்கிறார். அடுத்த வசனத்திலேயே அவர்களுடைய பாவங்களைக் குறித்து அவர் குறிப்பிடுகிறார்:

> தங்கள் தேவனுடைய நியாயத்தைவிட்டு விலகாமல் நீதியைச் செய்துவருகிற ஜாதியாரைப்போல் அவர்கள் நாடோறும் என்னைத் தேடி, என் வழிகளை அறிய விரும்புகிறார்கள்; நீதிநியாயங்களை என்னிடத்தில் விசாரித்து, தேவனிடத்தில் சேர விரும்புகிறார்கள் [ஏசாயா 58:2].

இஸ்ரவேல் மக்கள் தாங்கள் நீதிமான்கள் என்று உரிமை கொண்டாடுவது தெளிவாகத் தெரிகிறது. அவர்கள் தங்கள் சமயப் போர்வையில் பயபக்தியாக இருப்பதுபோலப் பாசாங்கு செய்கிறார்கள். அவர்கள் தேவனிடம் இப்படிக் கேட்கிறார்கள்:

> நாங்கள் உபவாசம்பண்ணும்போது நீர் நோக்கா மாலிருக்கிறதென்ன? நாங்கள் எங்கள் ஆத்துமாக் களை ஒடுக்கும்போது நீர் அதை அறியாமலிருக்கிற தென்ன என்கிறார்கள் [ஏசாயா 58:3 அ].

தேவன் இவ்வாறு பதிலளிக்கிறார்:

> இதோ, நீங்கள் உபவாசிக்கும் நாளிலே உங்கள் *இச்சையின்படி நடந்து, உங்கள் வேலை களையெல்லாம் கட்டாயமாய்ச் செய்கிறீர்கள்*. இதோ, *வழக்குக்கும் வாதுக்கும் துஷ்டத்தனத்தையுடைய கையினால் குத்துகிறதற்கும் உபவாசிக்கிறீர்கள்;* நீங்கள் உங்கள் கூக்குரலை உயரத்திலே கேட்கப்பண்ணும்படியாய், இந்நாளிலே உபவாசிக்கிறது போல் உபாவாசியாதிருங்கள். மனுஷன் தன் ஆத்துமாவை ஒடுக்குகிறதும், தலைவணங்கி நாணலைப்போல் இரட்டிலும் சாம்பலிலும் படுத்துக் கொள்ளுகிறதும், எனக்குப் பிரியமான உபவாச நாளாயிருக்குமோ? *இதையா உபவாசமென்றும்*

*கர்த்தருக்குப் பிரியமான நாளென்றும் சொல்லுவாய்?* [ஏசாயா 58: 3–5, அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

தேவனுடைய கவனத்தையோ அல்லது தயவையோ பெறுவதற்காக இஸ்ரவேலர் உபவாசித்தார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. தங்கள் நிலைமை ஏன் முன்னேறவில்லை என்று அவர்கள் திகைத்தார்கள். அவர்களுடைய உபவாச நாட்களிலும்கூட அவர்களுடைய சுயநலமான வாழ்க்கை முறையே வெளிப்படுத்தப்படுகிறது என்று தேவன் சுட்டிக்காட்டினார். அவர்கள் உபவாசமிருப்பதற்கான காரணம்கூடச் சுயநலமாக இருக்கிறது, அது முழுவதுமாகத் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாததாக இருக்கிறது. அதன்பிறகு தாம் எதிர்பார்க்கும் உபவாசத்தைக்குறித்து, சுயநலமில்லாத உபவாசத்தைக் குறித்து அவர் குறிப்பிடுகிறார்:

> அக்கிரமத்தின் கட்டுகளை அவிழ்க்கிறதும், நுகத்தடியின் பிணையல்களை நெகிழ்க்கிறதும், நெருக்கப்பட்டிருக்கிறவர்களை விடுதலையாக்கி விடுகிறதும், சகல நுகத்தடிகளையும் உடைத்துப் போடுகிறதும், பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்துகொடுக்கிறதும், துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்துக்கொள்ளுகிறதும், வஸ்திரமில்லாதவனைக் கண்டால் அவனுக்கு வஸ்திரங் கொடுக்கிறதும், உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருக்கிறதும் அல்லவோ எனக்கு உகந்த உபவாசம் [ஏசாயா 58: 6,7].

உபவாசிப்பது மக்களைப் பிசாசின் கட்டுகளிலிருந்து விடுவிக்கிறது என்று தேவன் சொல்லுகிறாரா? இல்லை, நிச்சயமாக இல்லை. அவர்கள் உணவை அல்ல, சுயநலமாக இருப்பதை விட்டுவிட வேண்டுமென்று தேவன் விரும்பினார். தங்களைப் போலத் தங்கள் அயலாரிடமும் அவர்கள் அன்புகாட்ட வேண்டுமென்று தேவன் விரும்பினார். அவர்கள் நுகத்தடிகளை முறித்து, ஒடுக்கப்பட்டவர்களை விடுவிக்க வேண்டும் என்றும், பசியோடிருப்பவர்களோடு தங்கள் அப்பத்தைப் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்றும், வீடற்ற ஏழைகளைத் தங்கள் வீடுகளுக்கு அழைக்க வேண்டும் என்றும், ஆடையற்றவர்களுக்கு ஆடையளிக்க வேண்டும் என்றும் தேவன் விரும்பினார். உணவை ஒதுக்குவதின் மூலம் இவை எல்லாவற்றையும் விளைவிக்க முடியாது. இவை *மக்கள்* கண்டிப்பாகச் செய்ய வேண்டிய காரியங்களாகும்.

நாம் தொடர்ந்து வாசிக்கும்போது இந்த அர்த்தம் மேலும் தெளிவாகிறது. இஸ்ரவேலர் தங்கள் சுயமையமான வாழ்க்கை





முறையை விட்டுவிட்டு உபவாசம் இருப்பார்களானால், தேவன் இந்த வாக்குத்தத்தத்தைக் கொடுக்கிறார்:

> அப்பொழுது விடியற்கால வெளுப்பைப்போல உன் வெளிச்சம் எழும்பி, உன் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்த்து, உன் நீதி உனக்கு முன்னாலே செல்லும்; கர்த்தருடைய மகிமை உன்னைப் பின்னாலே காக்கும். அப்பொழுது நீ கூப்பிடுவாய், கர்த்தர் மறுஉத்தரவு கொடுப்பார்; நீ சத்தமிடுவாய்; இதோ, நான் இருக்கிறேன் என்று சொல்லுவார். *நுகத்தடியையும், விரல் நீட்டுதலையும், நிபச் சொல்லையும், நீ உன் நடுவிலிருந்து அகற்றி, பசியுள்ளவனிடத்தில் உன் ஆத்துமாவைச் சாய்த்து, சிறுமைப்பட்ட ஆத்துமாவைத் திருப்தியாக்கினால்*, அப்பொழுது இருளில் உன் வெளிச்சம் உதித்து, உன் அந்தகாரம் மத்தியானத் தைப்போலாகும் [ஏசாயா 58: 8–10 அழுத்தம் கொடுக்கப் பட்டுள்ளது].

அவர்களுடைய உபவாசத்தின் பயனாகத் தேவன் தாமே சாத்தானின் நுகத்தை அகற்றுவதைக் குறித்துப் பேசவில்லை என்பதை ஒன்பதாம் வசனம் தெளிவுபடுத்துகிறது. மாறாக, *அவர்களே* நுகங்களை, பிசாசுகளின் நுகங்களை அல்ல, அநீதி ஏழ்மை போன்ற மனிதர்மீது போடப்பட்டுள்ள நுகங்களை முறிக்க வேண்டும் என்று அவர் சொல்லுகிறார்.

*இஸ்ரவேலர் உணவை விட்டுவிடுவதைவிட அவர்கள் தங்கள் சுயநலத்தை விட்டுவிடுவதிலேயே தேவன் அதிகமான அக்கறை காட்டினார்.* இது நமக்கும் உண்மையாக இருக்கிறது என்பதில் எந்தவித ஐயமும் இல்லை. இரண்டாவது பிரதான கற்பனை ''அடிக்கடி உபவாசம் இருங்கள்'' என்று சொல்லவில்லை, ''உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக'' என்றே சொல்லுகிறது [மாற்கு 12:31].

உபவாசிப்பதின்மூலம் நாம் மக்களைச் சாத்தானின் பிடியிலிருந்து விடுவிக்க முடியும் என்ற கருத்து பிழையானதாகும். மக்களைச் சாத்தானிடமிருந்து விடுவிப்பதற்கு அடிப்படையான வழி அவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிப்பதாகும். அவர்கள் விசுவாசத்தோடு செவிசாய்ப்பார்களானால் அவர்கள் விடுவிக்கப் படுவார்கள். அப்போது தேவனுடைய வார்த்தையில் விசுவாசம் வைப்பதின்மூலம் எப்படிப் பிசாசை எதிர்த்து நிற்க முடியும் என்பதை அவர்களுக்குப் போதிக்கலாம்.

## வேதாகமரீதியான ஆவிக்குரிய யுத்தம்

இப்படியாக ஆவிக்குரிய யுத்தம் குறித்த பல நவீன கட்டுக்கதைகளை நாம் பார்த்துவிட்டோம். ஆனால் வேதாகமரீதியான ஆவிக்குரிய யுத்தம் ஒன்று இருக்கிறதா? ஆமாம், இப்போது இதைப்பற்றி நாம் பார்ப்போம்.

ஆவிக்குரிய யுத்தத்தைக் குறித்த முதல் காரியம் அது நமது கிறிஸ்தவ வாழ்க்கையின் மையப் பார்வையாக இருக்கக்கூடாது என்பதாகும். நாம் கிறிஸ்துவின்மீது நமது பார்வையை வைத்து, அவரைப் பின்பற்றி, அவருக்குக் கீழ்ப்படிந்து, படிப்படியாக அவரைப்போல ஆகும்படி வளர்ச்சிபெற வேண்டும். புதிய ஏற்பாட்டில் ஒரு சிறிய சதவீதமே ஆவிக்குரிய யுத்தத்தைக் குறித்துக் கூறுகிறது. இப்படியாக அது கிறிஸ்தவ வாழ்க்கையில் குறைந்த முக்கியத்துவத்தையே பெற்றிருக்க வேண்டும் என்பது சுட்டிக்காட்டப்படுகிறது.

நாம் அறிய வேண்டியவைகளை வேதாகமம் சொல்லுகிறது என்பதே ஆவிக்குரிய யுத்தத்தைக் குறித்து நாம் அறிய வேண்டிய இரண்டாவது காரியமாகும். ''சாத்தானின் ஆழமான காரியங்களை'' அறிவதற்கு நமக்கு எந்த விசேஷித்த பகுத்தறிவோ [அல்லது விசேஷித்த பகுத்தறிவைக் கொண்டிருப்பதாகச் சொல்லிக்கொள்ளும் பிரசங்கியாரோ] தேவையில்லை. வேதாகமரீதியான ஆவிக்குரிய யுத்தம் எளிமையானதாகும். சாத்தானின் தந்திரங்கள் வேதவசனங்களில் தெளிவாக வெளிப்படுத்தப் பட்டுள்ளன. நமது பொறுப்புக்களும் நேரடியாகக் கொடுக்கப்பட்டுள்ளன. தேவன் சொல்லியிருப்பதை நீங்கள் அறிந்து, விசுவாசிக்கும்போது, ஆவிக்குரிய போராட்டத்தில் நீங்கள் ஜெயிப்பீர்கள் என்ற உத்தரவாதம் உண்டு.

## மறுபடியுமாகத் துவக்கத்துக்கு

நாம் மறுபடியுமாக ஆதியாகம புத்தகத்துக்குத் திரும்புவோம். அங்கேதான் பிசாசைக் குறித்த முதல் அறிமுகத்தைப் பெறுகிறோம். முதல் அதிகாரங்களில் சாத்தான் சர்ப்பத்தின் வடிவில் வருகிறான். இந்தச் சர்ப்பம் சாத்தானே என்று வெளிப்படுத்தல் 20:2 வசனம் உறுதிப்படுத்துகிறது: ''பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட *பழைய பாம்பாகிய* வலுசர்ப்பத்தை அவன் பிடித்து...'' [அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

ஆதியாகமம் 3:1 வசனம் ''தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவன்களைப் பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது'' என்று சொல்லுகிறது. தேவனுடைய சிருஷ்டிகளில் சில தாங்கள் பிழைத்திருப்பதற்கும், இரையைத் தேடுவதற்கும் எவ்வளவு தந்திரமுள்ளவைகளாக இருக்கின்றன என்பதை நீங்கள் நினைத்துப் பார்க்கும்போது, சாத்தான் எவ்வளவு தந்திரமானவனாக இருக்கக்கூடும் என்பதை நாம் உணருகிறோம். ஆனால் சாத்தான் தேவனைப்போலச் சகலத்தையும்





அறிந்தவனாகவும், சர்வஞானியாகவும் இருக்கவில்லை. அவனுக்கு எதிரான போராட்டத்தில் நாம் மனோரீதியாகப் பிரதிகூலத்தையே பெற்றிருக்கிறோம் என்று நாம் நினைத்துக்கொள்ளக் கூடாது. நாம் ''*சர்ப்பங்களைப்போல* வினாவுள்ளவர்களாக'' இருக்க வேண்டுமென்று இயேசுவானவர் சொல்லியிருக்கிறார் [மத். 10:16 அழுத்தம் கொடுக்கப் பட்டுள்ளது]. சாத்தானின் தந்திரங்களைக் குறித்துத் தான் அறியாதிருக்க வில்லை என்றும் [பார்க்க, 2 கொரி. 2:11], நாம் கிறிஸ்துவின் சிந்தையைப் பெற்றிருக்கிறோம் என்றும் [1 கொரி. 2:16] பவுல் அப்போஸ்தலன் சொல்லியிருக்கிறார்.

தேவன் சொல்லியிருப்பதைக் குறித்து ஏவாளிடம் கேட்பதின்மூலம் சாத்தான் தனது முதல் அக்கினியாஸ்திரத்தை விடுகிறான். அவள் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் இருக்கும்படி செய்வதற்கு ஏதாவது வாய்ப்பு இருக்கிறதா என்பதை அவளுடைய பதில் வெளிப்படுத்திவிடும். *தேவன் சொல்லியிருப்பதை விசுவாசித்துக் கீழ்ப்படிகிறவர்களை ஏமாற்றச் சாத்தானுக்கு வழியில்லை. எனவேதான் அவனுடைய செயல்தந்திரங்கள் தேவனுடைய வார்த்தைக்கு முரண்பாடானவைகளை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன.*

சாத்தான் அவளிடம் ''நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ'' என்று கேட்டான் [ஆதி. 3:1]. சாதாரணமாகப் பார்க்கும்போது இது குற்றமற்ற கேள்விபோலத் தோன்றலாம். ஆனாலும் சாத்தான் தந்திரத்தோடுதான் இதைக் கேட்கிறான்.

ஏவாள் அவனிடம் ''நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம்; ஆனாலும், தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து, தேவன்: நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார்'' என்று கூறினாள் [ஆதி. 3:2–3].

ஏவாள் கிட்டத்தட்ட சரியாகச் சொன்னாள். தேவன் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கக் கூடாது என்றுதான் சொல்லியிருந்தார், அந்த விருட்சத்தைத் *தொடக்கூடாது* என்று சொல்லியிருக்கவில்லை.

சாத்தான் அவளிடம் ''நீங்கள் சாகவே சாவதில்லை'' என்று அவளுக்குப் பதிலளித்தான். இது தேவன் சொல்லியிருப்பதற்கு நேரடியான முரண்பாடாகும். ஏவாள் அதை நேரடியாக நம்புவாள் என்பது சாத்தியமில்லை. எனவே சாத்தான் கொஞ்சம் உண்மையைச் சொல்லி தனது பொய்யைத் தேனில் குழைத்துக் கொடுக்கிறான். அவன் விழுங்குவதற்கு ஏற்றபடி எப்போதுமே இப்படித்தான் செய்கிறான். அவன் தொடர்ந்து ''நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்

படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார்'' என்று சொன்னான்.

சாத்தான் பொய் சொல்லியபிறகு, மூன்று உண்மையான காரியங்களைச் சொல்லியிருக்கிறான். சாத்தான் சொல்லியபடி ஆதாமும் ஏவாளும் விலக்கப்பட்ட கனியை உண்டவுடன் அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டன என்பதை நாம் அறிகிறோம் [பார்க்க, ஆதி. 3:7]. மேலும், பின்னர் தேவன்தாமே மனிதன் நன்மை தீமையை அறிந்ததின்மூலம் தம்மைப்போல ஆனான் என்று சொல்லியிருக்கிறார் [பார்க்க, ஆதி. 3:22]. சாத்தான் மக்களை ஏமாற்றும்படியாகப் பெரும்பாலும் உண்மையைப் பொய்யோடு கலந்து கொடுக்கிறான் என்பதைக் கவனியுங்கள்.

சாத்தான் தேவனுடைய குணாதிசயத்தை இழிவுபடுத்துவதையும் கவனியுங்கள். ஆதாமும் ஏவாளும் அவர்களுடைய சொந்த நலனுக்காகவும், சந்தோஷத்துக்காகவும் அந்தக் கனியைச் சாப்பிட வேண்டாம் என்று தேவன் விரும்பினார். ஆனால் நன்மையான ஒன்றைத் தேவன் அவர்களுக்குக் கொடுக்காமல் தடுத்துவிட்டார் என்ற எண்ணத்தை ஏற்படுத்தச் சாத்தான் முயன்றான். சாத்தானின் பெரும்பாலான பொய்கள் தேவனுடைய குணாதிசயத்தையும், சித்தத்தையும், செயல்நோக்கங்களையும் இழிவுபடுத்துகின்றன.

துரதிருஷ்டவசமாக, பூமியின் முதல் மனிதர்கள் ஒரு பொய்யை நம்பும்படி சத்தியத்தைப் புறக்கணித்தார்கள். அதற்கான பின்விளைவுகளை அவர்கள் அனுபவித்தார்கள். நவீன ஆவிக்குரிய யுத்தத்தின் எல்லா அம்சங்களும் இதில் இருப்பதைக் கவனியுங்கள்: உண்மையில் பொதியப்பட்ட ஒரு பொய்யே சாத்தானின் ஒரே ஆயுதமாக இருந்தது. தேவன் சொல்லியதையா அல்லது சாத்தான் சொல்லுவதையா இரண்டில் ஒன்றைத் தெரிந்துகொள்ளும் வாய்ப்பு மனிதருக்குக் கொடுக்கப்பட்டது. சத்தியத்தை விசுவாசித்திருந்தால் அது அவர்களுக்கு ''விசுவாசமென்னும் கேடகமாக'' இருந்திருக்கும். ஆனால் அவர்கள் அதை விசுவாசிக்கவில்லை.

### இயேசுவானவரின் ஆவிக்குரிய யுத்தம்

இயேசுவானவர் வனாந்தரத்தில் சோதிக்கப்பட்டபோது அவர் எப்படிச் சாத்தானை எதிர்கொண்டார் என்பதை நாம் வாசிக்கும்போது, சாத்தான் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் கடந்தபின்னரும் தனது செயல்முறைகளை மாற்றிக்கொள்ளவில்லை என்பதை உணர்கிறோம். சத்தியத்தை விசுவாசித்து அதற்குக் கீழ்ப்படிவதிலிருந்து அவரைத் தடுப்பது மட்டுமே தன் எதிரியைத் தோற்கடிக்க ஒரே வழி என்பதை உணர்ந்த அவன் தேவன் சொல்லியிருப்பதைத் தவறு என்று சொல்ல முயலுகிறான். *மறுபடியுமாகத் தேவனுடைய வார்த்தையே யுத்தத்தின் மையத்தில் இருக்கிறது.* சாத்தான் தனது பொய்களை எய்யும்போது, இயேசுவானவர் அதைச் சத்தியத்தினால்





முறியடித்தார். தேவன் சொல்லியிருப்பதை இயேசுவானவர் விசுவாசித்து, அதற்குக் கீழ்ப்படிந்தார். இதுவே வேதாகமரீதியான ஆவிக்குரிய யுத்தமாகும்.

ஆதாமும் ஏவாளும் எதிர்நோக்கிய அதே சூழ்நிலையை இயேசு எதிர்நோக்கியது மட்டுமின்றி, நாமும் எதிர்நோக்குகிறோம். தான் தேவனுக்குச் செவிகொடுப்பதா அல்லது சாத்தானுக்குச் செவிகொடுப்பதா என்பதை அவர் தீர்மானிக்க வேண்டியிருந்தது. இயேசுவானவர் தேவனுடைய வார்த்தையாகிய ஆவியின் பட்டயத்தைக் கொண்டு தமது ஆவிக்குரிய யுத்தத்தில் போரிட்டார். சாத்தானோடு ஆவிக்குரிய யுத்தத்திலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்ள முடியும் என்பதைப் பார்ப்போம்.

இயேசுவானவரின் இரண்டாவது சோதனையைக் குறித்து மத்தேயு இப்படிச் சொல்லுகிறார்:

> அப்பொழுது பிசாசு அவரைப் பரிசுத்த நகரத்திற்குக் கொண்டுபோய், தேவாலயத்து உப்பரிகையின் மேல் அவரை நிறுத்தி: நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக்குதியும்; ஏனெனில், தம்முடைய தூதர்களுக்கு உம்மைக்குறித்துக் கட்டளையிடுவார்; உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு, அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள் என்பதாய் எழுதியிருக்கிறது என்று சொன்னான். அதற்கு இயேசு: உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக என்றும் எழுதியிருக்கிறதே என்றார் [மத். 4:5–7].

இங்கேயும் தேவன் கூறியிருப்பதே மையமான காரியமாக இருப்பதைக் கவனியுங்கள். சாத்தான் 91ஆம் சங்கீதத்திலிருந்து மேற்கோளை எடுத்துச் சொன்னாலும், தேவன் நோக்கம் கொண்டிராத அர்த்தத்தை அதற்குக் கொடுத்தான்.

இயேசுவானவர் இதற்குப் பதிலாக, 91ஆம் சங்கீதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவனுடைய பாதுகாப்பைக் குறித்த வாக்குத்தத்தத்தைக் குறித்த சமநிலையான புரிந்துகொள்ளுதலைக் கொடுக்கும் வசனத்தை மேற்கோளாக எடுத்துச் சொல்லுகிறார். தேவன் நம்மைப் பாதுகாப்பார், ஆனால் நாம் மூடத்தனமாக அவரைப் பரீட்சை பார்ப்போமானால் அவர் அப்படிச் செய்ய மாட்டார்.

எனவேதான் நாம் வேதாகமத்தின் வசனங்களை அதன் எஞ்சிய பகுதியின் பின்னணியிலிருந்து எடுத்துப் பயன்படுத்துவதில் கவனமாக இருக்க வேண்டும். ஒவ்வொரு வேதவசனத்தையும் எஞ்சிய வேத வசனங்கள் சொல்லுவதோடு சமநிலைப்படுத்த வேண்டும்.

வேதவசனத்தைத் திரித்துக் கூறுவது சாத்தானின் ஆவிக்குரிய யுத்தத்தில் முக்கியமான தந்திரமாக இருக்கிறது. அவன் நவீன

ஆவிக்குரிய யுத்த இயக்கத்தில் சிக்கிக்கொண்டிருக்கும் பல கிறிஸ்தவர்களுக்கு எதிராக இந்தத் தந்திரத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறான். இதற்கு எடுத்துக்காட்டாக, ''அரண்களை நிர்மூலமாக்குவது'' என்ற வேதாகமச் சொற்றொடரை வானமண்டலத்திலுள்ள தீய ஆவிகளை வீழ்த்துவதற்கு குறித்த கருத்துக்கு ஆதரவாகப் பயன்படுத்துவதை நாம் குறிப்பிடலாம். ஏற்கெனவே நான் சுட்டிக் காட்டியபடி, இந்தக் குறிப்பிட்ட சொற்றொடரை அதன் பின்னணியோடு சேர்த்து நாம் வாசிப்போமானால், அது வானமண்டலத்தின் தீய ஆவிகளை வீழ்த்துவதைக் குறித்துச் சொல்லவில்லை என்பதை அறிந்துகொள்ளலாம். என்றாலும், நாம் அப்படி நினைக்கும்படி சாத்தான் விரும்புகிறான். இதன்மூலம் நாம் வானமண்டலத்திலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களும் எதிராகக் கூச்சல்போடுவதில் நமது நேரத்தை வீணாக்கும்படி அவன் செய்கிறான்.

இயேசுவானவரின் மூன்றாவது சோதனையைக் குறித்து நாம் இப்படி வாசிக்கிறோம்:

> மறுபடியும், பிசாசு அவரை மிகவும் உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய், உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து: நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்துகொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்று சொன்னான். அப்பொழுது இயேசு: அப்பாலே போ சாத்தானே; உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார் [மத். 4:8–10].

இது அதிகாரத்தைக் குறித்த சோதனையாகும். இயேசுவானவர் சாத்தானைத் தொழுதுகொண்டு, சாத்தானும் தனது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றியிருப்பானானால், இயேசுவானவர் இருளின் ராஜ்யத்தில் இரண்டாவது அதிகாரத்தையே பெற்றிருப்பார். சாத்தானுக்கு மட்டுமே இருந்த உலகளாவிய அதிகாரத்தின்படி அவர் இரட்சிக்கப்படாத ஒவ்வொரு மனிதனையும், ஒவ்வொரு தீய ஆவியையும் ஆளுகை செய்துகொண்டிருப்பார். இயேசுவானவர் இந்தச் சோதனைக்கு இடம் கொடுத்திருந்தால் என்ன நடந்திருக்கும் என்று நினைத்துப் பார்ப்பதே நம்மைக் கதிகலங்க வைக்கும்.

இயேசுவானவர் மறுபடியுமாக தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தையைக் கொண்டு சாத்தானின் ஆலோசனையை முறியடிப்பதைக் கவனியுங்கள். மூன்று சோதனைகள் ஒவ்வொன்றையும் இயேசுவானவர் ''எழுதியிருக்கிறது'' என்று சொல்லி முறியடித்தார். நாமும்கூட சாத்தானால் ஏமாற்றப்பட்டு, அவனுடைய கண்ணிகளில்





சிக்கிக்கொள்ளாமல் நம்மைக் காத்துக்கொள்ள வேண்டுமானால், தேவனுடைய வார்த்தையை அறிந்து, அதை விசுவாசிக்க வேண்டும். இதுவே ஆவிக்குரிய யுத்தமாகும்.

### போர்க்களம்

மக்களின் சிந்தையிலும், இருதயத்திலும் சிந்தனைகளை விதைக்கும் அதிகாரத்தை மட்டுமே சாத்தானும் அவனுடைய தூதர்களும் கொண்டிருக்கிறார்கள் [அதுவும்கூடத் தேவனால் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது, பார்க்க, 1 கொரி. 10:13]. இதைக் கருத்தில் கொண்டு கீழ்க்கண்ட வேதவசனங்களை வாசியுங்கள்:

> பேதுரு அவனை நோக்கி: அனனியாவே, *நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்துவைத்து, பரிசுத்த ஆவியினிடத்தில் பொய்சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன?* [அப். 5:3 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

> *சீமோனின் குமாரனாகிய யூதாஸ்காரியோத்து அவரைக் காட்டிக்கொடுக்கும்படி பிசாசானவன் அவன் இருதயத்தைத் தூண்டினபின்பு*, அவர்கள் போஜனம் பண்ணிக்கொண்டிருக்கையில்... [யோவான் 13:2 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

> ஆகிலும், ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே *சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து*, விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள் [1 தீமோ. 4:1 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

> ஆகிலும், *சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்ததுபோல*, உங்கள் மனதும் கிறிஸ்துவைப் பற்றிய *உண்மையினின்று விலகும்படி கெடுக்கப்படுமோவென்று* பயந்திருக்கிறேன் [2 கொரி. 11:3 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

> உபவாசத்திற்கும் ஜெபத்திற்கும் தடையிராதபடிக்கு இருவரும் சிலகாலம் பிரிந்திருக்க வேண்டுமென்று சம்மதித்தாலன்றி, ஒருவரை விட்டு ஒருவர் பிரியாதிருங்கள்; உங்களுக்கு விரதத்துவம் இல்லாமையால் *சாத்தான் உங்களைத் தூண்டிவிடாதபடிக்கு*, மறுபடியும் கூடி வாழுங்கள் [1 கொரி. 7:5 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

> ஆகையால், நான் இனிப் பொறுத்திருக்கக் கூடாமல், *எங்கள் வேலை வீணாய்ப் போகத் தக்கதாகச் சோதனைக்காரன் உங்களைச் சோதனைக்குட் படுத்தினதுண்டோவென்று*, உங்கள் விசுவாசத்தை அறியும்படிக்கு, அவனை அனுப்பினேன் (1 தெச. 3:5 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).

> தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, *இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்* (2 கொரி. 4:4 அழுத்தம் கொடுக்கப் பட்டுள்ளது).

> *உலகமனைத்தையும் மோசம்போக்குகிற* பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது; அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது, அதனோடேகூட அதைச்சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள் (வெளி. 12:9 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).

> நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்; உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்; அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷகொலைபாதகனாயிருக்கிறான்; *சத்தியம் அவனிடத்திலில்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலைநிற்கவில்லை; அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய் பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான்* (யோவான் 8:44 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).

நமது இருதயமும் சிந்தையுமே வேதாகமரீதியான ஆவிக்குரிய யுத்தத்தில் அடிப்படைப் போர்க்களங்கள் என்பதை இந்த வசனங்கள் உறுதிப்படுத்துகின்றன. சாத்தான் தீய ஆலோசனைகள், தவறான கருத்துக்கள், பொய்யான தத்துவங்கள், சோதனைகள், வெவ்வேறு பொய்கள் மூலம் நமது சித்தனைகளைத் தாக்குகிறான். தேவனுடைய வார்த்தையை அறிந்து, அதை விசுவாசித்து, அதன்படி செயல்படுவதே நமது தற்காப்பாகும்.

நீங்கள் சிந்திக்கும் ஒவ்வொரு சிந்தனையும் உங்களுக்குள்ளிருந்து துவக்க வேண்டும் என்ற அவசியமில்லை என்பதை நீங்கள் முதலில் புரிந்துகொள்ள வேண்டும். மக்களின் மனதில் தனது சிந்தனைகளைப் பதிய வைக்க சாத்தான் பல ஊடகங்களைப் பயன்படுத்துகிறான்.





செய்தித்தாள்கள், புத்தகங்கள், தொலைக்காட்சி, பத்திரிகைகள், வானொலி, நண்பர்கள் மற்றும் அண்டைவீட்டார், பிரசங்கிமார்களின் மூலமாகக் கூட அவன் தாக்கம் விளைவிக்க முயலுகிறான். பேதுரு அறியாமல் சாத்தான் அவரைத் தனக்காகப் பேச வைத்திருக்கிறான். இயேசுவானவர் மரிப்பது தேவனுடைய சித்தமல்ல என்று பேதுரு அவரிடம் சொல்லும்படி சாத்தான் தூண்டினான் (பார்க்க, மத். 16:23).

ஆனால் இடையில் மானிடர் எவரும் இல்லாமல் சாத்தானும் அவனுடைய தீய ஆவிகளும் மனிதருடைய மனதில் நேரடியான தாக்குதலும் தொடுக்க முடியும். எல்லாக் கிறிஸ்தவர்களும் சில வேளைகளில் இப்படிப்பட்ட தாக்குதல்களுக்கு உள்ளாகிறார்கள். அப்போதுதான் யுத்தம் துவங்குகிறது.

ஒரு அன்பான கிறிஸ்தவப் பெண்மணி ஒரு பிரச்சினைக்கு ஆலோசனை கொடுக்கும்படி என்னிடம் வந்தாள். அவள் ஜெபிக்கும் போதெல்லாம் தூஷண வார்த்தைகளும், தூஷண எண்ணங்களும் தனது சிந்தனையில் வருவதாகக் கூறினாள். அவள் எனது சபையில் அதிக அன்பும், தயவுமுள்ள, அதிக பயபக்தியுள்ள பெண்மணியாவாள். என்றாலும் இந்தப் பிரச்சினை அவளை வாட்டிவந்தது.

அந்தச் சிந்தனைகள் அவளுக்குள்ளிருந்து உருவாகவில்லை, சாத்தானே அவளைத் தாக்கி அவளுடைய ஜெப வாழ்க்கையைத் தோற்கடிக்க முயலுகிறான் என்று அவளிடம் நான் விளக்கிச் சொன்னேன். அப்போது இந்தச் சிந்தனைகள் மறுபடியும் வருமோ என்ற அச்சத்தில் தான் தினந்தோறும் ஜெபிப்பதை நிறுத்திவிட்டதாக அவள் என்னிடம் சொன்னாள். சாத்தான் வெற்றிபெற்றிருக்கிறான்.

எனவே மறுபடியுமாக ஜெபிக்கத் துவங்கும்படி நான் அவளிடம் கூறினேன். தூஷணமான வார்த்தைகள் மனதில் வரும்போது தேவனுடைய வார்த்தையின் சத்தியத்தினால் அதைப் பதிலுக்குத் தாக்கும்படி நான் சொன்னேன். ஒரு சிந்தனை அவளிடம் ''இயேசு வெறும் ––––'' என்று சொல்லுமானால், அவள் உடனே ''இல்லை, அவர் தேவனுடைய குமாரன்'' என்று சொல்ல வேண்டும். ஒரு கெட்ட வார்த்தை எண்ணத்தில் வருமானால், அதற்குப் பதிலாக அவள் இயேசுவைத் துதிக்கும் வார்த்தையை நினைக்க வேண்டும் என்றெல்லாம் நான் ஆலோசனை கொடுத்தேன்.

தவறான எண்ணங்கள் வந்துவிடுமோ என்ற பயத்தின்மூலம் உண்மையில் அவள் தவறான எண்ணங்களையே வரவழைக்கிறாள் என்று நான் அவளிடம் சொன்னேன். ஏனென்றால் பயம் விசுவாசத்துக்கு எதிரானதாக பிசாசை விசுவாசிப்பதாக இருக்கிறது. ஒன்றைக்குறித்து நாம் எண்ணாமலிருக்க முயல வேண்டுமானால், எண்ணாமலிருப்பதற்காக அதை எண்ண வேண்டியிருக்கிறது.

எடுத்துக்காட்டாக, நான் உங்களிடம் ''உங்கள் வலதுகையைக் குறித்து நினைக்காதீர்கள்'' என்று சொல்லுவேன் என்றால், எனக்குக் கீழ்ப்படிய முயலும்போது உடனடியாக நீங்கள் உங்கள் வலதுகையைப் பற்றி நினைப்பீர்கள். நீங்கள் எவ்வளவு அதிகமாக முயலுகிறீர்களோ அவ்வளவாக நிலைமை மோசமாகிவிடுகிறது. நீங்கள் உங்கள் வலது கையைப்பற்றி நினைக்காமல் இருக்க வேண்டுமானால், தொடர்ந்து வேறு ஒன்றைப் பற்றி நினைத்துக்கொண்டிருக்க வேண்டும். எடுத்துக் காட்டாக, உங்கள் ஷூக்களைக் குறிப்பிடலாம். நீங்கள் உங்கள் ஷூக்களைப்பற்றி நினைத்துக்கொண்டிருப்பீர்களானால், உங்கள் வலது கையைப் பற்றி நினைக்க மாட்டீர்கள்.

வேதாகமம் நமக்குக் கட்டளையிடுகிறபடி ''பயப்படாதிருங்கள்'' என்ற ஆலோசனையை நான் அந்தப் பெண்ணுக்குக் கொடுத்தேன். தேவனுடைய வார்த்தைக்கு விரோதமான எண்ணம் வரும்போதெல்லாம் அவள் தேவனுடைய வார்த்தைக்கு ஒத்துப்போகும் எண்ணத்தைக் கொண்டு அதை அகற்ற வேண்டும்.

எனது ஆலோசனையைப் பின்பற்றிய பிறகு ஒருசில தடவைகள் அவள் தனது ஜெப வேளையில் தாக்கப்பட்டாலும், இறுதியில் முழு வெற்றியைப் பெற்றாள். அவள் வேதாகமரீதியான ஆவிக்குரிய யுத்தத்தில் வெற்றிபெற்றாள்.

பல சபைகளில் இதைக் குறித்து ஆய்வு மேற்கொண்டபோது பலருக்கும் இதே பிரச்சினை இருப்பதை நான் கண்டுபிடித்தேன். நான் ஆய்வுசெய்த கிறிஸ்தவர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் தாங்கள் ஜெபிக்கும்போது மோசமான சிந்தனைகளினால் தாக்கப்பட்டிருப்பதாகக் கூறினார்கள். சாத்தான் செய்ததையே செய்கிறான்.

### நீங்கள் எதற்குச் செவிகொடுக்கிறீர்கள் என்பதில் கவனமாக இருங்கள்

சாத்தானும் அவனுடைய தீய ஆவிகளும் நமது மனதைத் தாக்குவதை நம்மால் தடுக்க முடியாது. ஆனால் *அவர்களுடைய* சிந்தனைகள் *நம்முடைய* சிந்தனைகளாக ஆக நாம் அனுமதிக்காமல் இருக்க முடியும். அதாவது, நாம் சாத்தானின் ஆலோசனைகளையும், கருத்துக்களையும் எடுத்துக்கொண்டு அவைகளைக் குறித்துச் சிந்தித்துக் கொண்டிருக்கக் கூடாது. ''உங்கள் தலைக்கு மேலாகப் பறவைகள் பறப்பதை உங்களால் தடுக்க முடியாது. ஆனால் அவை உங்கள் தலையில் கூடுகட்ட அனுமதிக்காமல் இருக்க முடியும்'' என்று யாரோ ஒருவர் சொல்லியிருக்கிறார்.

மேலும், நமது கட்டுப்பாட்டுக்குள்ளாக தேவனுக்கு விரோதமான தாக்கங்கள் நமது மனதைத் தாக்குவதற்கு நான் இடம்கொடுக்க





கூடாது. நாம் ஒரு மணி நேரம் தொலைக்காட்சிக்கு முன்பாக உட்கார்ந்திருக்கும்போதும், பத்திரிகைகளை வாசிக்கும்போதும் சாத்தானுக்கடுத்த சிந்தனைகள் நம்மைத் தாக்க நாம் இடம் கொடுக்கிறோம். விதைப்பவனையும் நிலங்களையும் குறித்த தமது உவமைக் கதையைச் சொல்லியவுடன் இயேசுவானவர் ''நீங்கள் கேட்கிறதற்குக் கவனியுங்கள்'' என்று சொல்லியிருக்கிறார் [மாற்கு 4:24]. சாத்தான் நமது இருதயத்திலும் மனதிலும் தனது ''விதைகளை'' விதைக்கும்படி அனுமதித்து, பொய்களுக்குச் செவிகொடுப்பதினால் ஏற்படும் அழிவை அவர் அறிந்திருக்கிறார். இவை ''முட்களாக'' வளர்ந்து நமது வாழ்க்கையிலுள்ள தேவனுடைய வார்த்தையை நெருக்கிப் போட்டுவிடும் [பார்க்க, மாற்கு 4:7, 18–19].

### ஆவிக்குரிய யுத்தத்தைக் குறித்துப் பேதுரு

அப்போஸ்தலனாகிய பேதுரு மெய்யான, வேதாகமரீதியான ஆவிக்குரிய யுத்தத்தைக் குறித்து அறிந்திருந்தார். அவர் தனது நிருபத்தில் எந்த இடத்திலும் பட்டணங்களுக்கு மேலாக துரைத்தனங் களையும் அதிகாரங்களையும் வீழ்த்திப்போடும்படி சொல்லவில்லை. என்றாலும், தங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் கிறிஸ்தவர்கள் சாத்தானின் தாக்குதலை எதிர்த்து நிற்க வேண்டும் என்றும், எப்படி எதிர்க்க வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்:

> தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்; உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்திலே அப்படிப் பட்ட பாடுகள் நிறைவேறிவருகிறதென்று அறிந்திருக் கிறீர்களே [1 பேதுரு 5:8–9].

முதலில் நமது இருப்பு எதிர்த்துத் தாக்குதல் அல்ல, தற்காப்பே என்று பேதுரு சொல்லுவதைக் கவனியுங்கள். நாம் அல்ல, சாத்தானே சுற்றித் திரிகிறான். அவனே நம்மைத் தேடுகிறான், நாம் அவனைத் தேட வில்லை. தாக்குவது அல்ல, எதிர்த்து நிற்பதே நம்முடைய வேலையாகும்.

இரண்டாவதாக, சாத்தான் சிங்கத்தைப்போல எவனை *விழுங்க லாமோ* என்று சுற்றித் திரிகிறான் என்பதைக் கவனியுங்கள். அவனால் எப்படிக் கிறிஸ்தவர்களை விழுங்க முடியும்? ஒரு சிங்கத்தைப் போல சாத்தான் அவர்களுடைய மாமிசத்தை விழுங்குவான் என்று பேதுரு சொல்லுகிறாரா? நிச்சயமாக இல்லை. ஒரு கிறிஸ்தவன் தனது விசுவாசத்தை அழித்துப்போடும்படியாகப் பொய்யை நம்பச் செய்வதின் மூலம் சாத்தான் இதைச் செய்கிறான்.

மூன்றாவதாக, நமது விசுவாசத்தின் மூலமாக அவனை எதிர்த்து நிற்க வேண்டும் என்று பேதுரு சொல்லுவதைக் கவனியுங்கள். நமது போராட்டம் சரீரப்பிரகாரமானது அல்ல. காற்றில் நமது கைமுட்டியை உயர்த்துவதின்மூலம் நம்மால் சாத்தானோடு சண்டைபோட முடியாது. அவன் பொய்களினால் நம்மைத் தாக்குகிறான். நாம் தேவனுடைய வார்த்தையின்மீதான விசுவாசத்தில் உறுதியாக நிற்பதின்மூலம் அதை எதிர்க்கிறோம். இதுவே வேதாகமரீதியான ஆவிக்குரிய யுத்தமாகும்.

பேதுரு எந்தக் கிறிஸ்தவர்களுக்காக இந்த வார்த்தைகளை எழுதினாரோ அவர்கள் கடுமையான துன்புறுத்தலை அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். துன்புறுத்தல்களின்மூலம் தங்கள் விசுவாசத்தை விட்டுவிடும்படி அவர்கள் சோதிக்கப்பட்டார்கள். நாம் துன்பமான சூழ்நிலைகளை எதிர்நோக்கும்போதுதான் சாத்தான் அடிக்கடி சந்தேகங்கள் மற்றும் பொய்களின்மூலம் நம்மைத் தாக்குகிறான். இதுவே பவுல் குறிப்பிடும் ''நீங்கு நாளாகும்.'' இந்த வேளைகளில் நாம் ''பிசாசின் தந்திரங்களோடு *எதிர்த்துநிற்கத்* திராணியுள்ளவர் களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ள'' வேண்டும் [எபே. 6:11 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

### ஆவிக்குரிய யுத்தத்தைக் குறித்து யாக்கோபு

அப்போஸ்தலனாகிய யாக்கோபும் தனது நிருபத்தில் ஆவிக்குரிய யுத்தத்தைக் குறித்துக் குறிப்பிட்டிருக்கிறார். அவர் கிறிஸ்தவர்களிடம் அவர்களுடைய ஜெபம் தூதர்களிடையே நடக்கும் யுத்தங்களின் முடிவைத் தீர்மானிக்கும் என்று சொல்லியிருக்கிறாரா? இல்லை. பட்டணங்களுக்கு மேலாக இச்சை மற்றும் குடிகார ஆவிகளை இழுத்து வீழ்த்த வேண்டும் என்று அவர் சொல்லியிருக்கிறாரா? இல்லை. துவக்கத்திலிருந்தே ஒரு பட்டணத்தில் எத்தகைய தீய ஆவிகள் இருக்கின்றன என்பதை அறிய அந்தப் பட்டணத்தின் வரலாற்றை ஆய்வு செய்ய வேண்டும் என்று அவர் சொல்லியிருக்கிறாரா? இல்லை.

யாக்கோபு வேதாகமரீதியான ஆவிக்குரிய யுத்தத்தில் நம்பிக்கை வைத்திருக்கிறவராக இருந்தபடியால் இப்படி எழுதியிருக்கிறார்:

> ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான் [யாக். 4:7].

மறுபடியுமாக, கிறிஸ்தவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டிய நிலை தற்காப்பே என்பதைக் கவனியுங்கள். நாம் தாக்கக்கூடாது, எதிர்த்து நிற்க வேண்டும். அப்படி நாம் செய்யும்போது சாத்தான் ஓடிப்போவான் என்ற வாக்குத்தத்தத்தை யாக்கோபு கொடுத்திருக்கிறார். சாத்தானின் பொய்களை நம்பவோ, அவனுடைய ஆலோசனைகளைப் பின்பற்றவோ அல்லது அவனுடைய சோதனைகளுக்கு இடம்கொடுக்கவோ





முன்வராத ஒரு கிறிஸ்தவனைச் சுற்றி அவன் இருப்பதற்கு எந்தவித முகாந்தரமும் இல்லையே?

முதலில் நாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்று யாக்கோபு சொல்லுவதையும் கவனியுங்கள். நாம் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவதின்மூலம் அவருக்குக் கீழ்ப்படிகிறோம். நாம் சாத்தானை எதிர்த்து நிற்பது தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவதையே சார்ந்திருக்கிறது.

### ஆவிக்குரிய யுத்தம் குறித்து யோவான்

அப்போஸ்தலனாகிய யோவான் தனது முதல் நிருபத்தில் ஆவிக்குரிய யுத்தத்தைக் குறித்து எழுதியிருக்கிறார். பிசாசின் அரண்களை வீழ்த்தும்படி வானமண்டலங்களுக்குச் செல்ல வேண்டும் என்று அவர் எழுதியிருக்கிறாரா? இல்லை. சில வேளைகளில் கோபப்படும் கிறிஸ்தவர்களிடமிருந்து கோபத்தின் ஆவியை விரட்டுவது எப்படி என்று அவர் எழுதியிருக்கிறாரா? இல்லை.

யோவானும் பேதுருவையும், யாக்கோபையும்போல வேதாகம ரீதியான ஆவிக்குரிய யுத்தத்தில் நம்பிக்கை வைத்திருந்தார். அது குறித்த போதனைகளையே அவர் கொடுக்கிறார்:

> பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத் தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள். தேவஆவியை நீங்கள் எதினாலே அறியலாமென்றால்: மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கை பண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக் கிறது. மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல; வருமென்று நீங்கள் கேள்விப்பட்ட அந்திக்கிறிஸ்துவினுடைய ஆவி அதுவே, அது இப்பொழுதும் உலகத்தில் இருக்கிறது. பிள்ளைகளே, நீங்கள் தேவனால் உண்டாயிருந்து, அவர்களை ஜெயித்தீர்கள்; ஏனெனில் உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர். அவர்கள் உலகத்துக்குரியவர்கள், ஆகையால் உலகத்துக்குரிய வைகளைப் பேசுகிறார்கள், உலகமும் அவர்களுக்குச் செவிகொடுக்கும். நாங்கள் தேவனால் உண்டான வர்கள்; தேவனை அறிந்தவன் எங்களுக்குச் செவிகொடுக்கிறான்; தேவனால் உண்டாயிராதவன் எங்களுக்குச் செவிகொடுக்கிறதில்லை; இதினாலே

சத்திய ஆவி இன்னதென்றும், வஞ்சகஆவி இன்னதென்றும் அறிந்திருக்கிறோம் [1 யோவான் 4:1–6].

இந்த வசனங்களில் யோவானின் முழுப் போதனையும் சாத்தானின் பொய்களையும், தேவனுடைய சத்தியத்தையும் குறித்தே இருக்கிறது என்பதைக் கவனியுங்கள். ஆவிகள் தேவனிடமிருந்து வந்தவையா, அவை சத்தியத்தைச் சொல்லுகின்றனவா என்பதை நாம் சோதித்தறிய வேண்டும். இயேசுகிறிஸ்து மாம்சத்தில் வந்தவர் என்பதைத் தீய ஆவிகள் ஒப்புக்கொள்ளுவதில்லை. அவை பொய்யர்களாக இருக்கின்றன.

நாம் தீய ஆவிகளை ஜெயித்திருக்கிறோம் என்றும் யோவான் சொல்லியிருக்கிறார். அதாவது, ஒளியின் ராஜ்யத்தில் இருக்கும் நாம் இனிமேலும் அவைகளுடைய ஆளுகைக்கு அடிமைப்பட்டிருக்க வில்லை. பெரியவரான இயேசு நம்மில் வாசம்பண்ணுகிறார். எவர்களில் கிறிஸ்து வாசம்பண்ணுகிறாரோ அவர்கள் பிசாசுகளைக் கண்டு பயப்படக் கூடாது.

கிறிஸ்துவைப் பின்பற்றும் நாம் தீய ஆவிகளின் பொய்களுக்குச் செவிகொடுக்கக் கூடாது. தேவனை அறிந்தவர்கள் நமக்குச் செவி கொடுக்கிறார்கள், ஏனென்றால் சத்தியம் நம்மிடத்தில் இருக்கிறது, தேவனுடைய வார்த்தை நம்மிடத்தில் இருக்கிறது.

தனது பொய்களை நம்பும்படி மக்களைத் தூண்டுவதே சாத்தானின் செயல்தந்திரமாகும். நாம் சத்தியத்தை அறிந்து, அதை விசுவாசிப்போ மானால் சாத்தானால் நம்மைத் தோற்கடிக்க முடியாது. இதுவே வேதாகமரீதியான ஆவிக்குரிய யுத்தமாகும்.

## விசுவாசமே திறவுகோலாகும்

தேவனுடைய வார்த்தையை அறிந்திருப்பது ஆவிக்குரிய யுத்தத்தில் வெற்றிபெறப் போதுமானது அல்ல. தேவன் சொல்லியிருப் பதை *மெய்யாகவே விசுவாசிப்பதே* திறவுகோலாகும். பிசாசை எதிர்த்து நிற்பதிலும், ஆவிகளை விரட்டுவதிலும் இதுவே உண்மையாகும். எடுத்துக்காட்டாக, நாம் ஏற்கெனவே பார்த்தபடி, இயேசுவானவர் தமது பன்னிரு சீஷர்களுக்கும் அசுத்த ஆவியைத் துரத்தும்படி அதிகாரம் கொடுத்தார் [மத். 10:1]. ஆனால் ஏழு அதிகாரங்கள் கழித்து அவர்களால் சந்திரரோகியாக இருந்த, பிசாசுபிடித்த ஒரு சிறுவனைக் குணமளிக்க முடியாமல் போகிறது.[96] அவர்களுடைய தோல்வியைக் குறித்து அறிந்தபோது இயேசு இப்படிச் சொல்லி வருத்தப்பட்டார்:

[96] சந்திரரோகியாக இருப்பவர்கள் எல்லோருக்குள்ளும் பிசாசு இருக்கிறது என்ற முடிவுக்கு நாம் வராமல் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.





இயேசு பிரதியுத்தரமாக: *விசுவாசமில்லாத* மாறுபாடுள்ள சந்ததியே, எதுவரைக்கும் நான் உங்களோடு இருப்பேன்? எதுவரைக்கும் உங்களிடத்தில் பொறுமை யாய் இருப்பேன்? [மத். 17:17 அழுத்தம் கொடுக்கப் பட்டுள்ளது].

அவர்களுடைய அவிசுவாசத்தைக் குறித்தே இயேசுவானவர் புலம்பினார். மேலும், தங்களால் ஏன் அந்தப் பிசாசை விரட்டமுடியாமல் போய்விட்டது என்று அவர்கள் பின்னால் அவரிடம் கேட்டபோதும் அவர் ''உங்கள் அவிசுவாசத்தினாலேதான்'' என்று பதிலளித்தார் [மத். 17:20]. இப்படியாக அவர்கள் பிசாசுகளை விரட்டுவதற்கான அதிகாரத்தைப் பெற்றிருந்தாலும், அவர்களுடைய விசுவாசத்துக்கு அப்பாற்பட்டு அது செயல்படவில்லை என்பதைக் காண்கிறோம்.

பிசாசுகளை விரட்டுவதிலும், சாத்தானை எதிர்த்துநிற்பதிலும் வெற்றி தேவனுடைய வார்த்தையின்மேல் நாம் கொண்டிருக்கும் விசுவாசத்தைச் சார்ந்திருக்கிறது. தேவன் சொல்லியிருப்பதை நாம் மெய்யாகவே விசுவாசிப்போமானால், அதற்கேற்றபடி நாம் பேசுவோம், செயல்படுவோம். தங்களுக்குப் பயந்து ஓடுகிறவர்களை நாய்கள் துரத்து கின்றன. சாத்தானும் அப்படியே இருக்கிறான். நீங்கள் ஓடுவீர்களானால் சாத்தான் உங்களைத் துரத்துவான். ஆனால் உங்கள் விசுவாசத்தில் நீங்கள் உறுதியாக நிற்பீர்களானால், சாத்தான் உங்களைவிட்டு ஓடிப்போவான் [பார்க்க, யாக். 4:7].

பார்க்கும் எல்லோருக்கும் அப்போஸ்தலரின் விசுவாசக் குறைவு தெளிவாகத் தெரிந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. அந்தச் சிறுவனைப் பிசாசிடமிருந்து விடுவிக்க அவர்கள் முயன்று, தோற்றுப் போனார்கள். இயேசுவானவருக்கு முன்பாக ''அந்த ஆவி அவனைக் கீழே தள்ளி'' [லூக்கா 9:42] அலைக்கழித்து ''அவன் தரையிலே விழுந்து, நுரைதள்ளிப் புரளும்படியாகச்'' செய்ததுபோல [மாற்கு 9:20] சீஷர் களுக்கு முன்பாகவும் அப்படியே செய்திருந்தால் அவர்களுடைய விசுவாசம் பயமாக மாறிவிட்டிருக்கும். தாங்கள் கண்டதைக் கண்டு பயந்து, அவர்கள் செயல்பட முடியாமல் போயிருக்கலாம்.

என்றாலும், விசுவாசத்தைக் கொண்டிருக்கும் ஒருவர் தான் காண்பதைக் கொண்டு அசைக்கப்படுவதில்லை. தேவன் சொல்லி யிருப்பதைக் கொண்டே அவர் அசைக்கப்படுகிறார். '' நாம் *தரிசித்து நடவாமல்*, விசுவாசித்து நடக்கிறோம்'' [2 கொரி. 5:7 அழுத்தம் கொடுக்கப் பட்டுள்ளது]. தேவனால் பொய்சொல்ல முடியாது [பார்க்க, தீத்து 1:2]. எனவே நமது சூழ்நிலைகள் தேவன் சொல்லியிருப்பதற்கு முரண்பாடாக இருப்பதுபோலத் தோன்றினாலும், நாம் விசுவாசத்தில் உறுதியாக இருக்க வேண்டும்.

ஒருசில கணங்களுக்குள்ளாக இயேசுவானவர் அந்தப் பையனை விடுவித்தார் என்பதைக் கவனியுங்கள். அவர் விசுவாசத்தின்மூலம் அதைச் செய்தார். அவர் ''விடுதலைக்கான வகுப்பை'' நடத்துவதில் தமது நேரத்தை வீணாக்கவில்லை. தேவனால் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தில் விசுவாசம் வைத்திருக்கிறவர்களுக்குப் பிசாசுகளை விரட்ட மணிக்கணக்கான நேரம் தேவைப்படுவதில்லை.

மேலும் இயேசுவானவர் அந்தப் பிசாசை நோக்கிக் கூச்சல் போட்டதாகக் குறிப்பிடப்படவில்லை. விசுவாசத்தோடு இருப்பவர்கள் கூச்சல்போடத் தேவையில்லை. அந்தப் பிசாசை வெளியேறும்படி இயேசுவானவர் மறுபடியும் மறுபடியுமாகக் கட்டளையிடவும் இல்லை. ஒரு கட்டளை போதுமானது. இரண்டாவது முறை கட்டளையிடுவது சந்தேகம் கொண்டிருப்பதை ஒப்புக்கொள்ளுவதாக ஆகிவிடும்.

**சுருக்கம்**

சீஷர்களை உருவாக்கும் ஊழியர் தனது முன்மாதிரியின் மூலமாகவும், தனது வார்த்தைகளின் மூலமாகவும் ஆவிக்குரிய யுத்தத்தைக் குறித்துப் போதிக்கிறார். தனது சீஷர்கள் சாத்தானின் தந்திரங்களை உறுதியாக எதிர்த்து நிற்கும்படியாகவும், கிறிஸ்துவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்படியாகவும் அவர் இப்படிச் செய்கிறார். தனது சீஷர்கள் இப்போது காணப்படும் வேதாகமரீதியல்லாத ஆவிக்குரிய யுத்தத்தின் ''சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலத்த காற்றைப்'' பின்பற்றும்படி அவர்களை வழிநடத்துவதில்லை. இப்படிப்பட்ட செயல்முறைகளைப் பின்பற்றுகிறவர்கள் தாங்கள் யாரை ஜெயிக்கப்போவதாகச் சொல்லுகிறார்களோ அந்தச் சாத்தானால் உண்மையில் ஏமாற்றப்பட்டு, தவறான பார்வையைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அவர் அறிந்திருக்கிறார்.



# 32

# உக்கிராணத்துவம்

மலைப்பிரசங்கத்தைக் குறித்த அத்தியாயத்தில் நாம் இயேசுவானவர் தமது சீஷர்களுக்குக் கொடுத்த உக்கிராணத்துவத்தைக் குறித்த போதனையைப் பற்றி ஓரளவு பார்த்தோம். அவர் அவர்களிடம் பூமியிலே பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்காமல் பரலோகத்தில் சேர்த்து வைக்கும்படி கூறினார். தாற்காலிகமான பொக்கிஷங்களைச் சேர்த்து வைப்பவர்களின் மூடத்தனத்தை அவர் சுட்டிக்காட்டியது மட்டுமின்றி, அவர்களுடைய இருதயத்திலுள்ள அந்தகாரத்தையும் அவர் சுட்டிக் காட்டினார் (பார்க்க, மத். 6:19—24).

பூமியிலே பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கிறவர்களுக்குப் பணமே கடவுளாக இருக்கிறது. ஏனென்றால் அவர்கள் அதைச் சேவிக்கிறார்கள், அது அவர்களுடைய வாழ்க்கையை ஆளுகைசெய்கிறது. தேவனுக்கும் பணத்துக்கும் சேவைசெய்வது இயலாத காரியம் என்று இயேசுவானவர் அறிவித்தார். தேவனே நமது மெய்யான எஜமானராக இருக்கிறபடியால், அவர் நமது பணத்துக்கும் எஜமானராக இருக்கிறார் என்று அவர் சுட்டிக்காட்டினார். *வேறு எதையும்விடப் பணமே மக்களின் இருதயங்களைக் கைப்பற்றத் தேவனோடு போட்டி போடுகிறது*. நமது சொந்த உடைமைகளை நாம் விடாவிட்டால், நாம் அவருக்குச் சீஷராக இருக்க முடியாது என்று இயேசுவானவர் போதித்ததில் எந்தவித ஐயமும் இல்லை (பார்க்க, லூக்கா 14:33). கிறிஸ்துவின் சீஷர்களுக்கு எதுவும் சொந்தமாக இருப்பதில்லை. அவர்கள் தேவனுக்குச் சொந்த மானவைகளுக்கு உக்கிராணிகளாக இருக்கிறார்கள். தேவன் *தமது* பணத்தின்மூலம் காரியங்களைச் செய்யவும், *தமது* குணாதிசயத்தைப் பிரதிபலிக்கவும், *தமது* ராஜ்யத்தை விரிவுபடுத்தவும் விரும்புகிறார்.

இயேசுவானவர் உக்கிராணத்துவத்தைக் குறித்து அதிகமாகச் சொல்லியிருந்தாலும் அவரைப் பின்பற்றுவதாகச் சொல்லிக்கொள்ளும் பலரால் அவருடைய வார்த்தைகள் புறக்கணிக்கப்படுகின்றன.